தமிழரசு

16- 6 -1989 ரூ. 1




காயிதே மில்லத்
தோற்றம்: 5.6.1896
மறைவு : 4.4.1972

# ஐந்தாவது ஊதியக் குழுவின்
# பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள
# முடிவுகள் குறித்த
# முதலமைச்சரின் அறிக்கை



எங்களது தேர்தல் அறிக்கையில் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக மாநில அரசு அலுவலர்களின் ஊதியத்தைச் சமப்படுத்த வேண்டும் என்பது எங்களது கொள்கை என்றும், ஊதியக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து இந்தக் கொள்கையை நிறைவேற்ற வழிவகை செய்வோம் என்றும் அறிவித்திருந்தோம். 1989-90 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய-மாநில அரசு அலுவலர்களின் ஊதிய விகிதம் சமநிலையாக இருக்க வேண்டுமென்பதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட இவ்வரசு, இதற்கெனக் குடியரசுத் தலைவர் ஆட்சியில் நியமிக்கப்பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையைத் தாமத


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல-ஆனி 2

மலர்: 19 இதழ்: 24

16-6-1989

மின்றிப் பெற்று, அரசு அலுவலர் ஆசிரியர் கோரிக்கை நிறைவேறும் வகையில் முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தேன். மேலும் இந்த முடிவு 1.6.88 முதல் முன் தேதியிட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்றும் உறுதி அளித்திருந்தேன்.

முன்னாள் நீதிபதி திரு ஜி. ராமானுஜம் அவர்கள் தலைமையில் அமைந்த ஐந்தாவது ஊதியக் குழு தனது அறிக்கையினை மே மாதம் 16 ஆம் தேதி அரசுக்கு அளித்தது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நன்கு பரிசீலனை செய்த இவ்வரசு முழு நேர அரசு அலுவலர்களாகவும், பகுதி நேர அரசு அலுவலர்களாகவும் உள்ள 11.3 இலட்சம் பேருக்கு, கீழ்க்கண்ட பயன்களை அறிவிக்கின்றது.

**அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் 11 இலட்சம் பேருக்கு ரூ.400 கோடி ஊதிய உயர்வு**

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள விவரங்கள் பின் வருமாறு:-

1. **கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசு அலுவலர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழு மத்திய அரசு ஊதியத்திற்குச் சமமாகச் செய்துள்ள பரிந்துரைகளை அரசு கீழ்க்கண்ட இனங்களில் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது.**

| வரிசை என் | பதவியின் பெயர் | தற்போதுள்ள ஊதிய விகிதம் | ஊதியக்குழு பரிந்துரை செய்துள்ள ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| | | ரூபாய் | ரூபாய் |
| 1. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் பணிபுரியும் சமையல்காரர்கள் | 350—550 | 750—940 |
| 2. | அலுவலக உதவியாளர் | 450—720 | 750—940 |
| 3. | பதிவேடு எழுத்தர் | 475—775 | 775—1025 |
| 4. | காவலர் நிலை—2 | 505—845 | 825—1200 |
| 5. | காவலர் நிலை—1 | 555—970 | 950—1500 |
| 6. | ஓட்டுநர் | 610—1075 | 950—1500 |
| 7. | அமைச்சுப்பணி உதவியாளர் | 705—1230 | 1200—2040 |
| 8. | கண்காணிப்பாளர் | 905—1545 | 1600—2660 |
| 9. | இடைநிலை ஆசிரியர் | 610—1075 | 1200—2040 |
| 10. | பட்டதாரி ஆசிரியர் | 780—1385 | 1400—2600 |
| 11. | மேல்நிலைப்பட்டதாரி ஆசிரியர் | 1160—1950 | 1640—2900 |
| 12. | துணை வட்டாட்சியர் | 905—1545 | 1600—2660 |
| 13. | துணை மாவட்ட ஆட்சியர் | 1340—2435 | 2200—4000 |
| 14. | தலைமைக் காவலர் | 705—1230 | 975—1660 |
| 15. | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் | 1340—2435 | 2200—4000 |
| 16. | பொது உதவி அறுவை மருத்துவர் | 1340—2435 | 2200—4000 |
| 17. | பொது அறுவை மருத்துவர் விரிவுரையாளர் (சிகிச்சை சாராப்பிரிவு) | 1800—2900 | 3000—4500 |
| 18. | உதவிப் பேராசிரியர் (மருத்துவம்) | 1575—2685 | 2500—4200 |
| 19. | செவிலியர் | 780—1385 | 1400—2600 |
| 20. | மருந்தாளுநர் | 705—1230 | 1350—2200 |
| 21. | கால்நடை உதவி மருத்துவர் | 1160—1950 | 2000—3500 |
| 22. | வேளாண்மை அலுவலர் | 1160—1950 | 1640—2900 |
| 23. | துணை வேளாண்மை அலுவலர் | 1045—1775 | 1600—2660 |
| 24. | இளநிலைப் பொறியாளர் | 1045—1775 | 1400—2600 |
| 25. | வரைவாளர் நிலை—2 | 905—1545 | 1400—2600 |
| 26. | உதவிப் பொறியாளர்/வரைவாளர் நிலை—1 | 1160—1950 | 1640—2900 |
| 27. | உதவிச் செயற்பொறியாளர் | 1340—2435 | 2200—4000 |
| 28. | செயற் பொறியாளர் | 1800—2900 | 3000—4500 |
| 29. | கூட்டுறவு சார்நிலைப் பதிவாளர் | 1045—1775 | 1640—2900 |
| 30. | மாவட்ட முனிசிப் மற்றும் மாஜிஸ்ட்ரேட் | 1575—2685 | 2500—4200 |
| 31. | தலைமைச் செயலக உதவியாளர் | 610—1075 | 1100—1660 |
| 32. | தலைமைச் செயலக உதவிப் பிரிவு அலுவலர் | 780—1385 | 1400—2600 |

2. **தற்போது நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்/மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம் வாங்கக் கூடியவர்களாக 2.8 இலட்சம் பேர் இருக்கின்றனர். இதில் சத்துணவு அமைப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் கிராம ஊழியர்கள் போன்றோர் அடங்குவர். அவர்களுக்குக் குறைந்த பட்ச உயர்வு ரூ.20 லிருந்து அதிகப்பட்ச அளவாக ரூ.100 வரை ஊதிய உயர்வு அளிக்கப்படுகின்றது.**

**ரூ.284 முதல் 1200 வரை அதிகம் கிடைக்கும்**

40 ஆண்டு கோரிக்கை முதல்வர் கலைஞர் பதவியேற்ற 4 மாதங்களிலேயே நிறைவேற்றப் பட்டது.

3) பயணப்படிச் சலுகைகள், நிர்ணயிக்கப்பட்ட பயணப்படிச் சலுகைகள், ஊர்திப்படி இவை குறித்த குழுவின் பரிந்துரைகள் அப்படியே ஏற்கப் பட்டுள்ளன.

4) அரசு அலுவலர்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கான சிறப்புச் சலுகையாக மாதம் ஒன்றிற்கு ஊதியத்தில் 5 விழுக்காடு அல்லது ரூ.50க்கு மிகாமல் ஊர்திப்படியாக (Conveyance Allowance) வழங்கப்படும். இதனால் அரசு அலுவலர்கள் 15,000 பேர் பயன் அடை வார்கள்.

5) பெண் அலுவலர் மற்றும் மகள் திருமணத்திற் காக வழங்கப்படும் முன்பணம் ரூ.3000லிருந்து ரூ.5000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல் ஆண் அலுவலர் மற்றும் மகன் திருமணத்திற்காக வழங்கப்படும் முன்பணம் ரூ.1500லிருந்து ரூ.3000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

6) ஓய்வு ஊதியங்களில் ஊதியக்குழுவின் பரிந் துரைகள் முழுமையாக ஏற்கப்பட்டுள்ளன. குறைந்த பட்ச ஓய்வு ஊதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ரூ.245/- ஆக இருந்ததை உயர்த்தி ரூ.375/- ஆக மாற்றியமைக்கப்படும். அதே போல் குடும்ப ஓய்வு ஊதியத்தின் மீதுள்ள உச்சவரம்பை ரூ.1000 லிருந்து ரூ.1250 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற கால அடிப்படையில் ஓய்வு ஊதியத்தில் உயர்வு உயர்ந்த பட்சமாக 60 விழுக்காடு வரை வழங்கப் படும். இதனால் பல ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்று, குறைந்த ஓய்வு ஊதியம் பெறுபவர் களுக்கு, அதிக பலன் கிடைக்கும். இந்த ஓய்வூதிய மாற்றங்களினால் 1,76,600 பென்ஷன்தாரர்கள் பயன் பெறுவர். இதனால் அரசுக்குக் கூடுதல் செலவாக ஆண்டொன்றுக்கு ரூ.40 கோடி ஏற் படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சில பதவிகளுக்கு ஊதியக் குழுவின் பரிந்துரை களைவிட அதிக ஊதிய விகிதங்களை இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. அதற்கான விவரங்கள் வருமாறு:

i. தட்டச்சர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் தற்போது ரூ.610-1075 என்னும் விகிதத்தில் ஊதியம் பெற்று வருகின்றார்கள். அவர்களுக்கு ஊதியக்குழு ரூ.950-1500 என்னும் ஊதிய விகிதம் பொருந்தும் என்று பரிந்துரைத்துள்ளது. ஆயினும் அவர்களின் பணியின் தன்மையை மனதில் கொண்டு, மறுபரிசீலனை செய்து, மத்திய அரசின் ஊதிய விகிதத்திற்கு மேலாகவே இந்நிலையில் உள்ள அரசு ஊழியர்களுக்குச் சம்பள விகிதம் ரூ.975-1660 என்று இவ்வரசு நிர்ணயித்துள்ளது.

ii. இதுவரை ரூ.1160-1950 என்று ஊதிய விகிதம் பெற்று வரும் வட்டாட்சியர், காவல்துறை ஆய் வாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர் ஆகியோர் களுக்கு ரூ.1820-3200 என்று ஊதிய விகிதத்தை ஊதியக் குழு பரிந்துரை செய்தது. இதனை மாற்றி வட்டாட்சியர், காவல் துறை ஆய்வாளர், வட் டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு ரூ.2000 -3200 ஆகவும், தலைமைச் செயலகப் பிரிவு அலுவலருக்கு ரூ.2000-3500 எனவும் அரசு உயர்த்துகின்றது.

iii. காவல் துறை உதவி ஆய்வாளருக்கு ஊதியக் குழு ரூ.1400-2600 என்ற ஊதிய விகிதத்தைப் பரிந்துரை செய்தது. இதனை அரசு ரூ.1600-2660 ஆக உயர்த்தியுள்ளது.

iv. தற்போது சார்புச் செயலாளர் மற்றும் இயக்கு நர்கள் ரூ.1800-2900 என்ற சம்பள விகிதத்தில் ஊதியம் பெற்று வருகின்றார்கள். இதனை ஊதியக் குழு ரூ.2700-4300 ஆக வழங்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளது. அரசு இதனை மறு பரிசீலனை செய்து ரூ.3000-4500 என்று உயர்த்தி வழங்கியுள்ளது.

v. துணைச் செயலாளர், மாவட்ட வருவாய் அலு வலர், காவல் துறைக் கண்காணிப்பாளர், சார் நிலை நீதிபதி ஆகியோர்கள் ரூ.2150-3090 என்ற சம்பள விகிதம் பெற்று வருகின்றார்கள். இதனை ஊதியக் குழு ரூ.3000-4500 என்று உயர்த்தியுள்ளது. இவர்களுக்கும் ஊதியக் குழு வின் பரிந்துரையைவிட அதிகமான சம்பள விகித மான ரூ.3700-5000 என்று அரசு வழங்க முன் வந்துள்ளது.

vi. இணை இயக்குநர்கள் (பள்ளிக் கல்வித் துறை), கண்காணிப்புப் பொறியாளர், இணை இயக்குநர் (தொழில் துறை) போன்ற பதவியிலுள்ள அலுவலர்களுக்குத் தற்போது ரூ.2500-3375 என்ற ஊதிய விகிதமாக வழங்கப்பட்டு வருகின் றது. இவர்களுக்கு ஊதியக் குழு ரூ.3700-5000 என்று உயர்த்தியுள்ளது. இந்த அரசு இதனைப் பரிசீலித்து ரூ.4100-5300 என்று உயர்த்தி யுள்ளது.

vii. இணைச் செயலாளர், பல்வேறு துறைகளில் பணியாற்றக் கூடிய கூடுதல் இயக்குநர்கள் தற் போது ரூ.2750-3650 என்ற ஊதிய விகிதத்தில் உள்ளார்கள். இதனை ஊதியக் குழு ரூ.4100-5300 என்று மாற்றி அமைத்துள்ளது. அரசு இவர்களுக்கு ரூ.4500-5700 என்று ஊதிய விகிதத்தினை உயர்த்தி வழங்கியுள்ளது.

தமது தேர்தல் வாக்குறுதிகளில் மேலும் ஒன்றை நிறைவேற்றினார் முதல்வர் கலைஞர்.

viii. துறைத் தலைவர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதி போன்றவர்களுக்குத் தற்போது ரூ.3100-4050 என்ற ஊதிய விகிதம் வழங்கப்படுகின்றது. இதனை ரூ.4500-5700 என்று மாற்றி அமைக்கலாம் என்று ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. அரசு இதனைப் பரிசீலித்து ரூ.5100-5700 என்று உயர்த்தி மாற்றி அமைத்துள்ளது.

எனவே இவ்வாறு பல பிரிவினர்களுக்கு ஊதியக் குழு பரிந்துரைத்த விகிதங்களை விட அதிக அளவில் ஊதிய விகிதங்களை உயர்த்தியுள்ளோம்.

1.7.1988 வரை அதாவது குறியீட்டு எண் 752 இணையான அகவிலைப்படியை சம்பள விகிதங்களில் ஒன்று சேர்த்துப் புதிய சம்பள விகிதங்களை ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. மேலும் அகவிலைப்படியைப் பொறுத்தவரை இந்த ஐந்தாவது ஊதியக் குழு, மத்திய அரசுக்கு இணையான விகிதங்களைப் பரிந்துரைக்கவில்லை. எனினும், இதனைக் கவனமாகப் பரிசீலித்து அலுவலர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் முடிவு எடுத்துள்ளோம். அதன்படி மத்திய அரசுக்கு இணையான சம்பள விகிதங்கள் மட்டுமின்றி அகவிலைப்படியும் முழுமையாக 608 குறியீட்டு எண் அளவிலேயே வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.50 கோடி கூடுதல் செலவாகும்.

1.1.89லிருந்து கூடுதல் அகவிலைப்படி வழங்க வேண்டும். இதற்கான கூடுதல் செலவு சுமார் ரூ.88 கோடி ஆகும். இதனைப் புதிய ஊதிய விகிதங்களில் வழங்குவதென அரசு முடிவெடுத்துள்ளது.

இவ்வாண்டில் உள்ள நிதி நெருக்கடியில் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதை விட அதிகமாக அரசு வழங்கியுள்ள பயன்கள் அனைத்தும் ஏற்பது அரசுக்கு மிகப்பெரும் பளுவாக அமைந்துள்ளது. இருப்பினும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆண்டொன்றிற்குக் கூடுதலாக ரூ.400 கோடி செலவை ஏற்க இந்த அரசு முன்வந்துள்ளது.

புதிய சம்பள விகிதங்கள், அகவிலைப்படி மற்றும் இதர படிகள் 1.6.1988லிருந்து வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் நான் ஏற்கனவே உறுதி அளித்துள்ளேன். அதனைச் செயல்படுத்தும் வகையில் இந்தப் புதிய சம்பள விகிதங்கள் மற்றும் படிகள் 1.6.88லிருந்து அமல் படுத்தப்படும். அதேநேரத்தில் அரசின் நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு 1.6.1988லிருந்து 31.5.1989 வரைக்கும் வழங்கக்கூடிய நிலுவைத் தொகைகள் அனைத்தும் சேமநல நிதியில் வரவு வைக்கப்படும். தவிர்க்க முடியாத இந்த முடிவினை அலுவலர்கள் அனைவரும் அரசின் சங்கடத்தை மனதிற் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றேன்.

ஊதியக் குழு, மத்திய அரசு ஊதிய விகிதங்களைப் பின்பற்றும் பொழுது மத்திய அரசு செயல்படுத்தக் கூடிய திறனாய்வுமுறைத்தடையைப் (Efficiency Bar) பின்பற்ற வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. ஏற்கனவே ரகசியக் குறிப்பேடுகள் தேவையில்லை

**இக்கட்டான நிதி நெருக்கடி நிலையிலும் மத்திய அரசு ஊழியர்க்கு இணையாகவும், அதைவிட அதிகமாகவும் மாநில அரசு ஊழியர்க்கு ஊதியம்.**

என்று முடிவெடுத்து அதன் அடிப்படையில் அந்த ரகசியக் குறிப்பேடுகளை முன்பு ஆட்சியில் இருந்த போது நான் நீக்கியுள்ளேன். எனவே அலுவலர்களின் பணித் திறமையைச் சிறந்த முறையில் கண்காணிக்க வேண்டிய அதே நேரத்தில் திறனாய்வுமுறைத் தடை இதற்கு உகந்ததாக அமையாது என்று நான் கருதுகிறேன். எனவே ஐந்தாவது ஊதியக் குழு திறனாய்வு முறைத் தடையைப் பரிந்துரை செய்திருந்தபோதிலும் இதனை இவ்வரசு ஏற்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது நாள் ஒன்றுக்கு மத்திய அரசு அலுவலர்கள் 8 மணி நேரம் பணியாற்றும்போது மாநில அரசு அலுவலர்கள் 7 மணி நேரம் மட்டும்தான் பணியாற்றி வருகின்றார்கள். மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக சம்பள விகிதங்கள் மற்றும் அகவிலைப்படி ஆகியவை வழங்கும்போது மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக வேலை செய்யும் மொத்த நேரத்தை மாற்றி அமைக்க நேரிட்டுள்ளது. எனவே இரண்டாவது சனிக்கிழமை தவிர மற்ற சனிக்கிழமைகள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் அலுவல் நாளாகத் திருத்தி அமைக்கப்படும்.

1960ல் முதலாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆண்டொன்றுக்குக் கூடுதல் செலவு ரூ.5 கோடியாக இருந்தது. 1970ல் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கூடுதல் செலவு ரூ.21 கோடியாக இருந்தது. 1978ல் மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கூடுதல் செலவு ரூ.34 கோடியாக இருந்தது. 1985ல் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றதன் வாயிலாகக் கூடுதல் செலவு ரூ.90 கோடியாக அமைந்தது. தற்போது ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்பு அளித்தால் ஆண்டொன்றுக்கு ரூ.262 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அகவிலைப்படியை மத்திய அரசுக்கு இணையாக வழங்கும் பொருட்டும், 1.1.89ல் இருந்து கூடுதல் அகவிலைப்படி வழங்குவதற்கும் மற்றும் சம்பள விகிதங்களில் ஊதியக் குழுவின் பரிந்துரைகளைவிட அதிகமாக வழங்கியுள்ள காரணத்தினாலும், ஆண்டொன்றுக்குக் கூடுதல் செலவு சுமார் ரூ.400 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரசு அலுவலர்களுக்கு, பரவலாகப் பயன் அளிக்கக்கூடிய வகையில் மேற்கூறிய ஊதியப் பயன்களைத் தற்போதுள்ள நிதி நெருக்கடியில் கூடுதல் பளு ஏற்படினும் ஏற்றுக் கொண்டு செயலாக்க முன் வந்துள்ளோம். இதனை நல்ல எண்ணத்துடன் அரசு அலுவலர்கள் ஏற்றுக் கொண்டு முழு கவனத்துடன் சிறப்பாகவும் முனைப்பாகவும் செயல்படுவார்கள் என்று அரசு எதிர்பார்க்கின்றது. அரசு இந்த அளவிற்குப் பயன்கள் வழங்கும் நேரத்தில் அரசு அலுவலர்கள் இவ்வரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# மனிதநேய அடிப்படையில் அரசு மூலம் உதவ, கருணையுள்ளம் கொண்டவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வாரி வழங்குவீர் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க

## அவர் பிறந்த நாளில் குவிந்த நிதி

# ரூ. 31,50,692



**மா**ண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் 66-வது பிறந்தநாள் விழா 3.6.'89 அன்று சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழா நாளன்று அதிகாலையில் தம் வீட்டிலுள்ள தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகத்தம்மாள் இருவரின் படத்திற்கும் மாலையிட்டு வணங்கினார் முதல்வர். பின்னர், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், திருமதி மணியம்மையார் ஆகியோரின் நினைவிடங்களுக்குச் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்களும், மற்றும் அமைச்சர் பெருமக்களும் உடன் சென்றனர். நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

தமக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்க வந்த இலட்சோபலட்சம் மக்களைச் சந்திப்பதற்காக அன்று காலை 8 மணியளவில் கலைவாணர் அரங்கிற்கு வருகை தந்தார்

## மேதகு குடியரசுத் தலைவர் வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். அதில் - ''பிறந்த நாள் விழாக் காணும் இந்த இனிய நன்னாளில் இன்னும் பல்லாண்டுக்காலம் வாழ என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.



**தந்தை பெரியார் நினைவிடத்தில் மரியாதை செலுத்துதல்**

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

''மனித நேய அடிப்படையில், தமிழக அரசின் சார்பில் உதவிகளைச் செய்திட இந்த ஆண்டு என்னுடைய பிறந்தநாளில் முதல் அமைச்சரின் பொது நிவாரணநிதிக்கு நிதி வழங்க வேண்டுமென்று கருணையுள்ளம் கொண்ட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று முதல் அமைச்சர் அறிவித்திருந்தார். எனவே, வந்திருந்தோரெல்லாம் இயன்ற அளவு நிதி வழங்கி இதய வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

ரூபாய் நோட்டு மாலைகளும் ஏராளமாக அணிவிக்கப்பட்டன.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன், துணைத் தலைவர் திரு துரைசாமி, சட்டமன்றச் கொறடா திரு கா.மு. கதிரவன், முதல்வர் அவர்களின் பாராளுமன்றச் செயலாளர் திரு எல். கணேசன் ஆகியோரும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், பிற கட்சியினரும், பல்வேறு ஆலயத்தினரும், கலையுலகினரும், அரசு அதிகாரிகளும்-ஊழியர்களும், தொழிலதிபர்களும்-தொழிலாளர்-களும், மாணவ-மாணவிகளும், வன்னியர் மாணவர் நலக் கழகம், அனைத்து வன்னியர் கூட்டமைப்பு, வன்னியர் பண்பாட்டு ஒற்றுமை இயக்கம், அம்பேத்கார் மக்கள் முன்னணி உள்ளிட்ட பல்வேறு தனி அமைப்புகள்-நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், ஆண்களும்-பெண்களுமாக மிகுந்த ஆர்வத்தோடு நிதி அளித்து வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரிடமே

**பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்துதல்**






நேரில் அளிக்கப்பட்ட காசோலைகள், ரொக்கம் இவற்றின்மூலம் 3.6.89 அன்று மட்டும் 31 இலட்சத்து 50 ஆயிரத்து 692 ரூபாய் நிதி வந்துள்ளதென நிதித்துறை மூலம் அறிவிக்கப்பட்டது.

பலரும் தம்முடைய நிதியை முதல் தவணை என்று அறிவித்திருப்பதால், இன்னும் இந்தவகையில் பொது நிவாரண நிதி குவியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிதிவழங்கு நிகழ்ச்சியினிடையே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து தமது பிறந்தநாள் செய்தியை அறிவித்தார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. ஆர்க்காடு வீராசாமி, திரு. துரைமுருகன், திரு. வை. கோபால்சாமி, எம்.பி., ஆகியோர் அப்போது உடனிருந்தார்கள்.

அன்று மாலை, கடற்கரையில் உள்ள சீரணி அரங்கில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 66-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்திப் பேசிப் பொன்னாடை போர்த்தினார். ''தமிழ்நாட்டின் முதலமைச்சர் கருணாநிதியின் சேவை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியா முழுமைக்குமே தேவை'' என்று தமது வாழ்த்துரையின்போது அவர் குறிப்பிட்டார்.



# செய்தித் துறையினரின் காணிக்கை

செய்தி-மக்கள் தொடர்புத் துறை அலுவலர் சார்பில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக முதல் தவணையாக ரூ.15,001க்கு உரிய காசோலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அளித்தார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. கே. இராஜ மாணிக்கம் அவர்களும் மற்றும் அலுவலர்களும் அப்போது உடனிருந்தனர்.

அமைச்சர் பெருமக்களும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

சங்கர்-கணேஷ் இசை நிகழ்ச்சியோடு துவக்கப்பட்ட இவ்விழாவின் இறுதியில் தமக்கு அளிக்கப்பட்ட வாழ்த்துரைகளுக்கு நன்றி தெரிவிக்கும் போது, ஆற்றிய பேருரையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்

''பதவியேற்ற இந்த மூன்றுமாத காலத்தில் 12க்கும் மேற்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். இது கட்சிக்காக ஏற்பட்ட ஆட்சியல்ல; கட்சியால் ஏற்பட்ட ஆட்சி. பொதுவான ஆட்சியாக இருந்தால்தான், ஆட்சி மாட்சி உடையதாக, மாண்பு உடையதாக, மாற்றாரும் போற்றும் மகிமையுடையதாக அமையும் என்று குறிப்பிட்டார்.

ராஜூ

# பிறந்தநாள் செய்தி

''நான் பிறந்து பதினான்காண்டுகளுக்குப் பிறகு - எந்தப் பெரியாரின், அண்ணாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு திராவிட இயக்க உணர்வுகளைப் பரப்புவதற்கும் பலப்படுத்துவதற்கும் பணியாற்றத் தொடங்கினேனோ அந்தத் தொடர் பயணத்தின் ஒரு கட்டம்தான் இந்த 66வது பிறந்த நாள்.

''இந்த நாளில், ஆட்சிப் பொறுப்பில் என்னைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள கழகம் அமர்ந்திருக்கிறது.

''அண்ணா வழியில் மொழிகாக்கவும் இன மானம் காக்கவும் உலகெங்கும் பரவிக் கிடக்கிற தமிழ்மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடவும்- குறிப்பாகத் தமிழ் ஈழ மக்களிடையே அமைதி மலரவும், மாநில உரிமைகளை வாதாடிப் போராடிப் பேணிக்காக்கவும் கழகத்தை நம்பி வாக்களித்துள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு எல்லா வகையிலும் தொண்டாற்றிடவும் உறுதி மேற்கொள்கிறேன்.

''ஆட்சிப் பொறுப்பேற்ற சுமார் 120 நாட்களில் புரிந்துள்ள சாதனைகள் இன்னும் புரிய வேண்டிய சாதனைகளுக்கு முகப்புரையாகத்தான் அமைந்திருக்கின்றன.

''குறிப்பாக வறட்சியின் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் படுகின்ற துயரம் குறித்தும் குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக நகர்ப்புற மக்களும், கிராமப்புற மக்களும் அவதிப்படுவது குறித்தும் மிகக் கவலை கொண்டிருக்கிறேன்.

''மிக முக்கியமாக இந்த ஆண்டின் பிறந்தநாள் சூளுரையாகக் குடிநீர்ப் பிரச்னைக்கு மாநிலம் முழுவதும் முழுமையான தீர்வு காண அரசு இயந்திரம் முடுக்கிவிடப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

''அரசு அலுவலர்கள் அன்னியில், ஆங்காங்குள்ள கழக உடன்பிறப்புகள் வறட்சியால் துயருறும் மக்களுக்கு உதவிகளைச் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

''இந்தப் பிறந்தநாளில் எனக்கு வாழ்த்துத் தெரிவித்த பெருமக்கள் அனைவருக்கும் தலை தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்**
(செய்தியாளர் கூட்டத்தில், 3.6.89)

# எதற்கெல்லாம் இந்த நிதி?

''சென்னைப் பொது மருத்துவமனையில் இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்ய வசதி, சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களை அறுவைச் சிகிச்சை இல்லாமல் தகர்க்கும் நவீன கருவியை, சென்னைப் பொது மருத்துவமனைக்கு வாங்கி ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகச் சிகிச்சையளித்தல், விபத்து காரணமாக உயிரிழந்தோரின் குடும்பப்பாதுகாப்புக்கு நிதியளித்தல்

போன்ற மனிதநேயச்செயல்களுக்காக இன்று திரட்டப்பட்ட முதலமைச்சர் நிதி பயன்படுத்தப்படும்.''

**—மாண்புமிகு முதல்வர் கலைஞர்.**
செய்தியாளர் கூட்டத்தில் (3-6-89)

# திரையுலகம் தழைத்தோங்கும்

திரைஉலகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பல்வேறு பயன்மிகு திட்டங்களை அறிவித்திருக்கிறார்.

இது குறித்து ஆலோசிப்பதற்காகத் தலைமைச் செயலகத்தில் 9.6.89 அன்று கூடிய கூட்டத்தில் - திரைப்படத் தயாரிப்பாளர்கள், திரையரங்க உரிமையாளர்கள், தென்னிந்திய சினிமா வர்த்தக சபையினர், தமிழ் சினிமா வர்த்தக சபையினர், தமிழ் சினிமா தயாரிப்பாளர்கள் கவுன்சில், தென்னிந்திய சினிமா தயாரிப்பாளர்கள் கில்டு, தமிழ்நாடு சினிமாப்பட விநியோகஸ்தர்கள் கவுன்சில், தமிழ்நாடு சினிமா விநியோகஸ்தர்கள் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தோர் கலந்து கொண்டார்கள்.

கூட்டமுடிவில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்த விவரம் வருமாறு:

''குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான சிறிய படங்களுக்கு மானியம் கொடுப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் எடுக்கப்பட்ட தரமான 5 படங்களுக்கு, ஒன்றரை இலட்சம் ரூபாய் தரப்படுமென முந்திய அரசால் அறிவிக்கப்பட்டது. இனி, அத்தகைய உச்ச வரம்பின்றிக் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான படங்களுக்கு ரூ 2 இலட்சம் முதல் ரூ 3 இலட்சம் வரை மானியமாகக் கொடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி வெளியான படங்களுக்கும் இது பொருந்தும்.



நகர்ப்புறங்களின் அருகே அமைந்துள்ள திரை அரங்குகளை 'நான் காம்பவுண்டிங்' (ஒட்டு மொத்த வரி) அல்லாத பகுதியில் சேர்க்க வேண்டிய நிலை ஆராய்ந்து மேற்கொள்ளப் படும்.

இப்போதுள்ள சராசரி 53 சதவிகித வரி விகிதத்தை ஜூலை முதல் தேதியிலிருந்து 40 சதவிகிதமாகக் குறைக்க அரசு ஒப்புக் கொள்கிறது.

இப்போதுள்ள நுழைவுக் கட்டணத்தை 30 சதவிகித அளவிற்கு ஜூலை 1 ஆம் தேதி முதல் உயர்த்த திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது. கட்டண உயர்வும் வரிச்சலுகையும் ஒரே நாளில் அமலுக்கு வரும்.

இதுபோலக் காம்பவுண்டிங் பகுதிகளில் நுழைவுக் கட்டணம் 20 சதவிகித அளவுக்கு திரையரங்குகளின் உரிமையாளர்கள் உயர்த்திக்கொள்ள அரசு சம்மதிக்கிறது. இந்தப் பகுதிகளில் வரிவிகிதம் 34 சதவிகிதத்தில் இருந்து 30 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

காம்பவுண்டிங் பகுதிகளில் உள்ள திரை அரங்குகள் தங்களுடைய திரையரங்குகளின் இடங்களை உயர்த்த வேண்டுமெனில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இடங்களை உயர்த்திக் கொள்ளவும், புதிய கட்டணங்களை அமல்படுத்தவும் ஜூன் 20 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களைக் கொடுக்க வேண்டும்.

இந்தக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னால் திரைப்படத் துறையின் தொழிலாளர்கள் சார்பில் தாசரி பத்மா, மோகன் காந்திராமன், எம்.கே. தர்மலிங்கம் ஆகியோர் தனியாக என்னைச் சந்தித்துப் பேசினார்கள்.

கட்டடத்தொழிலாளர்கள், பனையேறும் தொழிலாளர்கள் போன்றவர்கள் விபத்தில் இறந்தால் அவர்களுக்கு அரசின் சார்பில் குடும்ப பாதுகாப்பு நிதி பத்தாயிரம் ரூபாய் தருவதைப் போல் சினிமா படப்பிடிப்பின் போது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசு பத்தாயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதி தர வேண்டுமென்று வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள், என்ற வரிசையில் - ஸ்டண்ட் மாஸ்டர்கள், நடன ஆசிரியர், ஆர்ட் டைரக்டர் ஆகியோருக்கும் சிறப்புப் பரிசுகள் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்; அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தேர்வுக் குழுவிலும் திரைப்படத் தொழிலாளர்கள் பெடரேஷனிலிருந்து ஒரு பிரதிநிதி இடம்பெற வேண்டுமென்று கேட்டனர்; அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரைப்படத் தொழிலாளர்கள் வீட்டுவசதி பற்றிக் கோரிக்கை வைத்தார்கள்; அது பற்றிப் பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சென்னை போன்ற சில இடங்களில், திரையரங்க வசூலின் சதவிகித அடிப்படையில் படங்கள் திரையிட வழங்காமல், வாடகை நிர்ணயிக்கப்படுகிறது; அந்த முறையை மாற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். அது மட்டுமன்றி, சென்னை போன்ற சில நகரங்களில் உள்ள அரங்குகளில் தமிழ்ப்படங்கள் வெளியிடத் தயங்குவது குறித்தும் அந்த அரங்குகளில் குறித்த கால அளவில் கட்டாயம் தமிழ்ப்படங்களை வெளியிட வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும், திரைப்படத்துறை தொடர்பான வீடியோ, 'டிஸ்க்' ஆன்டெனா போன்ற சாதனங்களால் ஏற்படும் நிலைமைகள் குறித்தும் அவ்வப்போது சந்தித்துப் பேசித் தீர்வு காண - அரசின் சார்பில், உள்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வணிக வரித்துறைச் செயலாளர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவும் - திரைப்படத்துறை சார்பில் ஏ.வி.எம். சரவணன், ஏ. கோதண்டராமன், ஜி. வெங்கடேசுவரன், இராம. நாராயணன் எம்.எல்.ஏ., டி. ராமானுஜம் ஆகிய ஐவர் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு குழுவினரும் அவ்வப்போது கலந்து பேசிப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளுவார்கள்.''

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.



# அண்ணா நினைவில்லத்தில் மாண்புமிகு முதல்வர்

முப்பெரும் விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகக் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிகழ்ச்சி நிரலில் இல்லாத நிகழ்ச்சி ஒன்றில் மனமகிழ்ச்சி யுடன் கலந்து கொண்டார். பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவில்லத்திற்கு முதல்வர் அவர்கள் வருகைபுரிந்த நிகழ்ச்சிதான் அது.

புயலையும் தென்றலையும் தம் எழுத்தாலும் பேச்சாலும் காட்டிய அண்ணா அவர்கள் அந்த இல்லத்தில் வாழ்ந்த காலத்தில், பலமுறை முதல்வர் கலைஞர் அவர்கள் அங்கு சென்றிருக் கிறார் என்றாலும், இந்த முறை, அண்ணா இல்லாத அந்த வீட்டினுள் நுழைந்தபோது உணர்ச்சிமயமாகக் காணப்பட்டார்.

அண்ணாவின் புதல்வர்கள் டாக்டர் பரிமளம், திரு. கவுதமன் ஆகியோர் முதல்வரை வரவேற்று மாலையணிவித்தார்கள். நினைவகத்தைச் சுற்றிப் பார்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங் கிருந்த அண்ணா சிலைக்கு மாலையணிவித்து வணங்கினார்.

பார்வையாளர் குறிப்பேட்டில் - ''அண்ணா வின் நினைவகம் வந்தேன்; அகமெல்லாம் அவர் நினைவுதானே? பிறகு என்ன தனியாக நினை வகம்? இருப்பினும் எதிர்காலப் பெட்டகம் இது!'' என்றெழுதிக் கையெழுத்திட்டார்.

கடந்தகால நிகழ்ச்சிகளைத் திரும்ப எண்ணிப் பார்க்கும் நினைவார்ந்த அமைதி-நிதானம் அவர் நடையிலிருந்தது. அண்ணா தொடர்பான படங் களெல்லாம் அங்கே வைக்கப்பட்டிருந்தன. ''நமக் கெல்லாம் பாடமாக இருந்த அண்ணா அவர்கள், இன்று படமாகி விட்டார்'' என்று அடிக்கடி தமது பேச்சில் குறிப்பிடும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உணர்ச்சிக் கொந்தளிப் போடு அண்ணா நினைவில்லத்திலிருந்து மீண்டு வர, அரைமணி நேரம் பிடித்தது.

# ''செங்கை அண்ணா மாவட்டம் வாழ்க!''

செங்கை அண்ணா மாவட்டம் தொடக்க விழா-தொகுப்பு வீடுகள், சமுதாயக் கூடங்கள், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துத் தொழிலாளர்கள் குடியிருப்புத் திறப்பு விழா-நலிவுற்றோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகிய முப்பெரு விழாக்கள் 1-6-89 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகள் காரணமாக காஞ்சிபுரமே எழிற் கோலம் பூண்டிருந்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் டாக்டர் இராமகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி மற்றும் நாடாளுமன்ற-சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்த இனிய விழாவில் பங்கேற்றனர்.

செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர் வியாஸ் வரவேற்புரையாற்றினார்.

ஆண்களும் பெண்களுமாகப் பல்லாயிரவர் கூடியிருந்த அக்கூட்டத்தில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''பன்னிரண்டாண்டுக் காலமாக அடக்கி வைத்திருந்த உள்ளார்ந்த எழுச்சி வெளிப்பாட்டின் காரணமாகக் கூடியுள்ள கூட்டம் இது. இன்றைய அரசில், யார் தடுத்தாலும் சரி; நடக்க வேண்டிய காரியங்கள், நடக்க வேண்டிய நேரத்தில் நடந்தே தீரும் என்பதற்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டு. இந்த மாவட்டத்திற்கு அண்ணா பெயரைச் சூட்ட வேண்டும் என்று முதன் முதல் குரல் கொடுத்தவர் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் தான். அந்த எண்ணம்தான் இன்றைக்கு எழில் வடிவம் பெற்று இங்கே, இன்று செங்கை அண்ணா மாவட்டம் மலர்கிறது. அண்ணாவின் இந்த அன்புத் தம்பி கலைஞரின் ஆட்சியைத் தாயாக இருந்து பாதுகாப்பது இலட்சோபலட்சம் தமிழ் மக்களின் கடமையாகும்''.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய இவ்வாறான உரைக்குப் பின், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மின்விசையை அழுத்த - மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 'செங்கை அண்ணா மாவட்டம்' என்ற வண்ணச் சர விளக்கெழுத்துகள் வனப்புற ஒளி சிந்தின. அதைத் தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்களைக் குறிக்கும் - கட்டடங்கள், பேருந்து வழித்தடங்களைத் துவக்கும் அடிக்கல் பலகைகளை மறைத்திருந்த பட்டுத் துணியும் அழகுற விலகியது. மக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

## நான்காம் அட்டை சொல்லும் செய்தி

அதன்பின், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் - ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப நல நிதி, சாலை விபத்து நிதி, ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள், தொழிற்கருவிகள், பெண்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவிகள் ஆகியவற்றை வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தினார்.

''செங்கை 'அண்ணா மாவட்டம் என்று இம்மாவட்டத்திற்குப் பெயர் சூட்டும் இந்த விழாவிலே பங்கேற்பதை நான் பெரும் பேறு பெற்றதாகக் கருதுகிறேன். ஏற்கெனவே வைக்கப்பட்ட பெயரை மாற்ற வேண்டும் என்பதோ, மாற்றியே தீரவேண்டும் என்பதோ நம்முடைய நோக்கமல்ல; எதுவும் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பதே நமது நோக்கம். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் - அண்ணா பிறந்த மாவட்டத்திற்குச் செங்கை அண்ணா மாவட்டம் என்றும், திண்டுக்கல்லோடு மிக நெருங்கிய தொடர்புடைய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய பெயர் அந்த மாவட்டத்திற்கும் சூட்டப்பட்டிருக்கிறது'' என்று தம்முடைய உரையைத் தொடங்கினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டு, சட்டமன்றத்திலே அண்ணா அவர்கள் - நான் தமிழ்நாடு என்று மூன்று முறை சொல்வேன், நீங்கள் வாழ்க என்று சொல்ல வேண்டும்' என்று சொன்னார். காங்கிரஸ்காரர்கள் உட்பட அத்தனைப் பேரும் 'வாழ்க வாழ்க' என்று சொன்னார்கள். அது இப்போது என் நினைவிற்கு வருகிறது. அதேபோல் - இங்கே நான் செங்கை அண்ணா மாவட்டம் என்று மும்முறை சொல்வேன்; நீங்கள் வாழ்க என்று சொல்ல வேண்டும்''.

இவ்வாறு சொல்லிவிட்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ''செங்கை அண்ணா மாவட்டம்'' என்று மூன்று முறை சொல்லச் சொல்ல, அந்த மாபெரும் மக்கள் வெள்ளம் ''வாழ்க, வாழ்க, வாழ்க!'' என்று மகிழ்ந்து ஆர்ப்பரித்தது.

இந்த முப்பெரும் விழாவின் தொடக்கத்தில், பெரியார் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மதுராந்தகம் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத் தலைவர் திரு. சி. ஆறுமுகம் முன்னிலை உரையாற்றினார். விழா முடிவில், காஞ்சிபுரம் நகரமன்றத் தலைவர் திரு. எஸ். இராசமாணிக்கம் நன்றி கூறினார்.

### ஆவின் ஊழியர்க்கு அரை லிட்டர் பால் இலவசம்

ஆவின் பால்வள நிறுவன அனைத்து ஊழியர்களுக்கும் மாவட்டப் பால் வழங்கும் ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர் உட்பட அனைவருக்கும் நாள்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கும் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறந்த நாளான 3.6.89 அன்று முதல் செயல் படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாடு முழுதும் 5,000 பேர் பயன்பெறுகிறார்கள்.

# செங்கை அண்ணா மாவட்டம் மலர்ந்தது



"செங்கை அண்ணா மாவட்டம் மலரும் இந்நாளில் இங்கே வீட்டுமனைப் பட்டா பெறுவோர் 6,840 பேர். அந்த மனைகளின் மொத்த மதிப்பு 68 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய். முதியோர் உதவித்தொகையாக வழங்கப்படுவது 12 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்.

இறந்து போன ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதியாக ஒரு இலட்சம் ரூபாயும், விபத்து நிவாரண நிதியாக ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபாயும், தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களுக்காக ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், மற்றும் தாழ்த்தப் பட்டவர்களுக்குச் சலவைப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் சலவைப் பெட்டிகள், முடிதிருத்தும் தொழிலாளர் களுக்கு இலவச தொழிற்கருவிகள், உடல் ஊன முற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், பெண் களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் உதவிகள், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு ஆட்டோ ரிக்ஷாக்கள், 42 ஆயிரம் ரூபாய்க்கு மோட்டார் சைகிள் ரிக்ஷா, மற்றும் விறகுக்கடை, டீக்கடை போன்ற சிறுசிறு தொழில் களுக்கான சாதனங்களுக்காகப் பல இலட்சம் ரூபாய், தொகுப்பு வீடுகள் கட்டுவதற்காகத் திட்டமிட்டு அதிலே கட்டி முடிக்கப்பட்ட 1,066 வீடுகளுக்கு ஒரு கோடியே 8 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய், 36 சமுதாயக் கூடங்களுக்கு 16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய், பதினைந்து பள்ளிக் கட்டி டங்களுக்கு 16 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய், அரிசிக் கிடங்கிற்கு ஒரு இலட்சம் ரூபாய், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்ட நூறு வீடுகளுக்கு 50 இலட்சம் ரூபாய், புதிய பேருந்துத் தடங்கள் ஐந்துக்காக 20 இலட்சம் ரூபாய், ஆக மொத்தத்தில் ஏறத்தாழ பத்தாயிரத்து அறுநூறு பேர் இன்றைக்குப் பயன்பெறும் வகையில், மூன்று கோடியே 54 ஆயிரம் ரூபாய் மதிப்பில் உதவிகள் இன்று இந்த மேடையிலே வழங்கப்பட்டிருக் கின்றன. அடையாளபூர்வமாக நான் சிலருக்கு வழங்கி இருக்கிறேன். தொடர்ந்து அலுவலர்கள் அந்த உதவிகளை இங்கே வழங்க இருக்கிறார்கள்."







"ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான்' என்றார் கவி தாகூர். இருக்கிறானா? அவனைக் காண்போம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பணிக்கு எங்களையெல்லாம் அழைத்தார். இன்று அவர் நம்மிடையே இல்லாமல் இயற்கை கொத்திக்கொண்டு போய்விட்டதால், அவர் விட்டுச் சென்ற பணிகளை, அவர் வழி நின்று நாங்கள் அயராது தொடர்கிறோம். அதற்கான எடுத்துக் காட்டே இந்தப் பணிகள்.

- மாண்புமிகு முதல்வர் கலைஞர்

(காஞ்சிபுரம் விழாப் பேச்சிலிருந்து 1.6.89.)

## "தொழுநோய் இரவலர் இல்லத்தில் உள்ள ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ.4.50 செலவிடப்படுவது ரூ.5.50 ஆக உயர்த்தப்படும்"-

## மாண்புமிகு முதல்வர் கலைஞர்

முதல் அட்டை சொல்லும் செய்தி:

### அறிவிப்பு!

செங்கை அண்ணா மாவட்டத்தில் உள்ள காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பரனூர் தொழுநோய் இரவலர் இல்லத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 66வது பிறந்த நாள் விழா 1.6.89 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அதில், தானும் கலந்து கொண்டு சிறப்பித்த முதல்வர் அவர்கள், அங்குள்ள 400க்கும் மேலான இரவலர்களுக்குப் புத்தாடை வழங்கி, உணவளித்து மகிழ்ந்தார்.

பரனூரில், தொழுநோய் இரவலர் மறுவாழ்வு இல்ல விழாவிற்கும், காஞ்சியில் நடைபெற்ற முப்பெரும் விழாவிற்கும் சென்னையிலிருந்து புறப்பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வழி நெடுகிலும் பல்லாயிரக்கணக்கான மக்களால் மகிழ்வோடு வரவேற்கப்பட்டார். ஆங்காங்கே அவர்கள் காரை நிறுத்தி மாலைகள் அணிவித்தும், கைத்தறியாடை அணிவித்தும் நல்வாழ்த்து தெரிவித்தார்கள்.

சென்னையிலிருந்து செங்கற்பட்டு வரையில் - மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 65 வயது நிறைவடைவதைக் குறிப்பிடும் வகையில் 65 வரவேற்பு வளைவுகள் அழகுற அமைக்கப்பட்டிருந்தன. 'இரவலருக்கும் இல்லங்கள் அமைத்த இணையற்ற தலைவா வருக'... 'தமிழ் இனத்தின் விடி வெள்ளியே வருக' என்பன போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகள் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன.

பரனூரில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. நாஞ்சில் கி. மனோகரன், திரு. ஆர்க்காடு வீராசாமி, டாக்டர் இராம கிருஷ்ணன், திரு. துரை முருகன், திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோரும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள்.

கூட்டத் தொடக்கத்தில், மதுராந்தகம் திரு. சி. ஆறுமுகம் வரவேற்புரையாற்றினார். "ஏழ்மையில் இருப்போருக்குத் தொழுநோய் ஏற்பட்டாலும், அவர்கள் பிச்சை யெடுக்கக்கூடாது என்கிற உயர்ந்த நோக்கமே-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த இல்லத்தைத் தோற்றுவிக்க மூலகாரணம்" என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

சிறைத்துறை உயர்அதிகாரியான திரு. எஸ். ஸ்ரீபால் துவக்கவுரையாற்றும் போது "1971ல் தமிழகம் வந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் இந்த இல்லம் திறந்து வைக்கப்பட்டது. திறந்த ஜீப்பில் இதைச் சுற்றிப் பார்த்த பிரதமர், இந்தியாவிலேயே இப்படிப்பட்ட முயற்சி வேறெங்கும் மேற்கொள்ளப்படவில்லை என்று சொல்லி முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார். இப்போது இந்த இல்லத்தின் மேம்பாட்டுக்காக முதல்வர் அவர்கள் ரூ.1.5 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இதுபோல் உள்ள வேறு மூன்று இல்லங்களுக்கு மூன்று இலட்சம் ரூபாய் என்ற அளவில் நிதி ஒதுக்கி இத்தகைய இல்லங்களைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்குள்ள பெரியவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.4.50 செலவிடப்படுகிறது. இதை ரூ.5.50 காசாக உயர்த்தினால் மொத்தமுள்ள பத்து இல்லங்களுக்குமாகப் பதினைந்து இலட்சம் ரூபாய் தான் செலவாகும். முதல்வர் அவர்கள் இந்தக் கோரிக்கை பற்றிப் பரிசீலிக்க வேண்டுகிறேன்." என்று குறிப்பிட்டார்.

-இவ்வாறு அவர் பேசியதையடுத்து, அந்த மேடையிலேயே திரு. கோதண்டம், செல்வி பானுமதி இருவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருமணம் நடத்தி வைத்தார். திருமதி உமா என்பவரின் ஆண்மகனுக்கு உதயசூரியன் என்று பெயர் சூட்டினார். இல்லத்தைச் சேர்ந்த பெரியவர்களுக்கும் தாய்மார்களுக்கும் வேட்டி சேலைகள்



வழங்கினார். சிறுவர் சிறுமியர்க்குச் சீருடையளித்தார். திரு. எஸ். சீனிவாசன் திரு. பி.டி. பாலு இருவரும் இரவலர் இல்லத்திற்காக வழங்கிய தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று மாண்புமிகு முதல்வர் மூலம் இரவலர் இல்லத்திற்கு அளிக்கப்பட்டது.

காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் மற்றும் விழாக் குழுவினர் - மாண்புமிகு முதல்வருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் மாலை, கைத்தறியாடைகள் அணிவித்தனர்.

இதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை விவரம் வருமாறு:

“இங்கே இந்த இல்லம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, இதையும் சேர்த்துத் தமிழ் நாட்டில் பத்து இல்லங்கள் தொடங்கப் பட்டன. இங்கே பேசிய சிறைத் துறைத் தலைவர் ஸ்ரீபால் இந்த இல்லத்தை இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்ததாகக் குறிப்பிட்டார். இந்திரா காந்தி அவர்கள் இங்கே வந்தது உண்மை; ஆனால், அவர் வந்தது இங்குள்ளவர்களுக்குப் பயன்படத் தக்க கருவியொன்றைத் தொடங்கி வைக்கத் தானே தவிர வேறல்ல. அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இந்த இல்லம் தொடங்கப்பட்டு நல்லமுறையிலே நடத்தப்பட்டு வந்தது. அத்தகைய பராமரிப்புகள் தொய்வின்றித் தொடரும்.

“ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடையவன் நான். இந்த இல்லத்திலே நானூறுக்கும் மேற்பட்ட தெய்வங்கள் இருப்பதாகக் கருதி அடிக்கடி உங்களை வந்து சந்தித்திருக்கிறேன். சென்ற ஆண்டு இங்கே நான் வர, அரசின் அனுமதி பெற வேண்டியிருந்தது. இன்றைக்கு அந்த அனுமதியைத் தமிழக மக்களோடு சேர்ந்து நீங்களே வழங்கியிருக்கிறீர்கள்.

“இந்த இல்லங்களிலே இருப்பவர்களுக்குக் காலையிலே சிற்றுண்டி-தேநீர், மதிய உணவு, மாலையிலே தேநீர் மற்றும் இரவு உணவு அளிக்கப்படுகிறது. நாள் தோறும் மோர் வழங்கப்படுகிறது. வாரம் ஒருமுறை இறைச்சி வழங்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொருவருக்கும் தினமும் நான்கு ரூபாய் ஐம்பது காசு செலவாவதாகவும், அதை ஐந்து ரூபாய் ஐம்பது காசாக்கினால், மொத்தம் உள்ள பத்து இல்லங்களுக்குமாகச் சேர்த்துப் பதினைந்து இலட்சம் ரூபாய்தான் செலவாகும் என்றும் ஸ்ரீபால் அவர்கள் உரிமையோடு ஒரு கோரிக்கை வைத்தார். அந்தக் கோரிக்கை ஏற்று நிறைவேற்றப்படுகிறது என்பதை இங்கே நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.”

-இவ்வாறு பேசிய முதல்வர் அவர்கள், விழா முடிந்ததும், இல்லத்தைச் சுற்றிப் பார்த்தார். இரவலர் இல்லத்தைச் சேர்ந்த இரவலர்களுக்குத் தாமே இன்சுவை உணவும் பரிமாறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: இந்திரன்**



# சிறந்த திரைப் படத்துக்கு ரூ. 1 இலட்சம்

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க 1988-ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளிவந்த படங்களைத் தேர்வு செய்து கீழ்க்கண்ட விருதுகள் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூ. ‘ஒரு இலட்சம்’ மற்றும் கேடயமும், 2-வது பரிசாக ரூ. 50 ஆயிரம் மற்றும் கேடயமும், 3-வது பரிசாக ரூ. 25 ஆயிரம் மற்றும் கேடயமும் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

### கலைஞர்களுக்கான பரிசுகள்

1. சிறந்த நடிகர்- 5 பவுன் பதக்கம்.
2. சிறந்த நடிகை- 5 பவுன் பதக்கம்.
3. சிறந்த இயக்குநர்- 5 பவுன் பதக்கம்.
4. சிறந்த கதை ஆசிரியர்- 5 பவுன் பதக்கம்.
5. சிறந்த உரையாடல் ஆசிரியர்- 5 பவுன் பதக்கம்.
6. சிறந்த இசை அமைப்பாளர்- 5 பவுன் பதக்கம்.
7. சிறந்த பாடல் ஆசிரியர்- 3 பவுன் பதக்கம்.
8. சிறந்த பின்னணிப் பாடகர்- 3 பவுன் பதக்கம்.
9. சிறந்த பின்னணிப் பாடகி- 3 பவுன் பதக்கம்.
10. சிறந்த ஒளிப்பதிவாளர்- 3 பவுன் பதக்கம்.
11. நடிகர் (சிறப்புப் பரிசு)- 3 பவுன் பதக்கம்.
12. நடிகை (சிறப்புப் பரிசு)- 3 பவுன் பதக்கம்.

### எம். ஜி. ஆர். விருது

13. கலைத்துறை வித்தகருக்கு ராஜா சாண்டோ விருது- 5 பவுன் பதக்கம்.
14. கலைத் துறை வித்தகருக்கு கலைவாணர் விருது- 5 பவுன் பதக்கம்.
15. கலைத்துறை வித்தகருக்கு எம்.ஜி.ஆர். விருது- 5 பவுன் பதக்கம்..

### தேர்வுக் குழு

மேலே கண்டுள்ள திரைப்பட விருதுகளைத் தேர்வு செய்ய நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமையில் தேர்வுக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்களாக இயக்குநர் திரு. பி. மாதவன், கதாசிரியர்-இயக்குநர் திரு. வலம்புரி சோமநாதன், இசை அமைப்பாளர் திரு. சுதர்சனம், ஒளிப்பதிவாளர் திரு. மாருதிராவ், எடிட்டர் திரு. தேவன், கவிஞர் கு. மா. பாலசுப்ரமணியம், நடிகர் மற்றும் தயாரிப்பாளர் திரு. பி.எஸ். வீரப்பா, திரு. ஆர். எஸ். மனோகர், திருமதி ஜி. சகுந்தலா, திருமதி அரசு மணிமேகலை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவுத் தலைவர் திரு. கே. சொர்ணம், ஆகியோர் செயல்படுவர்.

உறுப்பினர்-செயலாளராகச் செய்தி மக்கள்தொடர்புத் துறையின் துணை இயக்குநர் பணியாற்றுவார்

இதேபோல ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் டிசம்பர் முடிய வெளியாகும் திரைப்படங்களைத் தேர்வு செய்து விருதுகள் வழங்கப்படும்.



# ஏழை மக்களின் வயிறு குளிரச் செய்யும் திட்டம்

தமிழக அரசின் இலவச அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ், முதல்வர்கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி தமிழகம் முழுவதும் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைக் குடும்பங் களுக்கு 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் விழா சென்னை ஆயிரம்விளக்குத் தொகுதியில் உள்ள தெற்கு போக் சாலையில் 2.6.'89 அன்று நடைபெற்றது.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு சண்முக சிகாமணி, இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

விழாவிற்கு, தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு டி.ஆர். பாலு, ஆயிரம்விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவிற்கு முன்னிலை வகித்த மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பேசுகையில்:

''கன்னியாகுமரி முதல் சென்னை வரை இன்று இலவச அரிசி முதல்வர் பிறந்த நாளில் வழங்கப்படுகிறது. இந்த அரசு ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் செய்து வரு கிறது. கூட்டுறவுத் துறை மூலம் முதல் தவணையாக முதலமைச்சர் பொதுநிவாரண நிதிக்கு ரூ.7 இலட்சம் வழங்குகிறேன்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில்,

''இன்று நடைபெறுகிற நிகழ்ச்சி, தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் புத்தாண்டுப் பரிசாக ஏழை எளியோருக்கு 5 கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக நடைபெறுவதாகும்.

இங்கு பேசும்போது, இந்தத் திட்டத்தை இன்று நான் தொடங்கி வைக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். சித்திரை முதல்நாளன்றே இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. தொடர்ந்து கொண்டு இருக்கும் திட்டமாகும்.

தேர்தல் அறிக்கையில் தி.மு.கழகம் அரசமைப்போமானால், இன்னின்ன பணிகளைத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குச் செய்திடுவோம் என்று அறிவித்த வாக்குறுதிகளின் அடிப்படையில்,பொங்கல், தீபாவளி, தமிழ்ப் புத்தாண்டு ஆகிய நாட்களில் 5 கிலோ இலவச அரிசி மாதம் 300 ரூபா யும் அதற்குக் கீழும் வருமானம் பெறுகிறவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் அந்தத் திட்டத்துக்கு மக்களிடத்தில் ஏற்பட்ட வரவேற்பு என்பதைவிட ஏழைகளின் வயிறைக் குளிரச் செய்கிறது என்பதைத் தொடக்க நாளன்று பார்த்துவிட்டு, இதை மேலும் விரிவாக்கம் செய்தால் என்ன என்று சிந்தனை செய்தேன்.

எங்கள் எல்லோரையும்விட அதிகமாகச் சிந்தனை செய்து, என் பிறந்தநாளிலும், என்னை ஆளாக்கிய அண்ணா பிறந்த நாளிலும் விரிவுபடுத்த வேண்டும் என்று சொல்லி, ஆண்டுக்கு 3முறை இலவச அரிசி என்பதை 5 முறையாக வழங்குவது என்று சட்டப் பேரவையில் உணவு மானியத்தில் பேசும்போது அமைச்சர் ஆற்காடு வீராசாமி அறிவித்தார்.

என்னைக் கேட்டுக் கொண்டுதான் அறிவித்தார். ஏனெனில் இது பத்திரிகைகளில் வந்தால், நாமும் அறிவிக்கலாம் என்று அமைச்சர்களும் கருதினால், நிதி நிலைக்கு மேலும் இடர்ப்பாடு ஏற்பட்டு விடும்.

என் பிறந்த நாளன்று வழங்கத் தேவையில்லை என்று வாதாடிப் பார்த்தேன். ஆனால் அவர் என்னிடம் "கருணாநிதியோடு அல்ல, தி. மு. கழகத் தலைவரோடு அல்ல, முதலமைச்சரிடம் பேசிக்கொண்டு இருக்கிறேன். முதல்அமைச்சர் என்ற முறையில் பிறந்த நாளன்று 83 இலட்சம் மக்கள் பயனடைவதை ஏன் தடுக்க வேண்டும்" என்று கடுமையாக வாதாடினார். இறுதியாக ஏற்றுக்கொண்டு அதன்படி இன்று முதல் 8ஆம் தேதிவரை இலவச அரிசி வழங்கப்படும்.

21 ஆயிரம் நியாய விலைக் கடைகளில் இத்திட்டம் என் பிறந்த நாளன்று தொடங்குகிறது. சற்றொப்ப 83 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது.

இலவசமாக அரிசி வழங்குவது, இலவசமாகப் பணம் வழங்குவது, இலவசமாக வேட்டி-சேலை வழங்குவது இவைகள் மூலம் மாநிலத்துக்கும் மக்களுக்கும் நிலையான நிம்மதியை அளிக்க முடியுமா என்றால் எனக்குக் கிடைக்கும் பதில் அழுத்தம் திருத்த மாக 'முடியாது' என்பதுதான்.

அனைவரும் தொழிலில் ஈடுபட்டுச் சுயமாகச் சம்பாதிக்கும் நிலை சமுதாயத்தில் வேண்டும். துன்பப்படும், துயரப்படும் மக்களுக்கு இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்த நிலையான திட்டங்களைத் தீட்டி வருகிறோம். சட்டசபையில் வரவு-செலவுத் திட்டத்தில் படிக்கப்பட்டு மானியங்கள் விவாதிக்கப்பட்டு, பல அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு, அமல் நடத்தப்படும் சூழ்நிலையில் ஆட்சி நடக்கிறது.

வேலைவாய்ப்பை அதிகரிக்க, அரசு பல செயல்களில் ஈடுபட்டுள்ளது. தேர்தல் அறிக்கையில் கிராமப்புறங்களில் உள்ள 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறி இருந்தோம். ஒவ்வொரு கிராமத்திலும் படித்து வேலை இல்லாமல் இருக்கும் 2 பேருக்காவது வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டோம்.

12 ஆயிரம் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 2 பேருக்காவது வேலைவாய்ப்பு அளிக்க ஆயத்தப்பணிகள் நடந்து வருகின்றன. ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும் என்பதற்காக, ஏற்கனவே உள்ள அரசுகளால் தொடங்கி நிறுத்தப்பட்ட தொழிற்சாலைகளையும் மற்றும் புதிய தொழிற் சாலைகளையும் தொடங்கத் திட்டமிட்டுள் ளோம்.

இங்கு, தலைமைச் செயலாளர் பேசும்போது ஊட்டச்சத்து இல்லாத காரணத்தால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றன. உடல் நலிந்து, வாடி வதங்குகிறார்கள், அவர்கள் ஆரோக்கியத்துக்குப் பொறுப்பேற்றுக் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமை என்று கூறினார்.

இதற்காக மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் இருந்தாலும் அதிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன.

குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதம் (போலியோ) வராமல் தடுக்க சொட்டு மருந்து கொடுத்தாலும் இளம்பிள்ளைவாதம் சில நேரம் வந்தே தீருகிறது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்த டாக்டர்கள் குழுவினர் "சில காலம் வரையில்தான் இந்த மருந்து பாதுகாப்பாக இருக்கிறது, பிறகு சக்தியை இழந்துவிடுகிறது" என்று குறிப்பிட்டுள்ளனர்.

நான் இது குறித்து அதிகாரிகளிடம் பேசும்போது, இதுபற்றிக் கேட்டேன். இந்தச் சொட்டுமருந்து அதன் சக்தியை இழந்து விடாமல் தடுக்க, குளிர்பதனச் சாதனங்கள் தேவைப்படுகின்றன என்றார்கள். குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதம் வராமல் தடுக்க எவ்வளவு செலவாகும் என்று சொல்லுங்கள் என்று கேட்டிருக்கிறேன். உடனடியாக ஆராய்ந்து முயற்சிகளை மேற்கொள்ளச் சொல்லி இருக்கிறேன்.

இன்று இங்கே இலவச அரிசி வழங்கப்படுகிறது. தமிழகம் முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஏழை, எளிய மக்களுக்கு இந்தத் திட்டம் போய்ச் சேர இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

எந்தத் திட்டமானாலும் அறிவித்தால் போதாது. நடைமுறைப்படுத்தினால் போதாது, யாருக்குப் போய்ச்சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அந்தப் பணியில் அரசு அதிகாரிகள் ஈடுபட வேண்டும்.

தமிழ்நாட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை வாட்டிக் கொண்டு இருக்கிறது. இங்கு நான் இலவச அரிசி வழங்கினாலும் குடிநீர் இல்லாமல் அவதிப்படும் தாய்மார்கள், வறட்சியால் வாடும் தாய்மார்கள், வறட்சியால் வாடும் விவசாயிகளைப் பற்றியே என் உள்ளம் சிந்திக்கிறது.

நான் பிறந்ததால் நீங்கள் அடையும் மகிழ்ச்சி எனக்கு இல்லை. மன நிறைவோடு, எல்லாக் காரியங்களையும் ஆற்றிவிட்டோம் என்ற திருப்தி இல்லை. ஏழ்மையைப் போக்கிவிட்டோம் என்ற நிலை இந்தியாவில் சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஏற்படவில்லை. இந்த ஏழ்மையைப் போக்க வழி பிறக்க வேண்டும். இந்த வழி தானாகப் பிறக்கக் கூடியதல்ல. நாம்தான் காணவேண்டும். அதற்கு உங்கள் அன்பான ஆதரவு வேண்டும்.

வறட்சித் துயர்துடைக்க, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு தொடர்ந்து முயற்சிகள் எடுக்கும்.

முதல்அமைச்சர் நிவாரண நிதிக்கு உணவுத் துறையின் சார்பில் 7 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். தமிழகம் முழுவதிலும் இதுபோல வாரிவழங்க வேண்டும். மனித நேயத்தோடு பல நற்காரியங்களைச் செய்ய இது உதவும்." என்று குறிப்பிட்டார்.

விழா இறுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு 5 கிலோ அரிசிப் பொட்டலங்களை வழங்கினார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப. நன்றி கூறினார்.

## வக்ஃப் வாரியத்திற்கு உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு மாநில வக்ஃப் வாரியத்திற்கு தமிழக அரசு 11 பேரை உறுப்பினர்களாக நியமித்துள்ளது. 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் நாளிலிருந்து 1994 ஆம் ஆண்டு மே திங்கள் 28 ஆம் நாள் வரை இவர்கள் இப்பதவி வகிப்பார்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், சென்னை; திரு. ஏ. அப்துல் ஹமீது, கோயம்புத்தூர்; திரு. ஏ. முகமதுசாலி, வழக்கறிஞர், தஞ்சாவூர்; திரு. ஏ. அமானுல்லாகான், வழக்கறிஞர், சேலம்; திரு. எம். ஜாபர் பெய்க், சென்னை, திரு. மீர் ஜாபர் அலி, வேலூர்; திரு. இ.எம். நாகூர் அனீபா, நாகூர்; கவி கா.மு. ஷெரீப், சென்னை; திரு. ஜி.எம். ஷா, கன்னியாகுமரி மாவட்டம்; திரு. அப்துல் முத்தலீப், கோத்தகிரி; திரு. சங்கு சையது அப்துல் காதர், சென்னை ஆகியோர் இவ்வாரியத்தின் உறுப்பினர்கள்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". நல்வாழ்வு என்பது நோயற்று இருப்பது மட்டுமன்று; மனம் மகிழ்வுற்று அமைதியுடன் இருப்பதும் ஆகும். "மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்" என்கிறார் வள்ளுவர். உடல் நலமும் மனநலமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல, போதும் என்கிற மனம், நெருக்கடி வரும் நேரத்தில் அதைச் சமாளிக்கக் கூடிய மனத்திடம், உலகத்தோடு ஒட்ட ஒழுகுகின்ற உயர்ந்த பண்பு, யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என எண்ணும் பரந்த மனப்பான்மை இவையனைத்தும் மன நலத்தின் சிறப்பு இயல்புகள்.

களும், அவற்றில் சுமார் 20,000 படுக்கை வசதிகளும் உள்ளன.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களில் இருபது சதவீதத்தினர்தான் மனநல மருத்துவத்தின் நவீன சிகிச்சைகளைப் பயன்படுத்துகின்றனர். மற்ற பெரும்பாலோர், அறியாமை, பயம், தப்பெண்ணம், மூடநம்பிக்கை போன்ற காரணங்களால் முறையான சிகிச்சை பெறுவதில்லை. மனநோய் என்பது ஏதோ பில்லி சூனியம், மந்திரம், வினைப்பயன், காற்று கருப்பு, பேய்களினால் பாதிப்பு போன்றவற்றால் ஏற்படுவதாகக் கருதுகின்ற மூடநம்பிக்கை இன்னமும் நம் சமூகத்தில்

1794-ஆம் ஆண்டு சிறு வாடகை வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்காப்பகம், 1807-ஆம் ஆண்டு சென்னை மில்லர்ஸ் சாலைக்கு டாக்டர் டால்டன் என்பவரின் மேற்பார்வையின் கீழ் மாற்றப்பட்டு "டால்டன் பைத்தியங்கள் காப்பகம்" எனப் பெயர் பெற்றது. பின்னர், 1871-ஆம் ஆண்டு தற்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது. அப்போது அது 'பைத்தியக் காரர் பாதுகாப்பிடம்' (Lunatic Asylum) என அழைக்கப்பட்டது. 1922-ஆம் ஆண்டுதான் 'அரசினர் மனநல மருத்துவமனை' எனப்பட்டது. இம்மருத்துவமனை 1971-இல் நூற்றாண்டு விழா கண்டது. 1978-ஆம் ஆண்டு




# மனநோய் தீர்க்கும் மருத்துவ மனை

உடல் நலம் பாதிக்கப்படுவதைப் போல் பல்வேறுபட்ட காரணங்களால் மனநலமும் பாதிக்கப்படலாம். மனத்தின் நலம் குறையும் போது மனிதனுக்குப் பலவிதமான நிலை குலைவுகள் ஏற்படுகின்றன. நலக்குறைவின் அளவிற்கேற்ப மனநோய்கள் உண்டாகின்றன.

மனநோய் உடல்நோய் போன்றதே. மன நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெறுதல் அவசியம். மனநலம் பாதிக்கப்பட்டதாலேயே ஒருவரை 'பைத்தியக்காரன்' என்று கருதி, அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் இழிவாகக் கருதுகின்ற நிலை மாறுதல் அவசியம்.

நமது நாட்டில் நூற்றுக்குப் பத்து பேர் மிதமான மனநலப் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். நூற்றுக்கு ஒருவர் முதிர்ந்த மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர், இந்தியாவில் மொத்தம் 42 மனநோய் மருத்துவமனை

நிலவி வருகிறது. எனவே மருத்துவ உதவியை நாடுவதை விட்டு, மந்திர தந்திரவாதிகளிடமும், மத சம்பந்தமான முறைகளிலும் நாட்களைக் கடத்தி விட்டு, நோய் முற்றிய நிலையில், மன நோய் மருத்துவமனைக்கு அழைத்து வருகின்றனர்.

மனநலம் பாதிக்கப்பட்டு மனநோய் பீடித்தவர்களைப் பாதுகாத்து, முறையான மருத்துவம் நவீன முறையில் செய்வதில் நம் தமிழ்நாட்டில் சென்னை மாநகரில் கீழ்ப்பாக்கத்தில் அமைந்துள்ள மனநலக்காப்பகம்(Institute of Mental Health) பெரும் பணி ஆற்றுகிறது. இக்காப்பகம், இந்தியா மட்டுமின்றி தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே பெரிய மனநோய் மருத்துவமனைகளில் ஒன்றாய்த் திகழ்கிறது.

டாக்டர் (திருமதி) துளசி அனந்தராமன்,
கண்காணிப்பாளர்,
மனநலக் காப்பகம், சென்னை-10

'மனநலக்காப்பகம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது.

மனநலக் காப்பகம், சென்னை கீழ்ப்பாக்கம் பகுதியைச் சார்ந்த மேடவாக்கம் குளச்சாலையில் ஏறத்தாழ 45 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1800 பேர் தங்கி உள்ளுறை நோயாளிகளாகச் சிகிச்சை பெற வசதி உண்டு. இந்தக் காப்பகத்தின் வனப்பு மிகு சூழலும், குளிர்தரும் மரஞ்செடிகளும், அவைதரும் நிழலும் மன நோயாளிகளுக்கு ஏற்ற ஓர் அமைதியான சூழ்நிலையாய் அமைந்துள்ளது. இக்காப்பகத்தில் மொத்தம் 20 பிரிவுகள் (Wards) உள்ளன. அவற்றில் 12 ஆண் நோயாளிகட்கும், 8 பெண் நோயாளிகட்கும் உரியன. காப்பகத்தின் பெரும்பாலான கட்டடங்களும் சூழலும் பழமை வாய்ந்தவை. ஆனால் காப்பகத்தின் புறப்பிணியாளர் பகுதி எல்லா நவீன வசதிகளும் கொண்டதாக விளங்குகிறது. பொலிவு மிக்க புறப்பிணியாளர் பகுதியை 1970-ஆம் ஆண்டு



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தது குறிப்பிடத்தக்கது.

மனநலக்காப்பகம், தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தக் காப்பகம் மனநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதுடன் மருத்துவர்களுக்கு மனநலம் பற்றிய பட்டமேற்படிப்பில் பயிற்சி அளிக்கிறது. பல்வேறு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் சமூகநலப் பணி மாணவர்கள், செவிலியர் பயிற்சி மாணவிகள் ஆகியோரும் பயனடைகிறார்கள்.

மனநலக் காப்பகத்தில் மனநோயாளிகளுக்கு 24 மணிநேரமும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. காப்பகத்திற்கு வரும் நோயாளி வந்தவுடன் முறைப்படி பதிவு செய்யப்பட்டு, மருத்துவரால் பரிசோதிக்கப்படுகிறார். அவரது உடல்நிலை, மனநிலை, குடும்பச் சூழ்நிலை முதலியன ஆராயப்படுகின்றன. இவை தவிர இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, மூளை மின்அலைப் படம் (இ.இ.ஜி) முதலிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நோயாளிகளின் நிலை, நோயின் தன்மை முதலியவற்றை ஆய்ந்த பின் காப்பகத்தில் உள்ளுறை நோயாளியாகவோ அல்லது புறப்பிணியாளராகவோ சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது தவிர பகல்நேர மருத்துவ வசதியும் உண்டு. உள்ளுறை நோயாளிகளில் பெண்கள் அவர்களுக்கென்று பாதுகாப்பான தனிப்பிரிவுகளில் சேர்க்கப்படுகின்றனர். மனநோய் பாதிப்பால் குற்றம் புரிந்தவர்கள், சிறுவர்கள், வலிப்பு நோய் சம்பந்தப் பட்ட மனநோயாளிகள், குடிநோய் மற்றும் போதை மருத்துக்கு அடிமையானோர் ஆகி யோர்க்குத் தனித்தனிப் பிரிவுகள் சிறப்பாகச் செயல்படுகின்றன.

1988-ஆம் ஆண்டு ஒரு வருடத்தில் மட்டும் 3,689 மன நோயாளிகள் உள்ளுறை நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர். ஆண் பெண் நோயாளிகள் 3க்கு 1 என்கிற விகிதத்தில் உள்ளனர். இப்பொழுதெல்லாம் பெரும்பாலும், தீவிர சிகிச்சைக்குப்பின் மன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்ட பிறகு, மூன்றிலிருந்து எட்டு வாரங்களில் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். இருந்தபோதும் அவர்கள் தொடர்ந்து புறப்பிணியாளராக மருந்து உட்கொள்ளுதல் அவசியம்.

புறப்பிணியாளர் பகுதி காப்பகத்தை ஒட்டிய பகுதியில் அமைந்துள்ளது. புறப்பிணியாளர் பகுதியில் புதிதாக முதல் முறை வரும் நோயாளிகளும், தொடர்ந்து சிகிச்சை பெறும் நோயாளிகளும் சிகிச்சைக்கு வருகிறார்கள். 1988-ஆம் ஆண்டு மட்டும் 3,955 பேர் புதிதாகப் பதிவு செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர். மனத் தளர்ச்சி நோய் (Neurosis), குழந்தைகள் மன நலம், விடலைப் பருவ மனநலம், முதியோர் மனநலம், வலிப்புநோய், குடி மற்றும் போதைப் பொருள் அடிமையானோர் பகுதி போன்ற சிறப்புப் பகுதிகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

மற்றவர்கள் மட்டரகமாகத் திட்டினால் மனம் பதைக்கக் கூடாது; ஏனெனில் அந்தத் தூற்றல் வெறும் குப்பை; அந்தக் குப்பையும் நம் கழனியை வளர்க்கும் எருவாக மாறக்கூடும் - நினைவிருக்கட்டும்.

பேரறிஞர் அண்ணா

அகப் பிணியாளர்களுக்கு அவரவர் தேவைக்கு ஏற்ப மாத்திரைகள், ஊசி மருந்துகள், மின்அதிர்ச்சி வைத்தியம் (Electro Convulsive Therapy) மற்றும் உளவியல் முறைகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. உளவியல் முறைகளில் குறிப்பிடத்தக்கவை மனவழி மருத்துவம் (Psychotherapy), மனோவசிய மருத்துவம் (Hypnotherapy), குழுவழி மருத்துவம் (Group Therapy), குடும்பவழி மருத்துவம் (Family Therapy), மனமகிழ் மருத்துவம் (Recreation Therapy), தொழில்வழி மருத்துவம் (Occupation Therapy) மற்றும் மறுவாழ்வுத் தொழிற் கூடம் (Industrial Therapy) ஆகியனவாகும்.

மனப்பிணியாளர் மகிழ்வுறும் வண்ணம் வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்களும், எல்லாப் பிரிவுகளிலும் உள்ளன. பல்சுவை நிகழ்ச்சிகள், பொங்கல், கிறிஸ்துமஸ் போன்ற விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப் பெறுகின்றன.

பொது மக்களுக்கு மனநல மருத்துவம் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு ஆரம்பக் காலத்திலேயே மனநோய்களுக்கு மருத்துவம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் தேசிய மனநலத் திட்டம் (National Mental Health Programme) தமிழ்நாட்டில் மனநலக் காப்பகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சீரிய வகையில் செயல்படத் தொடங்கியுள்ளது.

மனநோய்கள் வராமல் தடுக்கும் முறைகள், மனநோய்கள் வருவதற்கான காரணங்கள், நோய் வந்த பிறகு இன்னும் சிறப்பாகச் சிகிச்சை அளிக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சிகளும் காப்பகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# பெண் நேற்று இன்று நாளை

டாக்டர். திருமதி. சு. சுனந்தா தேவி,

பண்டைத் தமிழ் மக்கள் அகமென்றும், புறமென்றும் வாழ்க்கை நெறியினைப் பகுத்துச் செம்மை வாழ்வு நடத்தினர். காதலையும், வீரத்தையும் தமதிரு கண்களாகப் போற்றினர். வீரத்தின் விளை நிலங்களாக ஆண்மக்களுக்கு நிகராகப் பெண்மக்களும் விளங்கினர். அறிவில் மேம்பட்டு விளங்கிய அப்பெண்மணிகளிடம் ஈரமும், வீரமும் மிக்கு விளங்கின.

ஆயின், இடைக்காலத்தில் பெண்களின் நிலை சீர்கேடடைந்தது. அந்நியர் படையெடுப்பின் விளைவால் பெண்களைப் பாதுகாக்க வேண்டி அவர்கள் வீட்டில் சிறைப்படுத்தப்பட்டனர். பின்னர், இந்நிலையே நீடிக்கத் தொடங்கியது. புலியை முறத்தால் அடித்து விரட்டிய வீரப்பெண் ஆண்களின் ஆளுகைக்கு உட்பட்டு இரையாகிக் கொண்டிருந்தாள். அவளின் குரல் வளையிலிருந்து உரிமை முழக்கம் எழ மறுத்தது. எழுந்தாலும் அது உள்ளுக்குள்ளேயே பலவந்தமாக அமுழ்த்தப்பட்டது.

## அடுக்களை ஞானிகள்

பெண்கள் மென்மையானவர்கள் என்பதால், ஆண்மக்கள் இன்றளவும் பெண்கள் தங்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்கள் என்றே கருதுகின்றனர். இவ்வெண்ணமே, பெண்கள் பல உரிமைகளை அடைய இயலாமல் செய்தது எனில் மிகையாகாது. பெண்கள் உலக அறிவு சிறிதுமின்றித் தாம் வாழும் வீடே உலகம் என எண்ணி வாழும் நிலை வற்புறுத்தப்பட்டது. பெண்கள் அறியாமைச் சேற்றில் ஆழப் புதைக்கப்பட்டனர். கல்வி என்னும் நறுமணத்தை நுகர வழியின்றி அலங்காரப் பதுமைகளாய், அடுக்களை ஞானிகளாய் விளங்கினர்.



பெண்களின் இப்பரிதாப நிலை கண்டு பரிதவித்த சில உள்ளங்களில் எழுச்சி பிறந்தது. அவர்களின் நெஞ்சக்கனல் பெண்களின் அடிமைத்தளையைச் சிறிது சிறிதாகப் பொசுக்கத் தொடங்கியது. பெண்களின் முன்னேற்றத்தில் தங்கள் கருத்தைச் செலுத்திய பல நல்லிதயங்களின் முயற்சியால்





சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படத் தலைப்பட்டது. இம்மறுமலர்ச்சியின் விளைவால் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பல துடைத்தெறியப்பட்டுள்ளன.

## அரணும் முரணும்

1871 இல் சென்னையில் விதவை மண ஆதரிப்புச் சங்கம் தொடங்கப்பட்டது. 1872 இல் அமுலான பிரம்ம சமாஜ் சட்டத்தின் மூலம் ஒருதார மணமும், கலப்பு மணமும் அனுமதிக்கப்பட்டன. பூப்பெய்திய பிறகு தான் பெண்களுக்கு மணம் செய்விக்கப்பட வேண்டும் என்ற மசோதா சட்டமாகச் சீனிவாச சாஸ்திரி என்பவர் உதவினார்;

பெண்களின் திருமண வயதை உயர்த்த வேண்டும் என்பதற்காக டி. மாதவராவ் என்பவர் பெருமுயற்சியால் வென்றார்.

பாரதியார், பாரதிதாசன், வேத நாயகம் பிள்ளை, திரு.வி.க., காந்தியடிகள்,

பெரியார் போன்றோர் பெண்கள் முன்னேறத்தக்க வழிவகைகளை வகுத்துத் தந்துள்ளனர். இவர்களில் பெரியார் அடிமைத் தளையிலிருந்து பெண்கள் முழுமையாய் விடுபடப் பற்பல நெறிமுறைகளை அறிவுறுத்தியுள்ளார். ஆணும், பெண்ணும் அனைத்து உரிமைகளிலும் சமமானவர்கள் என்று சமுதாயத்திற்கு உணர்த்தியவர் இவர்.

கல்வித்துறை பெண்மக்கட்கு இயற்கையில் அரண் செய்வதன்றி முரண் செய்வதில்லை. பெண்கல்வியை மறுப்பது இறைவன் படைப்பு நோக்கை இடர்ப்படுத்துவதாகும் என்பது திரு.வி.க.வின் கருத்து.

சமுதாயத்தில் பெண்கள் இவ்வுரிமைகளை இன்று அடைந்துள்ளனர். பெண்கள் உரிமைக்காக ஆண்கள் குரல் கொடுத்தது போக, இன்று அவர்களே தங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் நிலைக்கு முன்னேறியுள்ளனர். இப் புதுமைப் பெண்களின் எழுச்சியால் நாடு பல்வளம் பெறும் என்பது உறுதி. பெண்களும் தங்கள் கடமையுணர்ந்து செயலாற்ற வேண்டுவது மிக அவசியமான தொன்றாகும்.

பெண்கள் தங்கள் உரிமைகள் பறிபோய் விட்டன என்று யாசிப்பதை விட்டு உரிமைகளை உடைமைகளாக்கிக்கொள்ளப் பழகி வருகிறார்கள். இவ்விதப் போராட்டத்தில் அமைதியுடன், அறிவின் துணையுடன் எதிர்ப்பதே சிறப்பாகும்.

இனிவரும் காலத்திலும் பெண்கள் எத்துணை துயர்வரினும் உள்ளம் துவளாது நேர்மையுடன் போரிட வேண்டுவது அவசியமாகும். அஞ்சா நெஞ்சினராய்த் தங்கள் மக்களை முழுமையடையச் செய்யும் தன்மை தங்களிடமே உள்ளது என்பதைப் பெண்கள் உணர வேண்டும்.

"ஆணைப் பூரண மாக்கும் அருளே
உண்மைப் பெண்ணென் றுரைத்திட லாமே"

- என்றார் சுத்தானந்த பாரதியார்.

### பெண்களே, கண்களே!

பெண்கள் தங்கள் திறமைகளைத் தங்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்களுக்கும், நாட்டுக்கும் பயன்படுத்த முன்வர வேண்டும். அதை விடுத்து, வீணே காலங்கழிப்பது அறிவுடைமையாகாது. மண்ணைப் பொறுத்தே மரம் அமைவது போன்று பெண்ணைப் பொறுத்து மனித குலம் உய்ய வேண்டியுள்ளது. அறிவு விளக்கம் ஒன்றே பெண்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் நெறி என்பதைப் பெண்கள் உணர வேண்டும்.

அறிவில் வல்லவர்களாய் விளங்கி முன்னேற்றத்திற்கு உறுதுணையாயிருக்கும் பெண்கள் நாட்டின் ஒளிமிக்க கண்களாவர். தங்கள் வாழ்க்கையை நன்முறையில் தன்னிச்சையாக நடத்திச் செல்லுமளவிற்குப் பெண்கள் துணிவுடன் செயல்பட வேண்டும். தங்களின் அடிப்படைத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளுமளவிற்கு அவர்கள் தங்கள் தகுதிகளை வளப்படுத்திக் கொள்ளுதலும் வலுப்படுத்திக் கொள்ளுதலும் அவசியமாகும்.

பெண்கள் ஆண்களைப் போன்று துணிவாக நடந்து கொள்ளுதல் வேண்டும். பெண்கள் தனியாக வாழ முடியும், எதையும் சாதிக்க முடியும், சொந்தக்காலில் நிற்க முடியும் என்கின்ற நிலையில் வாழ வேண்டும். சுதந்திரமாகக் கவலையற்று வாழ, தொல்லையற்று வாழ, அறிவைக் கொண்டு சிந்தித்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

ஆடவரின் பெருமை பெண்ணுக்குள் அடங்கி இருக்கிறது. ஆணைப் பெறுபவளும், வளர்ப்பவளும் அவளே. பெண்ணில்லையேல் உலகில்லை; உயிரில்லை; அன்பில்லை; அருளில்லை; தொண்டு இல்லை; இரக்கமில்லை. அதனால் உலகை வாழ்விக்கும் பெண்கள் தங்கள் உள்ளத்தில் உயர்ந்து உலகை ஆள வேண்டும், உன்னத உலகம் படைக்க வேண்டும்.

### உன்னத உலகம்

பெண்களைப் பாகுபடுத்திப் பார்ப்பது அநியாயமானது மட்டுமில்லை; மனித இனத்திற்கே கௌரவமற்ற செயலுமாகும். பெண்களின் சேவையால்தான் நாட்டில் பரிபூரண வளர்ச்சி ஏற்படும். தற்போதுள்ள சம்பிரதாயங்கள், சட்டங்கள், பழக்க வழக்கங்கள் மாற்றப்பட்டுச் சட்டங்கள் இயற்றப் பட்டிருந்தும் அவை நடைமுறையில் சிறிதளவே செயல்படுகின்றன. இவை நாளை முழுமையாக நிறைவேற்றப்படும்.

இந்த வகையில், இன்றுள்ள தமிழக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்திருப்பதும் இங்கே நாம் நினைவுகூரத்தக்கதாகும்.



ஏழை-நடுத்தர வகுப்புப் பெண்களுக்குப் பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி அளித்திடும் வகையில் "ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம்" அமல்படுத்தப்பட்டுள்ளது. வறுமை அகலாத குடும்பப் பெண்கள் எட்டாம் வகுப்போ அதற்கு மேலோ படித்தவர்களாக இருந்தால்- அவர்களின் திருமணச்செலவிற்கென 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்'தின் கீழ் ரூ. 5000/- வழங்குகிறது அரசு. 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்'தின்கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு நான்கு மாதங்களுக்கு, மாதந்தோறும் ரூ50/- வீதம் உதவியளிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல; அரசுப் பணிகளில், பொதுத்துறை நிறுவனங்களில் உள்ளாட்சிகளில், வேலை வாய்ப்பில் 30 சதவிகித இடம் பெண்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் முதல் இரு வகுப்புகளில் பெண்களே ஆசிரியர்களாக அமர்த்தப்படும் நிலை வந்திருக்கிறது.

இதையெல்லாம் விட மேலாக, 1956 ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தைத்திருத்தி, பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் சம உரிமை தர வகைசெய்திடும் அரியதோர் சட்டத்திருத்தம் அண்மையில் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கும் போது, ஒளிமயமான எதிர்காலம் பெண்களுக்கு உறுதி என்கிற நம்பிக்கை பிறக்கிறது நமக்கு.

நீதித்துறை, காவல்துறை, அறிவியல் துறை அனைத்திலும் பெண்கள் மிகுதியாகப் பணி செய்வர். மக்கட்தொகை மதிப்பீட்டின்படி ஐம்பது சதவீதத்திற்கு மேல் பெண்களே நிறைந்திருக்கின்ற இந்நாட்டில் பெண்கள் ஆண்களுக்கு அடிமையரல்லர்; அவர்களுக்குச் சமமானவர்கள் என்று சரித்திரம் படைக்கும் காலமாக எதிர்காலம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# பூண்டி அகழ் வைப்பகம்

கு. தாமோதரன்,
துணை இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் பதினைந்து அகழ்வைப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வகழ்வைப்பகங்கள் அந்தந்தப் பகுதியினுடைய மக்கள் வாழ்க்கை முறை, அவர்களுடைய வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றைச் சித்திரிக்கின்ற வகையில் அமைந்துள்ளன. அந்தந்தப் பகுதிகளில் மேற்பரப்பு ஆய்வின் மூலமும், அகழ்வாய்வின் மூலமும், கிடைக்கின்ற தொல்பொருள்கள் சேகரிக்கப்பட்டுப் பொது மக்கள் பார்வைக்குக் காட்சிப் பொருள்களாக இவ்வகழ்வைப்பகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வகை அகழ்வைப்பகங்களில் ஒன்றான பூண்டி அகழ்வைப்பகத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள் மற்றும் இதர தொல்பொருள்கள் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கால மக்கள் வாழ்ந்த பகுதியில் இவ்வகழ்வைப்பகம் அமைந்துள்ளது மிகவும் சிறப்புடையதாகும். அவர்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் இன்றும் இப்பகுதியில் கிடைப்பது மற்றுமொரு சிறப்பாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்களுடைய நாகரிகம், பண்பாடு, கலையறிவு ஆகியவற்றையும் நாம் தெரிந்துகொள்ளுகின்ற வகையில் பூண்டி அகழ்வைப்பகம் அமைந்துள்ளது.

சென்னையிலிருந்து திருத்தணி செல்லும் நெடுஞ்சாலையில் 54 கி.மீ. தூரத்தில் பூண்டி உள்ளது. பூண்டி நீர்த்தேக்கத்தின் அருகில் அகழ்வைப்பகம் அமைந்துள்ளது.

பூண்டி அகழ்வைப்பகத்தில் பழைய கற்கால, இடைக்கற்கால, புதிய கற்காலக் கல்லாயுதங்களும், வெண்கலக்காலம், இரும்புக் காலம் ஆகிய காலங்களில் அக்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்களும், புதை குழிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற மட்கலங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர், பொன்னேரி வட்டங்கள் வழியாக ஓடும் கோர்த்தலையாற்றுப் படுகைகளில் தொல்பழங்காலக் கல்லாயுதங்கள் கிடைக்கின்றன. பூண்டியிலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களான, நம்பாக்கம், ரங்கா புரம், கிருஷ்ணாபுரம், அத்திரம்பாக்கம், குடியம், கனிப்பாளையம், வடமதுரை, ஊத்துக்கோட்டை, மாதிரிமேடு, தேவேந்திரபாக்கம், புதூர், கரடிப்புதூர் ஆகிய இடங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

திருவள்ளூருக்கு அருகில் குடியம் என்னும் சிற்றூர் உள்ளது. மனசத்தம்மன் மலைக் குன்றுகளின் அடிவாரத்தில் பழைய கற்கால மனிதன் உருவாக்கி வாழ்ந்த குகைகள் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் 16 குகைகளில் மூன்று குகைகளில் தான் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இக்குகைகளின் மேற்பகுதியில் புகை படிந்துள்ளதைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் நெருப்பின் பயனை அறிந்திருந்தனர் எனக் கொள்ளலாம்.

**அத்திரம்பாக்கம்:**

அத்திரம்பாக்கம் கோர்த்தலையாற்றின் வட கரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். இவ்வூருக்கு அருகில் 'பூதடி மன்னுவங்க' என்னும் ஓடை கோர்த்தலை ஆற்றோடு கலக்கிறது. சுமார் 20 அடி உயரமுள்ள படுகை ஒன்றும் இங்கு உள்ளது. இப்படுகையில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்குக் கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலம்:**

எழுத்துச் சான்றுகள் இல்லாத காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனப்படுகிறது.

இது, பழைய கற்காலம் (1,00,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது), நுண் கற்காலம் (10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது), புதிய

கற்காலம் (5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது), பெருங்கற்காலம் (2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் வல்லுநர்கள் இந்தியாவில் பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கருவிகளை இரண்டு மரபுகளாகப் பிரித்துள்ளனர்.

(1) சோஹன் மரபு (2) சென்னை மரபு

**சோஹன் மரபு:**

வடமேற்கு இந்தியாவில் சிந்து நதியின் கிளையான சோஹன் நதிக் கரையில் இம்மரபுக் கருவிகள் அதிகம் காணப்படுகின்றன. எனவே இக்கருவிகளை 'சோஹன் மரபு' என்று அழைக்கின்றனர்.

மதுரை, மஞ்சக்கரணை, கூனி பாளையம், ஏரிக்குப்பம், ஊத்துக்கோட்டை, மதரிமேடு, புதூர், கரடிப்புத்தூர், சத்தியவேடு, போந்தப்பாக்கம், மாதபாக்கம், ரோஷ நகர், அமரம்பேடு, எருமை வெட்டிப்பாளையம், திருமுல்லைவாயில், புத்தூர், திருபெரும்புதூர், பரந்தூர், வதியூர், நாயக்கன்பாளையம், நகரி, மாவண்டூர், அரக்கோணம், புரியமங்கலம், திருமால்புரம், கீழ்வெண்பாக்கம், அம்பரீஷபுரம், தக்கோலம், அவியூர், நின்னியூர், வங்கானங்குடிக்காடு.

**கற்காலக் கருவிகள் கிடைக்கும் வேறு நாடுகள்:**

ஆப்பிரிக்கா, பிரான்சு, ஸ்பெயின், இங்கிலாந்து, ஹங்கேரி, பெல்ஜியம், சீனா, பர்மா, ஜாவா, வடக்கு ஆப்கானிஸ்தான், ஈரான்.

திரிந்தனர். வேட்டையாடுதலையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கிழங்கு, பழங்கள் ஆகியவற்றை உண்டு பசியாறினர்.

**நுண் கற்காலம்:**

தமிழ்நாட்டில் நுண்கற்காலக் கருவிகளை முதன் முதலில் இராபர்ட் புரூஸ்புட் என்பவர் சாயர்புரம் (தேரிகள்) என்ற இடத்தில் கண்டுபிடித்தார்.

தமிழகத்தில் கூத்தம்புளி, கட்டலங்குளம், சாயர்புரம், நாசரேத், மெய்ஞானபுரம், தெ.கல்லுப்பட்டி, பெரிய குளம், கோடாங்கிப் பட்டி, தத்தனோடை, துவரிமான், கொடுமணல், முட்டம் ஆகிய இடங்களில் இக்கருவிகள் கிடைத்துள்ளன.



கோடாரிகள் - புதிய கற்காலம்



அத்திரம்பாக்கம்

ஆற்றுப்படுகைக் கற்குவியலின் நடுவே பழைய கற்காலக் கைக்கோடாரி

**சென்னை மரபு:**

சென்னைக்கு அருகில் இத்தகைய கருவிகள் அதிகம் கிடைப்பதால் 'சென்னை மரபு' என்று அழைக்கின்றனர்.

**பழைய கற்காலம்:**

தமிழ்நாட்டில் பழைய கற்கால மனிதன் வாழ்ந்துள்ளான் என்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில் அவனால் பயன்படுத்தப்பட்ட கற்காலக் கைக்கோடாரியினை கி.பி. 1863 ஆம் ஆண்டு சென்னையை அடுத்த பல்லாவரம் என்ற இடத்தில் திரு. இராபர்ட் புரூஸ்புட் என்பவர் கண்டெடுத்தார்.

**கற்காலத்தில் தமிழர் வாழ்ந்த இடங்கள்:**

குடியம், அத்திரம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ரங்காபுரம், தேவேந்திரபாக்கம், வட

மனிதன் முதன் முதலில் இயற்கையாகக் கிடைக்கும் கூழாங்கற்களை எடுத்துக் கூர்மையாக்கிக் கருவிகளாகப் பயன்படுத்தத் தொடங்கினான்.

கைக் கோடரிகள், கிழிப்பான்கள், சில்லுகள், மழு வட்டுகள், போன்ற கருவிகள், நிலம் அகழ்தல், மரம் வெட்டுதல், இறைச்சி வெட்டுதல், ஈட்டிமுனை சீவுதல், சுரண்டுதல் போன்ற பணிகளுக்கும், மரப்பிடிகளில் பொருத்திக் கோடாரியாகவும் பயன்படுத்தினர். சுழற்றி வீசுதல் போன்ற காரியங்களுக்கும் இக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வாழ்க்கை நிலை:**

கற்கால மனிதர்கள் இயற்கையாக அமைந்திருந்த குகைகளில் வாழ்ந்தனர். காடு மேடுகளிலும் ஆற்றுப் படுகைகளிலும் சுற்றித்

கூரிய முனைகள், ஒருமுகச் செதிள்கள், இருமுகச் செதிள்கள், செவ்வகச் செதிள்கள், இருமுகப் பட்டைகள், அம்பு நுனி, தூண்டில் ஆகிய கருவிகள் நுண்கற்காலத்தைச் சார்ந்தவைகளாகும். இவைகள் மிகச் சிறிய கருவிகள், ஆதலின் கொம்பு அல்லது எலும்பில் பொருத்தி, கத்தி, கருக்கரிவாள், ரம்பம் போன்றவைகளாக உருவாக்கி, சுரண்டுதல், சீவுதல், அறுத்தல் போன்ற தொழில்களில் பயன்படுத்திவந்தனர்.

**வாழ்க்கை நிலை:**

வேட்டையாடுதலே இவர்களின் முக்கியத் தொழிலாகும். இயற்கையாக விளையும் காட்டுத் தானியங்களை உணவிற்காகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். மீன் பிடிக்கும் நுட்பம் தெரிந்தவர்களாகத் திகழ்ந்தனர். பழங்களையும் கிழங்குகளையும் தமது உணவாக்கிக்கொண்டனர்.



பெருங்கற்காலப்பானைகள்
2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை

**புதிய கற்காலம்:**

கரடுமுரடான பழைய கற்காலக் கருவிகளை நன்கு தேய்த்து வழுவழுப்பாக்கிப் பயன்படுத்தத் தொடங்கிய காலம் 'புதிய கற்காலம்' என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் புதிய கற்காலக் கருவிகள் தஞ்சாவூர், சேலம், தர்மபுரி, வடஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன.

கற்கோடாரிகள், உளி, கொத்துக்கருவி, வட்டக்கற்கள், அம்மி, குழவி, தோண்டு கருவி ஆகிய கருவிகள் இக்காலத்தைச் சார்ந்தவைகளாகும். இவ்வகைக் கருவிகள் நிலத்தை அகழ்ந்து எடுக்க, தானியங்களை அரைக்க, விதைகளை ஊன்ற, ஊன் தோல் போன்றவற்றைச் சுரண்ட, மரத்தைப் பிளக்கவும் வெட்டவும், செதுக்கவும் பயன்படுத்தப் பட்டன.

இக்கால மக்கள் எலும்பாலான சில கருவிகளையும் பயன்படுத்தி உள்ளனர். உணவைச் சேகரித்து உண்டு வந்த மனிதன் உணவுப் பொருட்களை விளைவிக்கத் தொடங்கினான். உணவிற்காக அலைந்து திரிந்த மனிதன் நிலையான ஓர் இருப்பிடத்தில் தங்கி வாழ ஆரம்பித்தான். வேட்டையாடுதலைக் காட்டிலும், விளைவித்தலை முக்கியத் தொழிலாக்கிக் கொண்டான். பச்சை மாமிசத்தை உண்டவன், தீயில் வேகவைத்து உண்ணத் தொடங்கினான். தண்ணீர், உணவு தானியங்கள் ஆகியவைகளைச் சேமிக்க மட்பாண்டங்களை உருவாக்கினான். தொடக்கக்காலத்தில் கோரைகளால் வேயப்பட்ட வட்ட வடிவமான குடிசைகளில் வாழ்ந்தான். இக்காலமே மனித நாகரிக வளர்ச்சியின் முதற்கட்டம் ஆகும்!

## 'தமிழரசில் இலக்கிய மணம் கமழ்கிறது!'

1.5.89 இதழில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களின் கட்டுரை 'தமிழ் வளர்த்த பெரியார்' மிகவும் சிறப்புடையதாகும். தமிழுக்குப் பெரிதும் தொண்டு புரிந்த திரு. சி.வை. தாமோதரனார் பற்றிய அந்தக் கட்டுரை மிகுந்த வனப்பம் உடையது.

டாக்டர் ஆர். ராஜேந்திரன்,
திருத்தணி

தமிழாய்ந்த தமிழறிஞர்களைத் தமிழகம் இழந்து கொண்டே வருகிறதே என்னும் ஏக்கம் எங்கள் இதயங்களைப் பிழிகின்ற கால கட்டத்தில், வெளிவரும் தமிழரசின் இதழ்களிலெல்லாம் மறைந்த தமிழ் மாமேதைகளின் கருத்துக் கருவூலங்களை வெளியிட்டு அவர்களை நினைவூட்டுவதற்காகத் தமிழரசுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

-வி. செங்கதிர்
திருக்கழுக்குன்றம்

தமிழரசில் இலக்கிய மணம் கமழ்கிறது. பாராட்டுக்கள்

-ஆர். சுப்பாராஜி,
குருவி குளம்

பாவேந்தர் வாழ்க்கை நிகழ்ச்சிக் கட்டுரைகள் அருமை. இலவச இணைப்பு பயனுள்ளதாக இருந்தது.

-செ.மூ. வேடியப்பன்
எச். ஈச்சம்பாடி

பாவேந்தர் பாரதிதாசனாரின் வண்ணப்படமும், அவருடைய கவிதைகளும் அருமையாக இருந்தன.

-ப.அ. சண்முகம்
களம்பூர்

சென்னையில், சுவாமி சிவானந்தர் சிலை திறப்பு விழாச் செய்தி கண்டோம். நன்றி. பாராட்டுக்கள்.

-தி.கி. சுந்தரம்
மதுரை

'சொன்னதைச் செய்வோம்' இலவச இணைப்பு, நூற்றுக்கு நூறு உண்மை.

-ஜி.எம். மகேந்திரன்
கற்பகநாதர் குளம்

(இதேபோன்று பாராட்டி எழுதியிருப்பவர்கள் வெ.சங்கரநாராயணன், திருவண்ணாமலை-1, எஸ். பிரபாகரன், மேல் பாலானந்தல், பி. சாஸ்திரி குமார், பாலமார்த்தாண்டபுரம்)

அண்ணல் அம்பேத்காரைப் பற்றிய கட்டுரை, அவரின் ஈடற்ற தொண்டை எடுத்துக் காட்டுவதாக விளங்கியது.

-சு. கோபி,
ஆவடி

(இதே கட்டுரையைப் பாராட்டி எழுதியிருப்பவர்: வி. பதுமாவதி, செதுவாலை)

'உழைப்பே உயர்வு' அறிஞர்களின் பொன்மொழிகள் பாதுகாக்கப்பட வேண்டியவை.

- கே. சம்பத்குமார்
பரங்கிப்பேட்டை

பேரறிஞர் அண்ணா அவர்களின் தொழிலாளர்கள் பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது.

-எம். முருகன்
வில்வாரணி மோட்டூர்

16.5.89 இதழில் வெளியான செய்திகள் அனைத்தும் பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷங்கள்.

-மு.க. வெற்றிவேல்
உதயமார்த்தாண்டபுரம்

சட்டமன்றப் பொன் விழா - அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றிய தொகுப்பு அருமை.

—பா.மா. வெங்கடாசலபதி
பாப்பாங்காட்டூர்

'அண்ணா சொன்ன கதை' படித்து ரசித்தேன். வெண்பாப்போட்டி, இதழுக்குப் பெருமை சேர்த்தது.

-பாவேந்தன்
பரமன் குறிச்சி

**பார்த்தோம் படித்தோம்**

# பேசுதமிழ் பெற்ற பேறு





கவிஞர்
கரந்தை கணேசன்

வீங்குதோட்கோர் உவமையென ஓங்கி நிற்கும்
மேற்குமலை நாட்டுமன்னன் பொறையன் என்பான்
தேங்குகின்ற அறிவுதனை அருவி யாக்கத்
தெற்குத்தேன் சுவைத்தமிழை உண்ணச் சென்றான்
ஏங்குகின்ற இளையவளாம் மகுட ராணி
''எனைவிட்டீர்! ஏனெ''ன்றே வந்து தொட்டாள்
''தூங்குகின்ற உணர்வுகளைத் தூண்ட வந்த
தூண்டாத மணிவிளக்கே! சொல்வேன் கேட்பாய்.

முப்பாலுக் கப்பாலும் ஓர்பால் உண்டே
மூத்தநிலா போன்றவளே யாதாம்?'' என்றான்
''ஒப்பேதும் இல்லாத தமிழ்ப்பால்'' என்றாள்
''ஒப்பாவாய் பாவாய்நீ அப்பால் ஆவாய்!
அப்பாலை நான்பருகப் போனேன்; நீயோ
அதற்கிங்கே தடையாக லாமா?'' என்றான்
''தப்பேதும் நானதற்கே இழைப்ப துண்டோ
தமிழுறவே நம்முறவு படிப்போம்'' என்றாள்

பண்ணமைந்த யாழ்மொழியாள் பார்வை வீச்சில்
பலபாடம் படிக்கின்ற பாரின் வேந்தன்
எண்ணமைந்த நெஞ்சோடே ஏடு தூக்கி
எதிரமர்ந்த பெண்ணரசை நோக்கும் போதில்
கண்ணமைந்த முரசுதனைக் காவல் காக்கும்
காவலனின் வரவுகண்டான், ''என்ன?'' என்றான்
''மண்ணமைந்த இடமெல்லாம் அளந்த வேந்தே!
மணிமுரசக் கட்டில்...'' என நிறுத்திப் பின்னர்;

''நடந்தசெயல் இன்னதென இயம்பு தற்கு
நாவினிலே சொல்லில்லை, எழவும் இல்லை;
நடந்திடவே கூடாத செயல்தான்; ஆனால்
நடந்துவிட்ட திங்கே மன்னிப்பீர் மன்னா!
கடந்திடவே முடியாத படையின் முன்னே
கடந்துசெலும் நம்முரசை நீராட் டத்தான்
இடமகன்ற கட்டில்விட் டெடுத்துச் சென்றோம்;
எடுத்திட்ட அவ்விடத்தில் ஒருவன்''. என்றான்

''எடுத்திட்ட அவ்விடத்தில் ஒருவன்! என்றாய்;
எடுக்கின்றாய் ,தொடுக்கின்றாய்; முடித்தாய் இல்லை;
விடுக்கின்ற கணையைப்போல் சொற்கள் தம்மை
விடுப்பதற்குப் பயின்றவன்நீ; விம்மு கின்றாய்;
தடுக்கின்ற தெதுவுன்னை?'' என்றான் மன்னன்
''தடுக்கின்ற தெவனோஅக் கட்டில் தன்னில்
படுத்தங்கே உறங்குகின்ற உறக்கம்''என்றான்
''படுத்தானா? படுத்தாங்கே துயில்கின் றானா?

இதைச்சொல்ல இந்நேரம் போக்கி னாயா?''
எனமன்னன் பதைத்தெழுந்தே பறந்தான் அங்கே!
''இசைபட்ட என்குடிக்கு வசையா வாய்க்கும்?
என்னாட்சி என்னாச்சாம் எனும்பேர் நிற்க?
அசையட்டும் அவனுடலம்; இரத்தச் சேற்றில்
ஆழட்டும் அவன்சடலம்! ஆமாம்! ஆமாம்!
பதைக்கட்டும், பதைக்கட்டும் நானும் பார்க்கப்
பச்சைரத்தம் குடிக்கட்டும் கட்டில்'' என்றான்.

வேகம்நிறை சொற்களினால் விரைந்த வேந்தன்,
விரைந்தங்கே வீசிடுவான் வாளை! அந்தோ!
சாகவேதான் ஒருயிரும் போகு தென்றே
சரியாக எல்லாரும் எண்ணும் போதில்
தாகவிடாய் கண்டவன்தான் தண்ணீர் கண்டால்
தாமரைபோல் ஆகிடுவான்; அவன்போ லானான்;
''சாகவோதான் இவர்வந்தார்'' என்றான்; நின்றான்
தன்வாளை உறையுளிட்டான் விரைந்தான் உள்ளே.

சூழ்ந்திருந்த காவலர்கள், ஏவ லாளர்
துணையாளர் யாவருமே வியந்த நோக்கில்
ஆழ்ந்திருந்தார்; மன்னனாங்கோர் விசிறி தூக்கி
அதிவிரைவாய் வேழமென வந்தான்; மெல்லத்
தாழ்ந்துபார்த்தான்; களைப்படைந்தார் கட்டில் கண்ட
தமிழ்ப்புலவர் தூக்கத்தில் ஆழ்ந்தார், ஆகா!
சூழ்ந்திருக்கும் அனைவர்க்கும் சொல்வேன்; இங்கே
சுவைத்தமிழ்தான் தூங்குவது காண்பீர்!'' என்றான்.

''தூசுபடாத் தூய்தமிழில் தும்பைப் பூப்பாத்
தொடர்நெய்யும் மோசுகீரன் இவர்தான்'' என்றான்
வீசுதடா தென்றலெனக் கூறு மாறு
விசிறிதூக்கி முழவுத்தோள் ஓச்சு கின்றான்;
பேசுதல்தான் இனியெதற்காம்? பேசு கின்றான்;
''பெரும்பிழையைப் புரிந்திடவே இருந்தேன்; ஆனால்;
பேசுதமிழ் வாழ்வதற்கு விசிறி தூக்கும்
பெரும்பேற்றை எவர்பெற்றார் என்போல்!'' என்றான்.










# வறட்சிப் பகுதியில் ஒரு பசுஞ்சோலை

# அண்ணா பண்ணை

மன்னராட்சிக் காலத்தில் புகழ்மிக்க சமஸ்தானமாக விளங்கிய புதுக்கோட்டை, அந்நிய ராட்சி அகன்றபின் 1948-ல் இந்திய நாட்டோடு இணைந்து தமிழ்நாட்டின் ஒரு மாவட்டமாகிய திருச்சி மாவட்டத்தின் ஒரு வருவாய்க் கோட்டமாக மாறியது. பொலிவுமிக்க-வரலாற்றுப் புகழ்மிக்க-கலைச்சிறப்புமிக்க, புதுக்கோட்டை ஒரு தனி மாவட்டமாக வடிவம்பெற வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கனவாகும். அந்தக் கனவு 1974-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 14-ஆம் நாள் நிறைவேறியது. ஆம், அன்றுதான் தமிழகத்தின் 15-ஆவது மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டம் உருவாகியது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இம்மாவட்டத்தைத் துவக்கிவைத்து மக்களின் உள்ளக்கிடக்கைக்கு நல்லதோர் உருவம் தந்தார்.

கல்லிலே கவிபாடும் ஆவுடையார் கோவில் சிற்பங்களையும் - அற்புதமிகு சித்தன்னவாசல் சித்திரங்களையும் பெற்று, தமிழகத்தின் கலைப் பெருமையை எடுத்துரைக்கும் மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டமாகும். இம்மாவட்டம் பரப்பளவில், மக்கள் தொகைக் கணக்கில் தமிழகத்தின் சின்னஞ்சிறு மாவட்டங்களில் ஒன்று என்றாலும், பெருமை மிகு மாவட்டமாகத் திகழ்கிறது.

## குடுமியாமலை அண்ணா பண்ணை

தமிழகத்தின் பெரிய விதைப் பண்ணைகளில் ஒன்றான குடுமியாமலை அண்ணா பண்ணை இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. வறட்சி மிகுந்த பகுதியல் ஒரு பசுஞ்சோலையை உருவாக்க முடியும், ஆற்றுப் பாசனம் இல்லாத இடத்தில் பசுமைப் புரட்சிகண்டு வெற்றியடைய முடியும், என்பதற்கு எடுத்துக்காட்டாக-அண்ணா பண்ணை காட்சி தருகின்றது.

''வேளாண்மைத் துறையை வலிவடையச் செய்துவிட்டால் நம் தொழில்களுக்குத் தேவையான மூலதனத்திற்கு எவரிடமும் உதவிநாடி நிற்கத் தேவையில்லை'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு நல்லதோர் நிலைக்களனாகத் திகழ்ந்திடும் வேளாண்மைத் துறையின் விரிவாக்கத்திற்கு ஆக்கம் தரும் அண்ணா பண்ணை 6.8.1967இல் பேரறிஞர் அண்ணாவின் சீரிய வழிகாட்டுதலில் தொடங்கப்பட்டதாகும்.

புதுக்கோட்டை-மணப்பாறைச் சாலையில் குடுமியாமலை வயலோகம் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ள அண்ணா பண்ணை தொடக்க காலத்தில் 1017 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டிருந்தது. மாநிலப்பயிற்சி மையம், வேளாண்மை சார்ந்த பிற நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நிலம் வழங்கப்பட்டதுபோக, தற்போது சுமார் 637 ஏக்கர் பரப்பளவில் அண்ணா விதைப்பண்ணை அமைந்துள்ளது.

இதில் 130 ஏக்கர் நீர்ப்பாசன வசதி கொண்டதாகவும் 179 ஏக்கர் மானாவாரி நிலமாகவும் உள்ளது. மேலும், 116 ஏக்கர் பரப்பில் மரவகைப்பயிர்கள் உள்ளன. இங்குள்ள நிலம் செம்மண் வகையைச் சார்ந்தது. அதிக நீர்ப்பிடிப்புத்திறன் அற்றது. நிலவளமும் குறைந்தது. நில உபயோகத் திறன் பகுப்பாய்வில் ''வயலோகம் வரிசை'' என மண்ணியல் நிபுணர்கள் குறிப்பிடுவார்கள். அப்படிப்பட்ட வறண்ட பகுதியில்தான் வளம்மிக்க அண்ணா பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது.

பயறு மற்றும் எண்ணெய் வித்து மூல விதை உற்பத்தி, சிறுதானியம், பயறு, காய்கறி, நெல் ஆகியவற்றால் ஆதார மற்றும் சான்று விதை உற்பத்தி, சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்திற்குச் செயல்விளக்கம், பண்ணைக் காடுகள் வளர்ப்புத்திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் விநியோகம், சுற்றுப்புற உழவர்களுக்குத் தொழில்நுட்பக் கருத்துக்களைப் பரப்புதல்

போன்ற குறிக்கோள்களைக் கொண்டு இயங்குகிறது இப்பண்ணை.

### தரம்மிக்க விதைகள்

பயிருக்கு விதை ஆதாரமாகும். பயிர் செழிக்க விதை தரமுள்ளதாக இருப்பது அவசியமாகும். அத்தகைய தரமிக்க விதைகளை உற்பத்தி செய்து நாடு முழுமைக்கும் விநியோகிக்கும் மையமாக அண்ணா பண்ணை விளங்குகின்றது.

அகில இந்திய அளவில் வெளியிடப்படும் வீரிய ஒட்டு வித்துக்களான கம்பு, சோளம், மக்காச் சோளம் ஆகிய பயிர்களின் தாயின வித்துக்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கே.எம்.1, கே.எம்.2 என்ற இரண்டு வகையான வீரிய ஒட்டு கம்பு ரகங்கள் இப்பண்ணையில் பரிசோதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு மட்டுமின்றி பிற மாநிலங்களுக்கும் அண்ணா பண்ணையிலிருந்து விதைகள் அனுப்பப்பட்டு அங்கு இருப்பவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாராட்டப்படுகிறது என்றால் இப்பண்ணையின் சீரிய பணிக்கு சான்றுபகர வேறு என்ன வேண்டும்?

இதனைத்தவிர பூசா என்றழைக்கப்படும் வீரிய ஒட்டுக்கம்பு ரக விதை உற்பத்தியும் அண்ணா பண்ணையில் நடைபெற்று வருகிறது. மேலும் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் புதிய ஒட்டுக் கம்பு ரகங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியும் நடைபெற்று வருகிறது.

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் கே.எம்.2 பாசிப் பயறு, பூசா 152, தட்டைப் பயிறு, டி.9 உளுந்து, வம்பன் உளுந்து ஆகியவையும் நிலக்கடலையில் கோ.1 ரகமும் மூல விதைக்காக அண்ணா பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

காய்கறி விதை உற்பத்தியிலும் அண்ணா பண்ணை சிறந்து விளங்குகிறது. அண்ணா பண்ணை விதைகள் தரமுள்ளவைகளாக இருப்பதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் கே.1 மிளகாய் விதைகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்புள்ளது. ஆண்டுதோறும் சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய் பயிரிடப்பட்டு சுமார் 3 மெட்ரிக் டன் அளவிற்கு மிளகாய் விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. இதைத்தவிர,



குடுமியா மலையில் உள்ள அண்ணா பண்ணைக்கு 6.5.1971 அன்று வருகைபுரிந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பண்ணையில் விளைந்த சோளக் கதிர்களைப் பார்வையிடுகிறார்.

வெண்டை, தக்காளி, கத்தரி, புடலை விதைகளும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு, தோட்டக்கலைத் துறையின் மூலம் வழங்கப்படுகின்றன. ''பர்பானி கிரந்தி'' என்ற புதிய வெண்டை ரகத்தின் விதைகளும் இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன.

தாயின விதை, மூலவிதை, காய்கறி விதைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதுடன் பல புதிய ரகங்களைச் சோதித்து அறிமுகப்படுத்தும் சோதனைக் கூடமாகவும் அண்ணா பண்ணை விளங்குகிறது.

ஆந்திர மாநிலத்திலுள்ள 'இக்கிரிசாட்' என்றழைக்கப்படும் அகில உலக வறட்சிப் பகுதிக்கான பயிர் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிடும் பல புதிய ரக விதைகள் அண்ணா பண்ணையில் பரிசோதிக்கப்பட்டு, உழவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஐ.சி.பி.எல். 87 என்ற துவரை ரகம், இந்த வகையில் பரிசோதிக்கப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதைப் போன்று பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து அறிமுகமான செஸ்பேனியா ரோஸ்ட்ரேட்டா என்ற பசுந்தாள் உரப்பயிரும் சோதனை அடிப்படையில் சாகுபடி செய்யப்பட்டு அதன் விதைகள் மாநிலமெங்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அண்ணா பண்ணை விதை உற்பத்தி செய்வதுடன், விதைகளைச் சுத்தப்படுத்தி சான்றிதழ் பெற்ற விதைகளாக வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகம் செய்கின்ற பணியையும் ஆற்றிவருகிறது.

புதுக்கோட்டை, அறந்தாங்கி விதை மையங்களிலிருந்து பெறப்படும் நெல், சிறுதானிய விதைகள் இப்பண்ணையிலுள்ள விதைப் பக்குவ நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு சான்றிதழ் பெற்ற விதைகளாக வழங்கப்படுகின்றன. இந்த விதைப் பக்குவ நிலையத்தில் ஆண்டுதோறும் சுமார் 800 மெட்ரிக் டன் விதைகள் விதைப் பக்குவம் செய்யப்படுகின்றன. இதன் மூலம் பண்ணைக்கு சுமார் ரூ 2.5 இலட்சம் வருவாய் கிடைக்கிறது.

பண்ணைக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து வழங்குகின்ற பணியையும் அண்ணா பண்ணை ஆற்றி வருகிறது. சூபா புல், இலவன், வேம்பு, புளி, மூங்கில் போன்ற மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் குறித்து விளக்கும்போது மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு சையது பசுலுல்லா, சுவீடன் நாட்டின் நிதி உதவியுடன் ரூ 1.75 இலட்சம் செலவில் பண்ணைக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட இருப்பதாகத் தெரிவித்தார்.

நீர் நிர்வாகத்தில் புதிய அணுகுமுறைகளான நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம், காற்றாலை போன்றவை இப்பண்ணையில் செயல்படுத்தப்பட்டு இங்கு வரும் உழவர்களுக்கும், வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கும் செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது.

விவசாயத் தொழிலாளர்களுக்கும், கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் நிறுவனமாகவும் அண்ணா பண்ணை திகழ்கின்றது. வேளாண்மை விரிவாக்கப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் மாநிலப் பயிற்சி நிலையம், மண்ணின் தன்மையை அறிந்து அதற்கேற்ப உரமிட்டுப்பயன்பெற உழவர்களுக்கு உதவிடும் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், விதைகளின் முளைப்புத் திறனைச் சோதிக்கும் விதைப் பரிசோதனை நிலையம், மண் மாதிரிகளைச் சோதிக்கும் மண் பரிசோதனை நிலையம், விவசாயிகளுக்கு பயிர்த்தொழில்நுட்பம் குறித்த பயிற்சியினை அளிக்கும் உழவர் பயிற்சி நிலையம், பண்ணை மகளிருக்குப் பயிற்சியளிக்கும் தான்வா நிறுவனம் மற்றும் தோட்டக்கலைப் பயிற்சி நிலையம், நுண்சத்து உற்பத்தி நிலையம் ஆகியவற்றை அருகருகே பெற்றிருப்பதால் அண்ணா பண்ணை ஒரு பெரும் வேளாண்மை வளாகமாக-பல்கலைக் கழகம் போன்றதொரு அமைப்பாகக் காட்சியளிக்கின்றது.



மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் 9.3.89 அன்று அண்ணா பண்ணையினைச் சுற்றிப் பார்த்தார்.

## அண்ணாவின் நினைவைப்போற்ற

வேளாண்மைத் துறையில் ஒரு பெரும் புரட்சியை விளைவிக்க வேண்டும் என்று விழைந்த அறிஞர் அண்ணாவின் வழிகாட்டுதலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பண்ணையில், அண்ணாவின் நினைவைப் போற்றும் வகையில் அழகிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அதில் அண்ணாவின் உருவச்சிலையை முதல்வர் கலைஞர் அவர்கள் 1971 மே 6 அன்று திறந்து வைத்தார்.

அண்மையில் அண்ணா பண்ணைக்கு வருகைதந்த மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் விதை உற்பத்தியிலும், வேளாண்மைத்துறையில் புதிய முயற்சிகளைச் செயல்படுத்துவதிலும் இப் பண்ணை ஆற்றிவரும் பணியைக்கண்டு இப் பண்ணையின் வளர்ச்சியில் அரசு கொண்டுள்ள அக்கறையைத் தெளிவுபடுத்தினார்.

''அண்ணா பண்ணையின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் இங்குள்ள பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துதல், புதிய பாசனக் கிணறுகள் அமைத்தல் போன்ற பணிகளைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றினைத் தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும்'' மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சிறப்பையும், தமிழ்நாட்டிற்குப் பெருமையையும் அளிக்கும் அண்ணா பண்ணையின் வளர்ச்சிக்காக தொடக்கநாள் தொட்டு அரசு இதுவரை ரூ 29 இலட்சம் செலவழித்துள்ளது. இந்தப் பண்ணை இதுவரை சுமார் ரூ 45 இலட்சம் நிகர வருவாய் ஈட்டி வளர்ச்சிப் பாதையில் வெற்றி நடை போடுகிறது.

பேரறிஞர் அண்ணாவின் நினைவிற்கோர் அழியாச் சின்னமாக விளங்கிடும் இப்பண்ணை தாயகத்தின் பசிப்பிணிபோக்கும் வேளாண்மைத்துறையில் ஓர் அங்கமாக இருந்து, விவசாயிகளுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக என்றும் திகழும் என்பதில் ஐயமில்லை.

**இரெ. மகாலிங்கம்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை

# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

''தமிழ்மொழி எழுத்துக்களின் வரிவடிவ அமைப்பை மாற்றி அமைப்பது அறிவியல் வளர்ச்சியின் இன்றைய வேகத்துக்கும் கணிப் பொறியின் பயன்பாட்டுக்கும் ஈடுகொடுப்பதற்கு வேண்டப்படுகிறது என்று கருதும் அறிஞர் சிலர் தமிழ் எழுத்து எந்த வகையில், எப்படிப் பட்ட வடிவுடையதாகமாற்றப்படவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை வெளியிட்டு, அதனை ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும் என்று சில ஆண்டுகளாகவே கூறிவருகின்றனர்.

தமிழ் உணர்வு தழைத்தோங்கப் பணியாற்றும் மதிப்பிற்குரிய முத்தமிழ்க் காவலர் அவர்களும், அண்மையில் இயற்கை எய்திய மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களும் மற்றும் பலரும் ''தமிழ் எழுத்தின் வரிவடிவ மாற்றம், தமிழுக்கு ஆக்கமாகாது. மாறாக அதன் தனித்தன்மையும், வழிவழி வந்த இலக்கிய வளமும் இழக்கப்பட ஏதுவாகும்'' என்றும், அதனால் வரிவடிவ மாற்றம் எதுவும் ஏற்கப் படக்கூடாது'' எனவும் வலியுறுத்திக் கூறி உள்ளனர்.

தமிழ்மொழி எழுத்துக்களின் வரி வடிவத்தில் தந்தை பெரியார் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட எளிய சீர்திருத்தத்தை மட்டுமே தமிழக அரசு நடைமுறையில் மேற்கொண்டுள்ளது. வேறு எந்த வகை யான வரிவடிவ மாற்றத்தைச் செய்திடவும் இந்த அரசு கருதவில்லை. எந்த ஒரு மாற்றத்தைச் செய்வது பற்றியும் எவ்வித கருத்துருவும் அரசிடம் இல்லை.

வரிவடிவ மாற்றம் செய்வது பற்றி ஆய்வு செய்யக் கருதினால், அது குறித்து தமிழறிஞர்கள் அனைவரின் கருத்துக்களையும் அறியும் முயற்சியை மேற்கொண்டு, அவர்களை அழைத்துக் கலந்தாய்வு நிகழ்த்தாமல் கலைஞரின் அரசு எந்த முடிவும் மேற்கொள்ளாது என்பதைத் தமிழக மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 1.6.89 அன்று விடுத்த அறிக்கையிலிருந்து)**

# சென்னை புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாறு

பண்டைக் காலந்தொட்டே இந்தியாவின் சோழ மண்டலக் கடற்கரை வாணிபத்தினால் மேலோங்கியிருந்தது. முதலில் ரோமானியர், கிரேக்கர், அராபியர்களும் பின்னர் காலக்கழிவில் டச்சுக்காரர்களும், டேனிஷ்காரர்களும், போர்ச்சுக்கீசியர்களின் எழுச்சிக்குப் பின், தொடர்ந்து வந்த பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயரும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தினர்.

கி.பி. 1630 ஆம் ஆண்டின் ஆரம்ப காலகட்டத்தில் இந்தியாவின் இரு பக்கங்களிலுமுள்ள கடலோரங்களிலிருந்து வியாபாரத்தைக் கவனித்து வந்த ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி தங்களுக்கென வளமிக்க நிரந்தர அடித்தளத்தைத் தேடியது. இந்நிலையில் மதராஸ் பட்டணம் என்றழைக்கப்பட்ட சிறு மீனவக் குப்பத்தினின்று மூன்று மைல்களுக்குள் இருந்த எவருக்கும் உரிமையற்றிருந்த ஓரிடத்தில் அங்குள்ள குப்பத் தலைவர்களின் அனுமதியோடு பேக்டர் பிரான்சிஸ் டே என்பவரால் இன்றைய சென்னை உருவாக்கப்பட்டது. அதற்கான ஒப்பந்தம் 1639-ஆம் ஆண்டு ஜூலை 22-ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனியினர் திரு. டே என்பவருக்கு, அரணுடன் கூடிய கோட்டை ஒன்று கட்ட அனுமதித்திருந்தும், மூன்று பக்கமும் மலைப் பாறைகளும், மணற்பாங்கான ஆறு மற்றும் கடற்பகுதி கொண்ட இவ்விடத்தில் மாளிகையொன்று கட்டுவதில் மகிழ்வுற்றாரில்லை; திரு. டே என்பவரின் மேலதிகாரியான ஆண்ட்ரூ கோகன் என்பவரின் ஊக்கமும் டேயின் சொந்தப்பணமுமே, இன்றைய புனித ஜார்ஜ் கோட்டை அந்நாளில் கட்டப்பட மூலகாரணமாயிற்று.

சென்னையைத் தோற்றுவித்த மூதாதையராகிய அவ்விருவரையும் இன்று எவரும் நினைப்பதே அரிதாயுள்ளது. காரணம் - அன்றைய கிழக்கிந்தியக் கம்பெனியினரே அவர்களைப் புறக்கணித்தனர். ஆனால், அவ்விருவரும் அக்கம்பெனியினின்று வெளியேறுவதற்கு முன்னர் கிழக்கிந்தியக் கம்பெனியின் அடித்தளமாக அமைந்த புனித ஜார்ஜ் கோட்டையை முழுமையாக உருவாக்கிய பின்னரே வெளியேறிச் சென்றனர்.

1640-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாள் திரு. 'டே' கோட்டையினைக் கட்டும் பணியினைத் துவக்கினார்; அவ்வாண்டு இறுதிக்குள்ளாகவே அது முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது. கோட்டைக்கு சூட்டப்பட்ட பெயர்க்காரணத்தை விளக்கி புனித ஜார்ஜின் நினைவு நாளாகிய ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாளில் கோட்டையை திரு 'டே' ஒப்படைத்தார். 1641-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாள், கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவரான திரு. கோகன் என்பவர் கோட்டையின் பொறுப்பை ஏற்றார். அன்று முதல் சென்னை வளர ஆரம்பித்தது. இன்றும் வளர்ந்து கொண்டே உள்ளது.

## கிளைவ் முனை

ஆங்கிலப் பேரரசை உருவாக்கியவர்களான எலிஹூ யேல், ராபர்ட் கிளைவ், ஜோப் சார்னாக், ஆர்தர் வெல்லெஸ்லி (பின்னர் வாட்டர்லூவின் வெல்லிங்டன் என அழைக்கப்பட்டவர்), மாக்கன்ஸி, மன்ரோ, வில்லியம் பெண்டிங்க், வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன்





யேல் ராபர்ட் கிளைவ்

வாலிஸ் மற்றும் லார்டு வெல்லிங்டன் போன்ற பலர் இன்று உயர்ந்து நிற்கும் அகன்ற இம்மதில்களுக்குள்தாம் வாணிகத்தையே கற்றனர் எனலாம்.

பேரரசைத் தொடங்கி வைத்த ராபர்ட் கிளைவு டன் பிரெஞ்சுத் தளபதி டியூப்ளே முதன்முதலில் போரிட்டு, 1746-ல் புனித ஜார்ஜ் கோட்டை பிரெஞ்சுக் காரர்களின் வசமாகிய பின்னர், கிளைவ் சொந்த நாட் டிற்குத் திருப்பியனுப்பப்பட்டார். மீண்டும் 1749-ல் புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயரின் வசமாகிய போது திரும்பி வந்தவர்களில் முதலிடத்தைப் பெற்றவர் ராபர்ட் கிளைவ்.

இங்கிருந்துதான் கிளைவ், ஆற்காடு மீது 1752-ல் போரிட்டு முதன்முதலாக வெற்றி பெற்றார். அமெரிக்க வாணிகருடைய இல்லமொன்றில் கடற்படை ஆட்சிக் குழு செயற்பட்டு வந்தது. கடற்படை சம்பந்தமான வழக்குகள் இங்கு நடத்தப்பட்டு வந்தன; இதுவே பின்னர் கிளைவ் இல்லமாயிற்று. பின்னர் இதனை ஆளுநர்கள் நகரில்லமாகப் பயன்படுத்தி வந்தனர். 1802 ஆம் ஆண்டில் விருந்து மண்டபம் ஒன்று கட்டப் படும் வரை இவ்வில்லம் விதி முறைகளுக்குட்பட்ட பொழுதுபோக்கிடமாகவும் பயன்பட்டு வந்தது.

பின்னர் சம்பளக் கணக்கு அலுவலகம் செயல்பட்டு வந்த இவ்வில்லத்தில் 1975-ல் கிளைவ் அவர்களை சிறப்பிக்கும் வகையில் மாடமொன்று கட்டி, அவரது சீரிய பணிகள் பற்றியும் மாளிகையின் தொன்மை பற்றியும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

## தலைமைச் செயலகம்

கிளைவைத் தொடர்ந்து பாஸ்டனில் பிறந்த திரு. 'யேல்' என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழிய ராக சென்னையில் 1672-ல் பொறுப்பேற்று, பின்னர் 1687 முதல் 1692 வரை ஆளுநராகப் பணிபுரிந்தார். இவரது வருவாயின் ஒரு சிறு பகுதியைக் கொண்டு அமெரிக்க நாட்டில், கன்னக்டிகட் என்னுமிடத்தில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 'யேல்' பல் கலைக்கழகமாக உருமாறியுள்ளது. இப்பல்கலைக் கழகம்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது அவரைச் சிறப்பிக்கும் வகையில் ''டாக்டர்'' பட்டம் வழங்கியது.

இன்று ஆசியக் கண்டத்திலே உள்ள கொடிக் கம் பங்களிலேயே மிக உயரமானதொன்றாக விளங்கும் புனித ஜார்ஜ் கோட்டைக் கொடிக்கம்பத்தில் 'யேல்' அவர்கள் பொறுப்பில் புனித ஜார்ஜ் கோட்டை இருந்த காலத்தில் தான் ''யூனியன் ஜாக்'' எனும் ஆங்கிலேயக் கொடி 1687-ல் முதன் முதலில் ஏற்றப்பட்டது.

அந்நாளைய சென்னையின் வளர்ச்சியில் திரு. யேல் அவர்களுக்கு பெரும் பங்குண்டு. மிக உயரிய பண்பாடு களுடையவரும், ஆங்கிலேயர் மற்றும் இந்தியர்களாலும் மிகவும் விரும்பப்பட்டவருமாகிய திரு.யேல் அவர்கள் தான் சென்னை மாநகராட்சியை அமைத்திடவும், புனித ஜார்ஜ் கோட்டையைப் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றிய போது சோழமண்டலக் கடற்கரையில் ஆங்கிலேயருக்குப் பற்றிடமாக விளங்க கடலூர் புனித டேவிட் கோட்டை கட்டப்படவும் பெரிதும் துணை புரிந்திருக்கிறார்.

மொகலாயர்களிடமிருந்து சோழ மண்டலத் துறை முகங்கள் பலவற்றின் உரிமையைக் கிழக்கிந்தியக் கம் பெனிக்கென பெற்றுத் தந்ததோடு மொகலாய நாண யத்தை அச்சிடும் உரிமையையும் திரு யேல் அவர்களே பெற்றுத் தந்தார். 1689-ல் முதல் இந்தியப் படையினை அமைத்ததோடு, திருவல்லிக்கேணி, தண்டையார் பேட்டை, புரசைவாக்கம், எழும்பூர் போன்ற பகுதி களின் முழு உரிமையையும், மொகலாயர்களிடமிருந்து மானியமாகப் பெற்றுத் தந்தார். இவர் பதவியை விட்டுச் சென்ற ஓராண்டு காலத்திலேயே கிழக்கிந்தியக் கம் பெனி நிர்வாகம் ஆட்டம் கண்டது.

பதவிக்காலம் முடிவுற்று ஓய்வு பெற்ற பின்னரும் தமக்கென ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டு, சென்னையிலேயே திரு. யேல் தொடர்ந்து வாழ்ந்தாலும் கம்பெனியின் பேரவை மண்டபத்தை உள்ளடக்கிய கோட்டையில்லத்தில் ஆளுநராக அவர் வாழ்ந்த ஆண்டுகளே அவரது வாழ்க்கையின் பொன்னான ஆண்டுகளாகும். இந்த இல்லம் 1694-95-ல் இடிக்கப் பட்டு, அந்த இடத்தில் மூன்றடுக்குக் கட்டிடமொன்று கட்டப்பட்டது. அதுவே இன்றைய தலைமைச் செயலகக் கட்டிடமாகும்; அதன் பக்கக் கட்டிடங்கள் பல 1825-ல் கட்டப்பட்டு இதனுடன் சேர்க்கப்பட்டன. சென்னையில் உள்ள நவீன கட்டிடங்களில் இக்கட்டிடமே பழமை மிக்க இரண்டாவது கட்டிடமாகவும், புனித மேரி கிறித்துவ ஆலயத்தைவிட பதினைந்து ஆண்டுகள் இளமையானதும் ஆகும்.

கோட்டையில் இன்றுள்ள தலைமைச் செயலகம் நேர்த்தியான கட்டிட அமைப்புள்ளதாகும்: இயற்கை வனப்புடைய கலையழகு ஒளிரும் இக்கட்டிடத்தின் முன்பகுதியில்தான் சட்டமன்றப் பேரவை மண்டபம், 1910-11-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

## புனித மேரி ஆலயம்

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கிறித்துவ ஆலயம், வான் முகட்டைத் தொடுவது போன்ற இதன் உயரமான கோபுரம் கோட்டையிலுள்ள கட்டிடங்கள் அனைத்தி லும் சிறப்பு வாய்ந்ததாகும். 1678-80-ன் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் முதன் முதலாகக் கட்டப்பட்ட ஆங்கிலேய பிராட்டஸ்டண்ட் ஆலயமாகிய இஃது ஆசி யாவிலேயே மிகத் தொன்மை வாய்ந்ததாகும்; இவ்வால யம் கோட்டையில் குடியிருந்தோர்களிடமிருந்து திரட்டப் பட்ட தொகையினின்று கட்டப்பட்டதாகும்; தொகை யளித்தவர்களில் முதலிடம் வகித்தவர் ஆளுநர் ஸ்டி ரைன்ஷாம் மாஸ்டர்; இவ்வாலயம் 1678-ஆம் ஆண் டில் 'தூய கன்னி மேரி' யின் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 1680 அக்டோபர் திங்கள் 28-ஆம் நாள் புகுவிழா நடத்தப்பட்டது.

# கலைஞர் கருத்துமணிகள்



★ ஒவ்வொருவரும் நூல் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது படிக்க வேண்டிய நூல்களைப் படித்திட வேண்டும்.

● ● ●

★ கல்வித்துறையில் ஒரு நாடு பெற்றிருக்கின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே அதன் பொருளாதார வளம் இருக்கிறது. இதில் நாம் பெற்றிருக்கிற வளர்ச்சி எத்தனை பேர் படித்தார்கள் என்பதில் இல்லை. எத்தனை கல்லூரிகள் திறக்கப்பட்டன என்பதில் இல்லை. எத்தனை கட்டடங்களில் அதற்கான வசதிகளைச் செய்து தந்தோம் என்பதில் இல்லை. எத்தனை ஆசிரியர்கள், ஆசிரியைகள் இருக்கிறார்கள் என்பதில் இல்லை. இவைகளுடன் தரமான கல்வியை, தகுதியான கல்வியை - விஞ்ஞான பூர்வமான கல்வியை - பகுத்தறிவூட்டும் கல்வியை எந்த அளவுக்குப் பெறுகிறோம் என்பதில் தான் இருக்கிறது.

● ● ●

★ மலர் என்று சொன்னால் நாம் எவ்வாறு மல்லிகை, ரோஜா என நல்ல மலர்களைக் குறிப்பிடுகிறோமோ, அப்படியே நூல்கள் என்றால், நல்ல நூல்களையே எண்ணிட வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் நல்ல நூலகம் இருந்தாக வேண்டும். அந்த நூலகங்களிலும் நல்ல நூல்களே இருந்திட வேண்டும்.

● ● ●

★ எத்தனை வயது மனிதன் வாழ்ந்தான் என்கிறது. அந்தக் கணக்கை வைத்துப் பார்ப்பதல்ல; அவன் மறைந்த பிறகும் உலகம் எவ்வளவு காலத்திற்கு அவனை நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறதோ-அவ்வளவு காலத்திற்கு அவன் வாழ்கிறான்.

● ● ●

★ வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் இன்று திறமை தேவைப்படுகிறது. அறிவு அவசியமாகிறது. தகுதி முக்கியமாகக் கருதப்படுகிறது. தகுதி, திறமை, திட்டமிடும் வன்மை எதையும் திருத்தமாக, தெளிவாக முடித்திடும் ஆற்றல், ஆராயுந்திறன் இன்றைய மனிதனுக்குத் தேவை.

● ● ●

★ வயல் வெளிகளிலேயே மாத்திரம் உழைக்க ஒருவன், பாடுபட ஒருவன், பலன்களையெல்லாம் அனுபவிக்கச் சில பேர், லட்சக்கணக்கானோர் வியர்வை வடிக்க வேண்டும். ஒரு சிலர் அந்த வேர்வைத்துளிகளைப் பன்னீர்களாக மாற்றி அதிலே குளிக்க வேண்டும். இந்நிலை மாற்றப்பட்டாலன்றி ஒரு நாடல்ல, உலகமே கூட ஒழுங்காக வாழ முடியாது.

● ● ●

---

இவ்வாலயத்தில் புகுவிழா நாளிலிருந்து, சென்னை வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த பல அரும் பொருள்கள் சேகரிக்கப்பட்டு பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளன. வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள இவ்வாலயம் ஓர் அரும் புதையலாகும். புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் காணப்படும் ஆலயத்தின் பதிவேட்டில் 1753-ல் ராபர்ட் கிளைவ் அவர்களின் திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 4.11.1680-ல் விதவையாகிய மேரி ஹென்மொர்ஸ் என்பவரை திரு.யேல் அவர்கள் செய்து கொண்ட திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, ஜோப் சார்னாக் அவர்கள் குழந்தைகளின் ஞானஸ்நானம் செய்வித்த நிகழ்ச்சியும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பழைய ஆங்கிலேயரின் கல்லறையினின்று அகற்றப்பட்ட கல்லறைக் கற்கள் புனித மேரி ஆலயத்தின் குறுகிய முற்றத்தில் பதிக்கப்பட்டுள்ளன. கம்பெனியின் நான்காவது முகவரான திரு. ஆரன் பேக்கர் அவர்களின் மனைவியான திருமதி எலிசபெத் அவர்களின் கல்லறைதான் தொன்மையானதாகும். இதில் 1652 ஆகஸ்ட் 5 என பொறிக்கப்பட்டுள்ளது. மன்ரோ, ஹோபார்ட், பிகாட் போன்ற அருந்தகையாளர்கள் பலரும், ஆளுநர்களின் மனைவியர் இருவரும் இவ்வாலயத்தில் புதைக்கப்பட்டுள்ளனர்.

## கோட்டை அருங்காட்சியகம்

தலைமைச் செயலகத்தின் வடபுறத்தில் அமைந்துள்ள கோட்டை அருங்காட்சியகம் ஒரு காலத்தில் கோட்டை அதிகாரிகளின் உணவகமாகப் பயன்பட்டு வந்தது. இக்காட்சியகம் இருக்குமிடத்தில் முதலில் தடையற்ற வணிகரில்லம் செயல்பட்டு வந்தது, பின்னர் இவ்வில்லம் கையகப்படுத்தப்பட்டு, இடிக்கப்பட்டு, தற்போதுள்ள கட்டிடம் 1787-90-க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. சென்னை வங்கியின் முன்னோடியான வங்கியொன்று கீழ்தளத்தில் செயல்பட்டு வந்தது. பின்னர் அது பம்பாய் மற்றும் வங்காள வங்கியோடு இணைக்கப்பட்டு இம்பீரியல் வங்கியாகி தற்போது பாரத ஸ்டேட் வங்கியாகச் செயல்பட்டு வருகிறது.

முதல் மாடியிலுள்ள நீண்ட அறை பொது மண்டபமாகச் செயல்பட்டதோடு அதன் மீது 99 அடி உயரத்தில் 1796-ல் கட்டப்பட்ட சென்னையின் முதல் கலங்கரை விளக்கத்தின் தூண் கடலில் 25 மைல்களுக்கு அப்பாலிருந்த பாய்மரங்களின் உச்சிக்குத் தென்படும் வகையில் அமைக்கப்பட்டது.

1948-ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட, இவ்வருங்காட்சியகத்தில், சென்னையை உருவாக்கிய சான்றோர் பலரின் சொந்தக் கையெழுத்திட்ட மூலப்பிரதிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. வண்ணம் தீட்டப்பட்ட பழைய காலத்து படங்களும், முழு உருவப்படங்களும், சுவர்களை அலங்கரிக்கின்றன.

படைக்கலன்கள் உள்ள அறையில் படைக்கலன்களை பயன்படுத்தும் முறை பற்றியும் தெளிவாக எழுதி வைக்கப்பட்டுள்ளது.

பழங்காலத்து நாணயங்களும், வெள்ளி மற்றும் பீங்கானால் செய்யப்பட்ட பாத்திரங்களும், கையெழுத்துப் பிரதிகளும், சீருடைகளும், செதுக்கு வேலை மற்றும் இழைபாடான மற்ற செம்புப் பாத்திரங்களும் அருங்காட்சியகத்தின் பல்வேறு பிரிவுகளில் பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளன.

# நூல் நயம்

## ஈரமான ரோஜாவே

ஆசிரியர்:தேவி பாலா
வெளியீடு:மயிலவன்பதிப்பகம்,
17, கங்கையம்மன்கோயில்
தெரு, வடபழனி,
சென்னை-600 026.

விலை:ரூ. 12.50 பக்கம்:136

ஈரமான ரோஜாவே, துரத்தி வரும் துரோகம் என்னும் இரு குறு நாவல்கள் இந்நூலில் உள்ளன.

சமூகப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டுள்ள ஈரமான ரோஜாவே பாத்திரங்கள் படைப்பு அருமை. படிப்போரின் இதயத்தைத் தொட்டு விடுகிறாள் சரோஜா. இளகிய இதயம்படைத்திருந்தால் பல் வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரும் என்பதை இந்நாவல் எடுத்துரைக்கிறது.

'துரத்தி வரும் துரோகம்' என்னும் மறுபிறவிக் கதை-நம்புவதற்கு இயலவில்லை என்றாலும் படிப்பதற்குச் சுவையாக-திகில் தரத் தக்கதாக இருக்கிறது.

இரு நாவல்களிலும்காணப்பட்டுள்ள சரளமான நடை, படிப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டுகிறது.

-எஸ்.எஸ். சுந்தரம்

## அணுவின் ஆக்கமும் அழிவும்

ஆசிரியர்:கல்பாக்கம் தமிழ்மணி
வெளியீடு:தமிழ்மணிபதிப்பகம்
107-ஏ,பெரியார்
பாதை(மேற்கு),தூளை
மேடு,
சென்னை-600 094.

விலை:ரூ. 9.00 பக்கம்:96

அணுவைக் குறித்தசெய்திகள் அனைத்தையும் இந்நூல்விளக்கம் செய்கிறது. அமெரிக்க நாடு, அணுவைப் பயன்படுத்தி அணுகுண்டு தயாரித்து ஜப்பான் நாட்டை அழிவுக்கு ஆட்படுத்திய வரலாற்றைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார் நூலாசிரியர்.

அணு, ஆக்க வேலைக்குப்பயன்படும் அற்புதத்தையும் இந்நூல் விளக்குகிறது. மேலும் மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை, விஞ்ஞானத் துறை, தொழில் துறை இப்படிப் பல்வேறு துறைகளிலும் அணுசக்தி, ஆக்க வேலைக்குப் பயன்படுத்தப் பெறும் செய்தியையும் நூலாசிரியர் விவரித்துள்ளார்.

உலகத்தில் எந்தெந்த நாடு அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறது என்பதும் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளது. எளிய இனிய நடை இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

-தமிழ்ப்பித்தன்

## காவியமும் ஓவியமும்

ஆசிரியர்: சேயோன்
வெளியீடு:முரளி பதிப்பகம்,
அடையாறு,
சென்னை-600 020.

விலை:ரூ. 15. பக்கம்:152

நவமணிகளைப் போன்று ஒன்பது கட்டுரைகள் கொண்ட தொகுப்பு இந்நூல். இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், நளவெண்பா முதலிய காவியங்களின் கதை நிகழ்ச்சிகளுக்கும் பாத்திரப் படைப்புகளுக்கும் ஏற்ப, ஓவியங்களாக வருணிக்கப்படும் காட்சிகள் பற்பல. அவற்றின் சீர்மையே 'காவியமும் ஓவியமும்' எனும் முதல் கட்டுரையாக உருவெடுத்துள்ளது.

மற்றவர்க்கு உதவி செய்வதில் கைபோலவும், பற்கள் போலவும் இருக்க வேண்டும் என்னும் சிவப்பிரகாசரின் தத்துவத்தை ஒரு கட்டுரை விளக்குகிறது. கண்ணகியின் பெருமையை ஒரு கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. பாரதியின் மொழிநடை பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டுள்ளது ஒரு கட்டுரையில். குமரகுருபரரின் கல்வியின் பயன், முயற்சியும் உயர்ச்சியும் ஆள்வினையுடைமை, கடமையின் சிறப்பு முதலான சிந்தனை முத்துகள் ஒரு கட்டுரையில் தெளிவாக்கப்பட்டுள்ளன.

'திருவள்ளுவரின் ஆத்தி சூடி'-புதுமைப் படைப்பு.ஆசிரியரின் புதுமை நோக்கினையும்சிந்தனையையும் வெளிப்படுத்துகின்றது. அரிய இக்கட்டுரை நூல் ஆசிரியரின் சிந்தனை வளத்திற்கும் புதுமைப் போக்கிற்கும் ஓர் எடுத்துக்காட்டு.

-டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

> பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம்;
> ஆனால், பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர்புரியத் தொடங்குவதில்லை;
> அதுபோலத்தான் பழமைக் கருத்துகளை நாம் படிக்கலாம்;
> ஆனால் கையாளக்கூடாது.
>
> பேரறிஞர் அண்ணா

## கோதாவரியில் ஒரு கதாநாயகி

ஆசிரியர்:எஸ். குலசேகரன்
வெளியீடு:அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப் பிள்ளைதெரு,
வ.உ.சி. நகர்,வேலூர்,
(வ. ஆ.)-632 001.

விலை:ரூ. 9.00 பக்கம்:96

பல்வேறு கோணங்களில் எழுதப்பட்ட சிறு கதைகளின் தொகுப்பே இந் நூல். சமுதாயத்திலே காணப்படும் பல் வேறு மனிதர்களைக் கதாபாத்திரங்களின் வாயிலாகச் சந்திக்கிறோம்; சிந்திக்கிறோம்.

முதல் கதையின் முடிவை இன்னும் தெளிவாகச் சொல்லி இருக்கலாம் எனத் தோன்றுகிறது. மற்ற கதைகளில் வறுமையின் கொடுமையும், வருங்காலச் சமுதாயம் வளம் பெற வேண்டும் என்ற ஆவலும் கோடிட்டுக் காட்டப்படுகின்றன. ஆசிரியரின் இனிய நடை இதயத்தைத் தொடுகிறது. மொத்தத்தில் படித்துச் சுவைக்கலாம்.

-என். குமாரசாமி

## அறிவியல் கருத்துக் குவியல்கள்

ஆசிரியர்: தமிழ்மணி
வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
17, கங்கையம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

விலை: ரூ.10.50 பக்கம்:112

பொது அறிவுக் கருத்துக்கள் உள்ளடக்கிய தொகுப்பு நூல் இது.

பல்துறை சம்பந்தமான ஏராளமான துணுக்குகள் உள்ளன.

பள்ளி மாணவர்களும், பெரியவர்களும்கூட, இந்நூலைப் படித்துப் பல தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

## பெர்னார்ட்ஷா

ஆசிரியர்: டாக்டர். சோ. சேசாசலம்
வெளியீடு: குமரிப் பதிப்பகம்
15, நீலா தெற்கு வீதி,
நாகப்பட்டினம்- 611 001

விலை: ரூ.10 பக்கம்: 103

பேரறிஞர் பெர்னார்ட்ஷாவின் வாழ்வும், சிந்தனைகளும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளும், அவரது பொன்மொழிகளும் நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மாணவர்கள் படித்துப் பயன்பெறலாம்.

—பி.வி.கிரி

வடார்க்காடு மாவட்டம்

# வறட்சிப் பகுதியில் தமிழக முதல்வர்



கலைஞர் அவர்கள் முதல்வர் பதவி ஏற்றபின் முதன்முறையாக 25.5.89 அன்று வட ஆர்க்காடு மாவட்டம் செய்யாறுக்கு வருகை தந்தார்.

செய்யாறு அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்குச் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் ரூ. 50 ஆயிரம் செலவில் கட்டிக்கொடுத்துள்ள விளையாட்டு அரங்கைத் திறந்து வைத்தும், திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டும் உரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில்,

''ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று மாதத்திற்குள்ளாகவே பெண்களுக்கு வேலைவாய்ப்பிலே 30 சதவிகிதம், பெண்களுக்கு ஆண்களைப் போலவே சொத்திலே சமபங்கு, முதல், 2ஆம் வகுப்புகளுக்குப் பெண்களே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என அறிவித்தோம். அதை இன்றைக்கு ஆணையாகப் பிறப்பித்து உள்ளோம்.

''ஏன் முதல், 2ஆம் வகுப்புகளுக்குப் பெண்கள் ஆசிரியர்களாக வர வேண்டும் என்றால் அந்தக் குழந்தைப் பருவத்திலே இருக்கக்கூடிய பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளக்கூடிய தாய் அன்பு பெண்களுக்குத்தான் உண்டு என்ற காரணத்தினால்தான் அவர்கள் எல்லாம் முதல் வகுப்பு 2ஆம் வகுப்புக்கு ஆசிரியர்களாக வரவேண்டும் என்று எடுத்துக்காட்டி இருக்கின்றோம். அது மாத்திரமில்லாமல், ஏழை எளிய வீட்டுப் பெண்கள் நடுத்தர வீட்டுப் பெண்கள் உயர் கல்வி பெற வேண்டும் என்கிற காரணத்தினாலேதான் பி.ஏ. பி.காம். பி.எஸ்.சி. போன்ற இளங்கலை, முதுகலைப் படிப்புகளுக்கு இலவசக் கல்வி என்று இந்த 3 மாதக் காலத்திலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பெண்கள் திருமணச் செலவுக்காக 5 ஆயிரம் ரூபாய் இந்த அரசு இனாமாகத் தரும் என்று அறிவித்து இருக்கிறோம்'' எனக் கூறினார்.

பின்னர் செய்யாறு ஊராட்சி ஒன்றியத்தில் புளியரம்பாக்கம் கிராமத்திற்கு வருகை தந்த முதல்வர் அவர்கள், அங்கு ரூ.6 ஆயிரம் மதிப்பீட்டிலான ஆதிதிராவிடர் குளம் மேம்படுத்தும் பணியைப் பார்வையிட்டார்.

புளியரம்பாக்கம் கிராமத்தில் வறட்சிப் பகுதியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த முதல்வர் அவர்களிடம் ஒரு பெண், போலியோ வியாதியால் பாதிக்கப்பட்ட தனது 5 வயது மகனைக் காட்டிக் கண்ணீர் சிந்தியபடி எங்கெல்லாமோ சென்று மருத்துவம் பார்த்தோம். அவன் குணமடையவில்லை எனக்கூறினார். அந்தப் பையனிடம் முதல்வர் உடனடி உதவியாக ரூ.100/- வழங்கி, உன் பெயர் என்ன என்று கேட்டார். அதற்கு அந்தப் பையன் சந்தோஷ் என்றான். இதைக் கேட்டதும் முதல்வர் அவர்கள் ''இதுவரை அவன் வாழ்க்கையில் சந்தோஷமில்லாமல் இருந்தான். இனிமேல் அவன் சந்தோஷமாக இருப்பான்'' எனக் கூறி அருகில் நின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. சத்தியமூர்த்தியிடம் அச்சிறுவன் சிகிச்சை பெறத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூறினார். தற்போது அச்சிறுவன் சென்னைப் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறான்.

வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் மாமண்டூர் ஊராட்சியைச் சார்ந்த தர்மாபுரத்தில் நரசிம்மவர்மப் பல்லவன் காலத்தில் அமைக்கப்பட்ட சந்தைமேடு குடிநீர்க் குளத்தை ரூ.7000/- மதிப்பீட்டில் ஆழப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அக்குளத்தைப் பார்வையிட்ட முதல்வர் அவர்கள் குளத்தைச் சுற்றி, சுவர் கட்டும்படி உத்தரவிட்டார்.

அங்கு, சுக்கு என்ற வயதான பெண் தங்கள் கிராமத்தில் குடிநீர் வசதி இல்லை என்றுகூற, முதல்வர் அவர்கள் எத்தனை குடும்பங்கள் உள்ளன என வினவினார். 150 குடும்பங்கள் வசிக்கிறோம் என்று அப்பெண்மணி கூறியதும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உடனடியாக ஆழ்துளைக் கிணறு போட்டுக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். அதன்படி மறுநாளே நிலநீர் ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டு உடனடியாக ஆழ்துளைக் கிணறு 200 அடி ஆழத்திற்குப் போடப்பட்டது. இதன்மூலம் அக்கிராமத்தின் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தது.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக வறட்சி நிவாரண வேலை வாய்ப்புப் பணிகளை உருவாக்க 38 ஊராட்சி ஒன்றியங்களிலும் குட்டைகள், ஊரணிகள் அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல், சிறுபாசன ஆதாரங்கள் மேம்பாடு செய்தல், சிறுபாசனக் கண்மாய்களுக்கு வரத்துக் கால்வாய்கள் வெட்டுதல், சாலைகள், மேம்படுத்துதல் போன்ற 1,792 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென ரூ.148/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

**இரெ. மருதமுத்து**
மேலாளர்
அண்ணா கலை அரங்கம், வேலூர்



# கோழியின் காலில் சலங்கை கட்டலாமோ!

கொத்தித் திரியும் கோழிகளை நாம் வீடுகளில் காண்கிறோம். வீட்டுக் கோழிகளைப் போலக் காட்டுக் கோழிகளும் உண்டு. வீட்டுக்கோழி, காட்டுக் கோழி உரையாடல் வாயிலாக விடுதலையின் உயர்வை ஓர் உருவகக் கதையாகப் பாவேந்தர் பாரதிதாசனார் பாடியுள்ளார்.

வீட்டுக்கோழி காட்டுக்கோழியிடம் ''என் வீட்டுக்காரர்கள் எனக்குக்காலையில் கம்பு போடுகிறார்கள்; மாலையில் தவிடு பிசைந்து வைக்கிறார்கள்; இட்டளி உண்கையிலோ எனக்குப் பிட்டுப் பிட்டுப் போடுகிறார்கள்; அடடா! என்ன அருமையாக என்னை வளர்க்கிறார்கள் தெரியுமா?'' என்று பெருமை பேசியது!

காட்டுக்கோழி ''உன்னால் அவர்க்கு நன்மையே இல்லையோ?'' என்றதும், வீட்டுக்கோழி ''ஏன் இல்லை. முட்டை இடுவதற்கு நான் மூலையை அடைவதற்குள்ளேயே சட்டியை அடுப்பில் வைத்து, நெய் விட்டுக் காத்திருக்கிறார்கள்; முட்டையை இட்டேனோ இல்லையோ வெடுக்கென்று எடுத்து அடைசுட்டு உண்டு களிக்கின்றார்கள்'' என்றது.

அப்படியானால் முட்டையை அடை வைப்பதில்லையா?'' எனக் கேட்ட காட்டுக் கோழியிடம் ''நான் அடையும் காப்பதுண்டு. குஞ்சு பொரித்ததும் என் நெஞ்சம் மகிழ்ச்சியால் விம்மும்'' என்றது வீட்டுக்கோழி!

''குஞ்சுகள் அவர்கட்கு என்ன கொடுக்கும்?'' என்றது காட்டுக்கோழி.

பதினைந்து நாளில்என் பசுங்குஞ் சுகளில்
இதுஒன்று மற்றை யதுநன் றென்று
வாட்டம் பார்த்தே ஓட்டமாய் ஓடி
இரண்டு மூன்றைப் பற்றித் தலையை
பாளையில் பாக்குக் காய்போல் திருகிப்
பச்சு டம்பின் பஞ்சுமயிர் சிரைத்துக்
குருதி கொட்டக் கூறிட்ட சதையை
நெய்யோடு நெய்யாய் நீர்ப்பதம் எய்தச்
'செய்'எனத் தாளித்துச் சூப்பென அருந்துவர்
அப்போது நானோ அழுதுகொண் டிருப்பேன்...'

என்றது வீட்டுக்கோழி.

**காட்டுக்கோழி சொல்லும்:** ''முட்டைக்கும் சூப்புக்குமாகவே உனக்கு இரை போடுகிறார்கள். தங்கள் நலத்திற்காக உன்னையும் உன் இனத்தையும் அழிக்கும் இவர்களா உனக்கு நன்மை செய்பவர்கள்? காட்டிலோ பூச்சி, புழுக்களை உண்டு நாம் எங்கும் திரிந்து மகிழ்ந்து வாழலாம். கம்பு போட்டுக் கழுத்தையறுக்கும் வம்பு அங்கில்லை. பற. நம் தாயகம் செல்வோம்'' என்றது.

''இறக்கை இருந்தும் பறக்க முடியவில்லையே'' என்று வருந்திய வீட்டுக் கோழியிடம் ''அவ்வாறாயின் என் முதுகின் மீது ஏறு; நான் எடுத்துச் செல்வேன்'' என்றது காட்டுக் கோழி. அடிமைப்பட்டவர்கள் தாங்கள் அடிமை என்பதை அறியா நிலையிலும், அறிந்தாலும் உரிமை பெறும் ஆற்றல் அற்றவர்களாயும் உள்ளனர். உரிமையோடு வாழ்பவர்கள் அவ்வடிமைகட்குக் கைகொடுத்து உரிமை வாழ்வு வாழ உதவ வேண்டும் என்னும் கருத்தை இவ்வுருவகக் கதை மூலம் உணர்த்துகிறார் பாவேந்தர்.

டாக்டர் சிலம்பொலி செல்லப்பன்

'கொக்கரக்கோ' எனும் கோழியின் குரல் தோற்றுவித்த மனநிலையைக் குறுந்தொகைப் பாடலொன்று அழகுற விவரிக்கிறது.

பொருள்தேட வெளியூர் சென்றிருந்த தலைவன் அன்றுதான் வீடு திரும்பியிருந்தான். நீண்ட பிரிவுக்குப்பின் தலைவன் தலைவியர்க்கு அன்றைய இரவு, விவரிக்க இயலா இனிய பொழுதாயிற்று. இரவு கழிந்ததே தெரியவில்லை.

விடியலை அறிவிக்கச் சேவல் கூவிவிட்டது. சேவல் கூவியா பொழுது விடிகிறது? இயல்பாக விடியல் புலர்கிறது. இருந்தாலும் விடியலை வருவிக்கக் கோழி கூவிவிட்டதே எனத் தலைவி கோழியைச் சினந்து சபிக்கிறாள். தலைவனும் தானும் துய்க்கும் இன்பத்துக்கு முட்டுக்கட்டையாயிற்றே கோழியின் கூவல் என ஆத்திரம் பொங்கி வருகிறது அவனுக்கு. நீ செத்து அழிந்து ஒழிக என வைகிறாள் கோழியை.

''செங்காந்தள் பூங்கொத்தைத் தலையில் சூடியுள்ளது போன்று உச்சிக் கொண்டையுடைய சேவலே! நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்த என் காதலன் இன்றுதான் வந்து சேர்ந்தான். அவனுடன் சேர்ந்து துய்த்த இன்பத்தை - உன்

குரலால் விடியலை வருவித்துத் - தொலைத்து விட்டாயே! என்னுடைய இன்பத்தைத் தொலைத்த நீ நள்ளிரவில் வீட்டில் எலி பிடிக்கப் பதுங்கியிருக்கும் பூனைக்கு இரையாகிச்செத்து ஒழிவாயாக! கொத்தித் திரியும் உன்னைப் பூனை கவ்விக் குதறி அழிக்கட்டும்!'' என நொந்து கூறுகிறாள்.

'குவிஇணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்இருள் யாமத்து இல்எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கு இரையாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே! நெடுநீர்
யாணர் ஊரனொடு உதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோயே!

என்பதுதான் அருமையான அந்தக் குறுந்தொகைப் பாடல்.

ஊர்ப்புறங்களில் மக்கள் கோழிகளைச் சண்டையிடச் செய்து வேடிக்கை பார்ப்பதுண்டு. ஒன்றொடொன்று சண்டையிட அவை தூண்டிவிடப்படும். ஒன்றையொன்று மும்முரமாக எதிர்த்துத் தாக்கும்போது இடையே அவற்றை விலக்கி விடுவதும் உண்டு. ஆனால் குப்பையில் மேய்ந்து கொண்டிருக்கும் கோழிகள் சண்டையிடத் தொடங்கிவிட்டால் அவை சண்டையிட்டுத் தாமே ஓய்ந்தாலொழிய இடையே அவற்றை விலக்கிவிட்டுத் தடுப்பார் இல்லை!

இக்கோழிப் போரைச் சுட்டித் தலைவி பேசுவதாக உள்ள பாடல் ஒன்றும் குறுந்தொகையில் உண்டு.

தலைவி ஒருத்தி வெளியே சென்று தான் விரும்பிய தலைவனைச் சந்திக்க இயலா நிலையில் இற்செறிக்கப்பட்டாள். தோழியிடம் தலைவி, தன் துயரத்தை வெளிப்படுத்துகிறாள். ''காதலரைக் கண்ட நம் கண்கள் நமக்குக் காம நோயைத் தந்தன. அந்நோய் இப்போது நம் உள்ளத்தே நெருப்பாய்ச் சுட்டு எலும்பை உருக்குகிறது. எனினும் குறியிடம் சென்று அவரைக் காண முடியாமல் இல்லத்தினுள்ளே இருத்தப்பட்டோம். அவரும் இங்கு வந்து நம் துன்பத்தை



# போலீஸ் கமிஷன் நியமனம்

தமிழ்நாடு காவல்துறையின் மேம்பாட்டிற்காக காவல்துறையின் பல்வேறு தேவைகளையும் வளர்ச்சியையும் கணக்கிட்டுப் பரிந்துரைகள் செய்வதற்காக 'போலீஸ் கமிஷன்' ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று 28.4.89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்கள்.

அந்த அறிவிப்பையொட்டி முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் இ.ஆ.ப. அவர்களைத் தலைவராகக் கொண்ட போலீஸ் கமிஷன் ஒன்றை 27.5.89 அன்று அரசு நியமித்துள்ளது. இக்கமிஷனின் உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற டி.ஜி.பி. திரு. கே.ஆர். ஷெனாய், டாக்டர் சந்தோஷம், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஏ. சிதம்பரம், திருமதி ரமணி நடராஜன் ஆகியோர் செயலாற்றுவர். இக்கமிஷனின் உறப்பினர்-செயலாளர் திரு. ஆர். இராஜ கோபாலன், இ.கா.ப; இக்கமிஷன் உடனடியாகத் தனது விசாரணையைத் துவக்கி ஓராண்டுக்குள் தனது பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள போலீஸ் கமிஷன் கடந்த 20 ஆண்டுகளில் நியமிக்கப்படும் இரண்டாவது போலீஸ் கமிஷனாகும்.

1969-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் முதலாவது போலீஸ் கமிஷன் நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை தி.மு.க அரசால் 1976க்கு முன்பு நிறைவேற்றப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

நீக்கும் நிலை இல்லை. குப்பை கிளறும் கோழிகள், யாரும் ஏவி விடாமல் தாமே ஒன்றோடொன்று போரிடத் தொடங்கும். அவற்றை விலக்கி விட்டாலன்றிச் சண்டை ஓயாது. இறுதிவரையிலும் ஆத்திரத்துடன் சண்டையிட்டு மடியும். இப்போது நம் நிலையும் அத்தகையதே! நான் அடைந்த காம நோயைக் களைவாரைக் காணேன். இந்நோயால் நான் மடிவதைத் தவிர வேறு வழியே இல்லையா?'' என மயங்கு கிறாள் தலைவி.

> கண்தர வந்த காம ஒள்ளரி
> என்புஉற நலியினும் அவரொடு பேணிச்
> சென்று நாம் முயங்கற்கு அருங்காட் சியமே
> வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே?
> உய்த்தனர் விடாஅர் பிரித்துஇடை களையார்
> குப்பைக் கோழித் தனிப்போர் போல
> விளிவாங்கு விளியின் அல்லது
> களைவோர் இலையான் உற்ற நோயே!

என்பது கரும்பனைய அக்குறுந்தொகைப் பாடல்.

சங்க இலக்கியங்களில் சில பாடல்களைப் பாடியவர் பெயர் அறியக்கூடவில்லை. அப்பாடல்களில் புலவர்கள் ஆண்டுள்ள சிறந்த தொடர்களையே அப்பாடல்களை இயற்றியவர் பெயர்களாகத் தரப்பட்டுள்ளன. இப்பாடலில் குப்பைக் கோழிப் போர் பாடப்பட்டிருப்பதால் இப்பாடலாசிரியர் பெயர் ''குப்பைக் கோழியார்'' என வழங்கப்படுகிறது.

கோழி, உணவுக்காகக் குப்பையைக் கிளறுகிறது என்பதல்ல; அதன் இயல்பே அதுதான். அதனாற்றான் நாலடிப் பாடல் ஒன்று ''காலைப் பொழுதிலேயே நொய்யரிசியைப் போதிய அளவில் வாயில் வலியப் போட்டு வயிற்றை நிரப்பினாலும், கோழி குப்பை கிளறுவதை நிறுத்தாது. இதுபோலத்தான் மேன்மை பொருந்திய கருத்துகளை விரிவாகச் சொன்னாலும், கீழ்மகன் தன் மனம் விரும்பிய வழியிலேயே நடப்பான்'' எனக் கீழ்மக்களின் இயல்பைக் கூறுகிறது. கோழி குப்பையைக் கிளறுவதோடு மட்டுமா நிறுத்துகிறது! அதனுள்ளேயே படிந்து சிறகுகளால் அளைந்து மேலெல்லாம் புழுதியை இறைத்துக் கொள்கிறது. நம் வீட்டுக் கோழியாயிற்றே - குப்பையையும் கிளற வேண்டும், குப்பையிலும் புரள வேண்டாம்; இதனைத் தூய்மையாக வைத்திருப்போம் என்று வீட்டுக்காரர் அக் கோழியைப் பிடித்து வந்து அதன் தலைக் கொண்டையின் மீதும் உடலிலும் உள்ள புழுதியையெல்லாம் அகற்றி, நல்ல நீரில் அதன் மயிரையும் இறகையும் அழுக்கில்லாமல் தூய்மையாகக் கழுவி, மேலே எண்ணெயையும் பூசி மினுமினுக்கச் செய்து, தூய்மையான இடத்தில் இருத்தி, நாள்தோறும் பாலும் சோறுமாக ஊட்டி வந்தாலும் - விட்டால் போதும் என்று ஓடிச் சென்று குப்பையைக் கிளறுவதை ஒழியாது. எவ்வளவு மேன்மை செய்தாலும், தன் கீழ்த் தன்மையிலிருந்து மாறாத கோழி போன்று மக்களில் சிலர் இருக்கவே செய்கின்றனர் என்பதை-

> 'சூட்டுமுகம் திருத்தி வேட்டு நறுநீரில்
> மயிரும் இறகும் செயிரறக் கழீஇக்
> கோல்நெய் பூசித் தூய்மையுள் நிறீஇப்
> பாலும் சோறும் வாலிதின் ஊட்டினும்
> குப்பை கிளைப்பறாக் கோழி போல்வர்
> மக்கள் ...

- என்பார் கொங்குவேள், பெருங்கதைக் காப்பியத்தில்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதே கருத்தை மேலும் சுவைபடவும் நயம் செறிந்தும் கூறுகிறார்கள். 'பொன்னர் - சங்கர்' என்னும் தன் வரலாற்றுப் புதின இலக்கியத்தில் ''கோழியின் காலில் சலங்கையைக் கட்டினால் அது நடனமா ஆடும்? குப்பையைக் கிளறத்தானே போகும்?'' என்பார். கோழி கோழிதான். அது குப்பையைத்தான் கிளறும். அது தெரியாமல் அதன் காலில் சலங்கையைக் கட்டலாமா? சலங்கை - பொறுப்பாக ஆடத் தெரிந்தவர்கள் காலில் அணிவிக்கப்பட வேண்டியது. அணிவிக்க வேண்டிய இடத்தில் அணிவித்தால்தான் சதங்கைக்குச் சிறப்பு. அதை விடுத்துக் குப்பையைக் கிளறும் கோழியின் காலில் கட்டினால் சதங்கையும் குப்பையாவது தவிர வேறு பயன் கிட்டப்போவதில்லை. உயர்ந்ததோ, மிகச் சாதாரணமானதோ - எந்த ஒரு பொறுப்பையும் ஒப்புவிக்கத் தகுந்தவர்களிடம் ஒப்படைத்தால்தான் அந்தப் பொறுப்புக்குப் பெருமை! தகுதியற்றவர்களிடத்தே பொறுப்பு சுமத்தப்பட்டால் நல்லதும் குப்பையாய் விடும் என்னும் நல்லதொரு கருத்தைக்கோழிக் காற்சலங்கை கொண்டு அவர் விளக்கியிருப்பது, ஆழ்ந்து அசை போடத் தக்கதாம்!



## கோவை மாவட்டம்

# நலவாழ்வுத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்கள் மே 19 முதல் 22 முடிய நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகள்மற்றும் விழாக்களில் கலந்து கொண்டார். கோவையில் 22-5-89ஆம் நாளன்று காலையில், கோவை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசு சார்பில் நடைபெற்ற இலவச கண்சிகிச்சை முகாமினைப் பார்வையிட்டதுடன், மாலையில் தமிழக அரசின் நல்வாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவிலும், தொடர்ந்து, இந்திய தொழில் வர்த்தக சபையின் வைர விழா நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

தமிழக அரசு சார்பில் கோவை மாவட்டம் முழுவதும் இலவச கண்சிகிச்சை முகாமிற்கு ஏராளமானோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் 1066 பேருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நோயாளிகள் சிகிச்சை பெற்றுவரும் இம்முகாமிற்கு வருகை புரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும், உடன் வருகை புரிந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களையும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.இராமன், இ.ஆ.ப., கோவை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர். திருமதி. சுசீலாராஜ் ஆகியோர் வரவேற்று முகாமினைச் சுற்றிக் காண்பித்தனர். முதல்வர் அவர்கள் முகாமினைச் சுற்றிப் பார்வையிட்டதுடன் ஒவ்வொரு கட்டிலில் படுத்திருக்கும் நோயாளிகளிடமும் சென்று அவர்களின் நிலைமை பற்றியும், அளிக்கப்படும் சிகிச்சை பற்றியும், தேவைப்படும் உதவி பற்றியும் கேட்டறிந்து, மருத்துவர்களிடமும், அரசு அலுவலர்களிடமும் நோயாளிகளின் நலனுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுறுத்தினார். முகாமினை முதல்வர் அவர்கள் பார்வையிட்டு வந்தபோது சிகிச்சை பெற்றுவரும் 55 வயதுடைய திருமதி. பழனியம்மாள் என்ற மூதாட்டி, ''கண்பார்வை இல்லாமல் இருந்த எனக்கு கண்ணொளி தந்த மகராசன் வாழ்க'' என்று முதல்வர் அவர்களை வாழ்த்தியதும், மற்ற அனைத்து நோயாளிகளும் கைகூப்பி வணங்கி வாழ்த்தியதும், தமிழக முதல்வரின் தலைமையிலான தமிழக அரசின் நல்வாழ்வுப் பணிகளுக்கு உணர்ச்சிமிகு வாழ்த்தாக அமைந்தது.!

தொடர்ந்து, கோவை அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் நலவாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு பார்வையற்றவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள், ஆதரவற்றவர்களுக்கு அரசு உதவித்தொகை, இலவச மனைப்பட்டா, நலிந்தோருக்குக் கடனுதவி, ஏழைத் தொழிலாளர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா போன்ற நலவாழ்வுத் திட்ட உதவிகளை 7,000 பேருக்கு வழங்கினார். இவ்விழா மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்கள் தலைமையிலும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

ஆதரவற்ற 2,000 முதியோர்களுக்கு அரசு உதவித் தொகையும், வீடற்ற ஏழைகள் 2,000 பேருக்கு இலவச மனைப்பட்டாக்களும், வறுமையில் வாடும் நலிந்தோர் 1,000 பேருக்குக் கடனுதவியும், 50 ஏழைத் தொழிலாளர்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்களும், 1,150 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், ''இந்த விழாவில் பல்வேறு விதமான கடனுதவி வழங்கபபட்டது. ஏராளமான பேருக்கு உதவி, நிதி, பொருட்கள் கொடுக்கப்பட்டன. முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை இந்த அரசு தான் தொடங்கியது என்று நான் சொல்ல மாட்டேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்-20 ரூபாய் விதம் 1000 பேருக்கு அன்று கொடுக்கப்பட்டது. இருந்தாலும் அந்தத் திட்டத்தின் தொடக்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 20 ரூபாயாக இருந்தது 30 ஆக மாறியது. அதுவும் குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் தான் வழங்கப்பட்டு வந்தது. அதனால் அந்தத் திட்டத்தை மாற்றி முதியோர் உதவித்தொகை பெறக்கூடிய தகுதி உடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டேன். உதவித் தொகையும் 30-லிருந்து 50 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அந்தப் பணம் வழங்கும் விழாவாக இந்த நல்ல நாள் நடக்கிறது.

''விபத்தில் கணவனை இழந்து, ரூ.5 ஆயிரம் உதவித்தொகை பெற்ற ஒரு பெண்ணி

டம் உதவித்தொகை உங்களுக்கு எப்போது கிடைத்தது என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெண்மணி என் கணவர் இறந்து 2 ஆண்டுக்குப் பிறகு கிடைத்தது என்றார். அதுவும் குறுகிய காலம் தான்.

"நேற்று ஊட்டியில் நான் ஒரு கோப்பில் கையெழுத்து போட்டேன். 1984-ஆம் ஆண்டு குடும்பத் தலைவரை இழந்த ஒரு பெண்ணுக்கு 5 ஆண்டுக்குப் பிறகு உதவித்தொகை வழங்க கையெழுத்திட்டு உள்ளேன். 4 ஆண்டாக அந்த கோப்பு தேங்கி கிடந்து உள்ளது. எனவே காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். இதற்காகத் தான் கடந்த வாரம் ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. விபத்து காரணமாக குடும்பத் தலைவன் இறந்து விட்டால் இறந்தவருடைய குடும்பத்துக்கு உதவித்தொகை வழங்க மாவட்ட கலெக்டருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது.

ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு ஆட்டோ சொந்தம் என்று சொன்னவுடன் வாடகை ஆட்டோக்கள் ஓட்டுபவர்களுக்குச் சொந்தம் என்று தவறாக நினைத்து விட்டார்கள். ஆட்டோ ஓட்டுபவர்களே அதற்குச் சொந்தக் காரர்களாக வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, சென்னையில் அந்தத் திட்டத்தை முதன்முதலாகச்செயல்படுத்தினோம். அதற்குப் பிறகு இப்போது கோவையில் அந்தத் திட்டத்தைச் செயல் வடிவத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். ஒரு ஆட்டோவின் விலை ரூ.38 ஆயிரமாகிறது. மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாவின் விலை ரூ.6,750 முதல் 7,000 வரை உள்ளது. இந்த விலைகளை விட சென்னையில் இந்த ஆட்டோ பெர்மிட்டுக்கு தனி ரேட் இருந்தது. அரசு மூலம் பெர்மிட்டுக்கு ரூ.500 செலவா கும். ஆனால் பெரும் முதலாளிகள் பல பெர்மிட்டுகளைப் பெற்று வைத்துக்கொண்டு ரூ.23 ஆயிரம் வரை அதை விற்று வந்தனர் இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுக்க அரசு ஆட்டோ ரிக்ஷாத் தொழிலாளர்களுக்குக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் குறைந்த வட்டியில் ஆட்டோ வழங்கி உள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் 14.5 சதவீத வட்டிக்குக் கடன் பெற்று இந்த ஆட்டோ வழங்கப்படுகிறது. அந்தக் கடனில் 4.5 சதவீதம் மான்யமாகக் கொடுக்கப்படுகிறது. அதிலும் தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினராக இருந்தால் 6.5 சதவீதம் மான்யம் கிடைக்கிறது. இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் பரவலாக நடைபெற வேண்டும். ஒழுங்காகக் கடனைக் கட்டினால் மேலும் 2 சதவீதம் மான்யம் தரப்படும்.

ஏழை மக்களுக்காகத் தொடங்கப்பட்ட இந்தக் கடன் உதவித் திட்டத்தின் மூலம் இன்று இந்த விழாவில் ரூ.2 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்புள்ள தையல் எந்திரம், சலவைப்பெட்டி, சவரப்பெட்டி, மூக்குக் கண்ணாடிகள் வழங்கப் பட்டு உள்ளன.

விதவைப் பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை 1975-இல் நான் தொடங் கினேன். அதை உதவிப் பணமாகக் கொடுக் காமல் சேமிப்புப்பத்திரமாக வழங்கப்பட்டது. பணத்துக்காக விதவைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு ஏமாற்றி விடக்கூடாது என்பதற்காகத்தான் சேமிப்புப் பத்திரமாக வழங்கப்பட்டது. தற்போது பெண்கள் முன் னேற்றத் திட்டம் அறிவிக்கப்பட்டு உள்ளது. சொத்துரிமை பெண்களுக்கு உண்டு. இதை சட்டமன்றத்தில் நிறைவேற்றி உள்ளோம். இதற்கும் மத்திய அரசு அனுமதி தேவைப்படு கிறது. அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

1971-72-இல் கண்ணொளி வழங்கும் திட்டம் கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. நான் அமெரிக்காவுக்குக் கண் சிகிச்சைக்குச் சென்ற போது இந்தத் திட்டம் அங்கு சிறப்பாக செயல்பட்டதைப் பார்த்தேன். தமிழ்நாட்டிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டேன்.

கோவையில் தற்போது 4 மாதத்தில் 17 ஆயிரம் பேருக்கு கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது. 1976-ஆம் ஆண்டு 3,090 பேருக்கு கண்ணொளி வழங்கப்பட்டது. 1988-இல் இது 900 பேராகக் குறைந்து விட்டது. இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் பரவலாக நடைபெறத் தீவிரமாகச் செயல்பட வேண்டும்.

மண் சரிந்து விழுந்ததால் இறந்த குடும் பத்தினருக்குப் பாதுகாப்பு, விதவைகள் மறு வாழ்வுத் திட்டத்தின் கீழ் உதவி நிதி, கலப்புத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை, பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் சலவைப் பெட்டிகள், பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள், செம்மறி ஆடு வழங்கும் திட் டத்தின் கீழ் உதவித்தொகை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், உடல் ஊனமுற்ற வர்களுக்கு இலவச மூன்று சக்கர வண்டிகள் போன்ற 18 திட்டங்களின் கீழ் பல்வேறு உதவிகளை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்திய தொழில் வர்த்தக சபை வைர விழாவினையும் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்துச் சிறப்புரை யாற்றினார்.

தொகுப்பு
அ. சந்திரசேகரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
கோவை

---

# சிறந்த மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுத் திட்டம்




பிளஸ் 2 தேர்வுகள் வெளியாகியுள்ளன. பாடங்களில் மாநிலத்திலேயே முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலையை அடைந்து வெற்றி பெற்றுள்ள மாணவ, மாணவியர்க்கு அவர்களது உழைப்பையும் திறமையையும் ஊக்குவித்துப் பாராட்டும் பொருட்டு ரொக்கப் பரிசு அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்படி தமிழில் மூன்று பரிசுகள் வழங்கப்படும். முதல் மதிப்பெண் பெற்றவர்க்கு ரூ.5,000 (ஐயாயிரம்), இரண்டாவது மதிப்பெண் பெற்றவர்க்கு ரூ.3,000 (மூவாயிரம்), மூன்றாவது மதிப்பெண் பெற்றவர்க்கு ரூ.2,000 (இரண்டாயிரம்) ரொக்கப் பரிசுகளை அரசு வழங்கும்.

அதைப்போலவே சிறப்புத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித் தனியே மூன்று பரிசுகள் முதல் பரிசாக ரூ.5,000/- இரண்டாவது பரிசாக ரூ.3,000/- மூன்றாவது பரிசாக ரூ.2,000/- அரசு வழங்கும்.

பிளஸ் 2 தேர்வில் தமிழ், சிறப்புத் தமிழ், ஆங்கிலம் தவிர, 22 பாடங்கள் உள்ளன. இவை அனைத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண், இரண்டாம் மதிப்பெண், மூன்றாவது மதிப்பெண் பெற்றவர்களுக்கு மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு முறையே ரூ.3,000/-, ரூ.2,000/-, ரூ.1,000/- ரொக்கப் பரிசாக அரசு வழங்கும்.

ஆக மொத்தம் பிளஸ் 2 தேர்வில் எல்லா பாடங்களுக்கும் சேர்த்து 75 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

இப்பரிசுகள் வழங்குவதால் அரசுக்கு சுமார் ரூபாய் 2 இலட்சம் செலவாகும். இந்தப் பரிசுகளைப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் தேதியன்று நடைபெறும் விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்குவார்.

சென்னை பெரியார் நகர் வட்டார நூலகக் கால்கோள் விழா மற்றும் நூலக வளர்ச்சி மாநாடு 31.5.89 அன்று மாலையில் பெரியார் நகரில் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டோரை, பொது நூலகத் துறை இயக்குநர் டாக்டர் சி. பழனிவேலு வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''சென்னை நகரில், பொது நூலகம், கிளை நூலகம், வட்டார நூலகம் எனப் பலவகை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட மைய நூலகங்கள் தோறும் சிறுவர் நூலகப் பகுதிகளும் இயங்கி வருகின்றன''

''இயங்கு நூலகங்கள் (Mobile Libraries) அதிகப்படுத்தப்பட வேண்டும். நூலகத்தை நாடி வராத கிராம மக்களை - நூலகங்களே நாடிச் செல்லும் வகையில் இயங்கு நூலகங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்பது எனது கோரிக்கை''

அடுத்து, பெரியார் நகர் வட்டார நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, நூலக வளர்ச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் தமது பேருரையில்,

''நூலகம் என்பது மக்களுக்கு மிக மிகத் தேவையான ஒன்று என்னும்

வழிபாடு தேவைதான் - ஆனால் வழிபடும் ஆலயங்களை விட - நூல் நிலையங்கள் தேவை என்பதை அவர் வலியுறுத்தினார்.

பல நிலைகளில், படிக்காதவர்கள் மட்டுமின்றி, படித்த பெருமக்களும் கூட, பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

10க்கு 3 பேர்தான் உலக நடவடிக்கை, அரசியல் வளர்ச்சி ஆகியவற்றைத் தெரிந்து கொள்கிறார்கள். உண்மை எது, பொய் எது எனப் பிரித்துக் காட்டக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

சிலர் பகுத்தறிவுடன் பக்தி மனப்பான்மையும் துணை நிற்க வேண்டும்




# நூலக வளர்ச்சி மாநாடு

தலைமை ஏற்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என்.வி.என். சோமு உரையாற்றுகையில் தெரிவித்தார்:

''கடந்த 4 மாத காலத்தில் மிக வேகமாக ஆக்கப் பணிகளைக் கலைஞரின் தமிழக அரசு ஆற்றி வருகிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், இன்று ஒரே நாளில் 3 இடங்களில் நூலகக் கட்டடங்கள் திறக்கப்பட்டு, ஒரு இடத்தில் நூலகத்திற்குக் கால்கோள் எடுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி. ஆர். பாலு தமது உரையில் குறிப்பிட்டதாவது:

உண்மை மிக நீண்ட காலத்திற்கு முன்னே, தமிழகத்தில் உணரப்பட்ட ஒன்றாகும். சர் பிட்டி தியாகராயர் காலத்திலேயே ஏற்பட்ட உணர்வாகும். தந்தை பெரியார் உணர்த்தியிருக்கிறார். பேரறிஞர் அண்ணா, பெரியாரின் உணர்வுக்கு ஒரு சின்னமாக விளங்கினார்.

மக்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கு - சமுதாயம் முன்னேற்றம் பெறுவதற்கு - நூலகம் வழி வகுக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை, ''வீட்டுக்கு வீடு பூஜை மாடங்கள் இருக்கும்; ஆனால் நூலகம் இருப்பதில்லை'' என்று குறிப்பிட்டார்கள்.

என்று எடுத்துச் சொல்வார்கள்.

பொதுவாக நமது நாட்டின் சூழ்நிலை, முன்னேற்றம் எது என்று மக்களால் உணர முடியாத நிலைக்கு ஆளாக்கியுள்ளது. இதற்குக் காரணம் பொருளாதார வீழ்ச்சிதான்!

அகவிலைப்படி உயர்வு இன்று அளிக்கப்பட்டால் அதுவும் கூட எதிர் காலத்திற்குப் போதாது என்ற நிலை ஏற்படுகிறது.

வாழ்க்கை வசதிகள் பெருகிக் கொண்டே போவதால் கடன் சுமையும் ஏறிக்கொண்டே போகிறது. வீட்டுக்குத் தேவைப்படும் எந்தப் பொருளையும் கடனில் தருவதற்குப் பல நிறுவனங்கள் முன்வருகின்றன.

'கடன் வாங்கத் தெரியாதவன் காலத்தோடு வாழத் தெரியாதவன், என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் அரசாங்கத்தில் கடன் பெறுவது என்னும் நிலை, மென்மேலும் அதிகரித்து வருகிறது.

இது தவறு என்று நான் கூற வரவில்லை - இதுதான் நிலை என்பதை நான் சுட்ட விரும்புகிறேன்.

அரசியல் மாற்றங்கள் வரும்போது சமாளித்துக் கொள்ள - தங்களைத் தாங்களே எடை போட்டுக் கொள்ள - பல்வேறு சிந்தனைகள் பரவ வேண்டும்! அதற்கு நூலகங்களை விட வாய்ப்பானவை வேறு எதுவும் இல்லை.

நம்மில் பெரும்பான்மையோர் பொழுதை வீணாக்கி வருகிறார்கள். பொழுது வீணாக்கப்படுகிறது என்பதை அவர்கள் உணர்வதும் இல்லை.

ஜப்பான் நாட்டில் சட்டப்படி 8 மணி நேரம் வேலை என்றால், மீதி நேரத்தையும் அவர்கள் பயன் உள்ள முறையிலே செலவிடுகிறார்கள். அதனால்தான் இன்று மிகப்பெரிய வல்லரசுகள் கூட ஜப்பானின் உழைப்பைக் கண்டு - பொருளாதார வளர்ச்சியைக் கண்டு அஞ்சுகின்றன.

நமது சிந்தனைகள் மறுமலர்ச்சி பெற - மனதில் நம்பிக்கை பிறக்க - எதையும் உய்த்து உணர - அறநெறிகளின் பெருமையை அறிய - வள்ளுவரின் திருக்குறள் கருத்துகளைப் படித்து இன்பம் அடைய - பாரதி, பாரதிதாசன் பாடல்களைப் படித்து மகிழ்ச்சி பெற - சமுதாயத்திற்கு வெளிச்சம் தர - நம்மால் பிறருக்கு வெளிச்சம் கிடைக்க - நூலகம் சிறந்த சாதனமாகத் திகழ்கிறது.

நமது ஓய்வு நேரம், நமது நாட்டுக்குப் பயன்படுவதற்குப் பொது நூலகங்கள்தான் பயன்படுகின்றன. ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு வேறு வாயில்கள் இல்லை. இந்த ஒரு வாயிலைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் நூலக இயக்கம் உறுதுணையாக விளங்குகிறது.

கல்வித்துறையின் ஒரு பகுதியாக விளங்கும் நூலகத்துறை, எல்லா மக்களுக்கும் பயன்படும் துறையாகத் திகழ்கிறது.

நூலக வளர்ச்சிக்கு அரசு உதவி செய்து வருகிறது என்றாலும் அரசின் உதவியே போதுமானதா என்று கேட்டால், போதுமானதல்ல, தனியாரின் உதவிகளும் தேவைப்படுகின்றன.

''நம் அனைவரின் கூட்டு முயற்சியும் இதற்காக உருவாக்கப்பட வேண்டும்''

பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், நூலகங்கள் இவை எல்லாம் பொதுமக்கள் தரும் வரிப் பணத்தின் உதவியினால்தான் நடைபெறுகின்றன''

என்று குறிப்பிட்டார்.

பல்வேறு பதிப்பகத்தார்கள், தனியார்கள் நூலகங்களுக்குரிய தளவாடப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். அவற்றிற்காக நன்றி தெரிவித்தார் கல்வி அமைச்சர்.

பெரியார் நகர் கூட்டுறவு வீட்டு மனைச் சங்கத்தினர், நூலகத்திற்காக அன்பளிப்பாகத் தந்த 7 கிரவுண்டு அளவுள்ள இடத்திற்குரிய ஆவணங்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் அளித்தனர்.

விழா இறுதியில், மாவட்ட நூலக அலுவலர் திருமதி அ. செரீன் அகமது நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு**
**தமிழ்ப்பித்தன்**



## பொது நூலகங்கள் சில செய்திகள்

★ 1948-இல் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் அமலாகியது.

★ தமிழ்நாட்டைப் பின்பற்றி, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மேற்கு வங்காளம், மராட்டியம் ஆகிய மாநிலங்களும், நூலகச் சட்டம் இயற்றி உள்ளன.

★ மாநிலப் பொது நூலகமாக கன்னிமாரா நூலகம் விளங்குகிறது.

★ மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் 18 உள்ளன.

★ சொத்துவரிகளில் நூலக வரி, ரூபாய்க்கு 5 காசு என வசூலிக்கப்பட்டு வருகிறது.

★ சென்னை நகரில் மட்டும் சுமார் 70 லட்ச ரூபாய் நூலக வரியாகக் கிடைத்து வருகிறது.

★ நூலக வரி மூலம் வரும் தொகையில் 50 சதவிகிதம், நூல்கள் வாங்குவதற்கும், 25 சதவிகிதம், பத்திரிகைகள் வாங்குவதற்கும், 25 சதவிகிதம், வாடகை, மின்சாரம், நூல் அடுக்குகள் மற்றும் பிற செலவுகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

★ தமிழ்நாடு முழுதும் உள்ள நூலகங்களில் 175, சொந்தக் கட்டிடங்களிலும், 830, வாடகைக் கட்டடங்களிலும், 536 (பஞ்சாயத்து அலுவலகம் போன்றவற்றில்) இலவசக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

★ சென்னை மாவட்டத்தில் உள்ள 136 நூலகங்களில் 90 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுகின்றன.

★ தமிழ்நாடு முழுதும் உள்ள நூலகங்களில் 15½ இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர்.

★ தமிழ்நாடு முழுதும் ஆண்டுக்கு 4½ கோடிப் பேர் நூலகங்களுக்கு வருகை தருகின்றனர்.

★ 127 இலட்சம் பேர், நூல்களை எடுத்துச் சென்று படிக்கிறார்கள்.

★ பெரியார் நகர் நூலகத்திற்காக அளிக்கப்பட்டுள்ள இடம் 7 கிரவுண்ட்.

★ நூலகம் அமைப்பதற்குரிய செலவு மதிப்பீடு ரூ.14½ இலட்சம்.

★ 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு கிளை நூலகம் என்னும் முறையில் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

★ மாணவர்களுக்கு உதவும் வகையில் பாடநூல் பிரிவுகள் மைய நூலகங்களிலும் கிளை நூலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# செய்திகள் செய்திகள்

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் ஏறத்தாழ 1 கோடியே 17 இலட்சம் மாணவ மாணவியர் பயில்கின்றனர். இவர்களுக்குத் தேவையான 6 கோடியே 22 இலட்சம் பாட நூல்களை 1989-90-ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் விநியோகிக்க உள்ளது. இவர்களில் 64 இலட்சம் மாணவ மாணவியர் தமிழ்நாடு அரசு இலவச பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ரூ. 19.66 கோடி மதிப்புள்ள 3 கோடியே 82 இலட்சம் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. 53 இலட்சம் மாணவ மாணவியருக்குத் தேவையான 2 கோடியே 40 இலட்சம் பாடநூல்கள் விற்பனை செய்யப்பட உள்ளன. இவற்றின் மதிப்பு ரூ. 13.34 கோடியாகும்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய 'குறளோவியம்', அவரது ஒப்புதலைப் பெற்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் என அண்ணா மலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சேதுநாராயணன் அவர்கள் தமிழாசிரியர் மன்ற 21-வது மாநாட்டுக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார். *(4-6-89)*

உலகப் பொதுமறை 'திருக்குறள்' இந்திமொழி பெயர்ப்பை 5-6-89 அன்று டெல்லியில் நடந்த விழா ஒன்றில் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் வெளியிட்டார். 1330 குறட் பாக்களையும் பேராசிரியர் திரு. எம். ஜி. வெங்கட கிருஷ்ணன் இந்தியில் மொழிபெயர்த்து நூலாக்கினார்.

பர்மா நாட்டின் பெயர் 'மயான்மா' என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பர்மா என்ற பெயர், பர்மா இனத்தவரை மட்டுமே குறிப்பதாக உள்ளதால் அனைத்து இனத்தவர்க்கும் பொதுவான பெயராக 'மயான்மா' என மாற்றப்பட்டுள்ளது. தலைநகரான ரங்கூனை 'யங்கோன்' என்றே பர்மா மக்கள் உச்சரிப்பதால் ரங்கூன் பெயர் 'யங்கோன்' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பர்மாவில் காலனி ஆட்சி நடந்தபோது வைக்கப்பட்ட பல பெயர்கள் மக்கள் உச்சரிப்பிற்கு ஏற்ப விரைவில் மாற்றப்பட உள்ளன.

தூத்துக்குடி அருகே உள்ள 'வாகைக்குளம்' என்ற இடத்தில் விமான நிலையம் கட்டப்பட உள்ளது. இதையொட்டி இணைப்புச் சாலைகள் போடுதல், மைதானத்தைச் சமப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு தமிழக அரசு ரூ.20 இலட்சம் ஒதுக்கி உள்ளது.

## மறைந்த பின்னணிப் பாடகர் ஏ.எம். ராஜா குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரம் உதவி

புகழ்பெற்ற திரைப்படப் பின்னணிப் பாடகர் திரு. ஏ.எம். ராஜா மறைவையொட்டி, சென்னையில் சோவியத் கலாச்சார மையத்தில் 9.6.89 அன்று நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்றார். இரயில் விபத்தில் மாண்டுபோன அன்னாரின் உருவப் படத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், திரு. ஏ.எம். ராஜாவின் அருமை பெருமை பற்றிப் பேசியதோடு — "ஏ.எம். ராஜாவின் குடும்பத்திற்கு, முதல் அமைச்சர் நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

அதன்படி, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. ஐம்பதாயிரம் ரூபாய்க்கு உரிய காசோலை 1-6-89 அன்று ஏ. எம். ராஜாவின் துணைவியார் திருமதி ஜிக்கி என்கிற கிருஷ்ணவேணியிடம் வழங்கப்பட்டது.

## போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குச் சலுகைகள்

பணிக்காலத்தில் விபத்தில் இறக்கும் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகை இருபதாயிரம் ரூபாயிலிருந்து முப்பதாயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியளிக்கும் திட்டத்தினை உருவாக்கிச் செயல்படுத்துமாறு போக்குவரத்துக் கழகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்துவது குறித்து அரசு தீவிரப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இது குறித்த அரசின் முடிவு விரைவில் அறிவிக்கப்படும்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ஐம்பது ரூபாயிலிருந்து எழுபத்தைந்து ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்விக்கென வழங்கப்படும் கடன் தொகை முந்நூறு ரூபாயிலிருந்து ஐநூறு ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பயிர் நுண்ணறிவியல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் இலட்சுமணன், பேராசிரியர் மோகன் இருவரும் வாழை மரத்தில் ஏற்படும் குலைநோயைத் தீர்க்கும் வகை குறித்து புதிய வழிமுறையை ஆய்வு செய்து கட்டுரை சமர்ப்பித்தனர். இதற்கென இவர்கள் இருவருக்கும் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

# சொர்க்கக் கனாக்கள்

ஹம்சா தனகோபால்

யாமினியின் வாழ்வில் எப்படியும் இன்னும் மூன்று மாதத்தில் ஒளி பிறந்துவிடும் என திடமாக நம்பினாள் அவள் தாய் செங்கமலம்.

வாழைமரம் போன்று செழித்து வளர்ந்த மகளை அதுவும் கிராமத்தில் திருமணம் செய்யாமல் வைத்திருப்பது எப்படியெல்லாம் மற்றவர் வாய்க்கு அவலாகும் என்பது செங்கமலம் அறிந்ததுதான்.

இருப்பினும் என்ஜினீரிங், அதுவும் எலக்ட்ரானிக்ஸ் படித்த பிள்ளை, மாப்பிள்ளையாகக் கிடைக்க யாமினி அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும். பத்தாம் கிளாஸ் படித்த பெண்ணின் வாழ்க்கையில் முரளிதரன் தோன்றாத் துணையாக இருக்கப் போகிறான்.

அனாதையாகச் சட்டை கூட போடத் தெரியாத சிறுவனாய் முரளிதரன் நின்றபோது ஆதரவுக்கரம் நீட்டி அணைத்துக் கொண்டவள் செங்கமலம்.

செங்கமலத்தின் அண்ணன் மகன்தான் முரளிதரன். அண்ணனும் அண்ணியும் ஆடிப் பெருக்கிற்குக் காவிரியில் குளிக்கப் போனவர்கள், காவிரியின் உற்சாகத்திற்கு இரையாகிப் போனார்கள்.

காவிரியின் கரைகள் சலிக்கப்பட்ட மூன்றாவது நாள்தான் அவள் அண்ணனும் அண்ணியும் கிடைத்தார்கள். நாணல் புதரில் உயிரற்ற உடலாக.

கை விரித்து ஒதுங்கிக் கொண்ட சொந்தங்களிடையே கை கொடுத்தவள் செங்கமலம் மட்டும்தான். திருச்சிக்குப் பக்கத்தில் காவிரி பாயும் கிராமத்திற்கு வாழ்க்கைப்பட்டுப்போன போது செங்கமலம் நகரத்திற்கு அல்லாமல் கிராம வாழ்க்கையாக அமைந்துவிட்டதே என வருந்தாமல் இல்லை.

ஆனால் அந்தக் கிராம வாழ்க்கை கூட மூன்று வருடம் கூட நிலைத்து நிற்கவில்லை. அவள் மங்கலங்களைப் பறித்துக் கொண்டு அவள் கணவன் போய்விட்டபோது யாமினி தாயின் மடியில் விரல் சூப்பும் பச்சைக் குழந்தை.

அவள் தன் துயரங்களுக்காக வாழ்க்கை வற்றிய பாலையாக ஆகிவிட்டதற்காகக் கலங்கி கண்ணீருடன் கூத்துத்தூணுக்குத் துணையாகி விட்டவள் அல்ல. எழுந்து நின்று பிரச்னைகளோடு போராடி வென்றவள். கணவன் வைத்துச் சென்ற ஐந்து ஏக்கரா நிலம் இவள் உழைப்பைச் சொல்லியது.

கூலி ஆட்களை வைத்து விவசாயம் பார்த்தாள். கூலி ஆட்களோடு ஒரு கூலி ஆளாய் களை பிடுங்கினாள்; எரு சுமந்தாள்; நாற்று நட்டாள். சந்தன மேனி வெயிலில் கருத்துப் போயிற்று.

அவள் இளந்தோளில் ஒரு குழந்தைக்கு இரு குழந்தைகள் சுமையாகிப் போனார்கள். அந்தச் சுமையைச் சந்தோஷமாய்ச் சுமந்தாள் செங்கமலம்.

யாமினிக்குச் செங்கமலம் காட்டும் சலுகையை விட முரளிதரனுக்கு அதிகம் கிடைத்தது. பட்சணம் முதற்கொண்டு பணம் வரை முரளி என்றால் தனிச் சலுகைதான்.

யாமினியை அவன் அடித்துவிட்டு அழ வைத்தாலும் தீர்ப்பு என்றும் முரளி பக்கம் தான் இருக்கும். யாமினியைப் பள்ளிப் படிப்போடு நிறுத்தி விட்டாள். முரளியை மட்டும் பட்டணத்திற்கு அனுப்பி என்ஜினீரிங் படிக்க வைத்தாள். யாமினி கல்லூரிக்குப் போக அழுத போது அவள் ஒரே குரலில் தன் முடிவைச் சொல்லி விட்டாள்.

"இதோ பாரு யாமினி, இங்கே வர வருமானத்தில் ஒருத்தரத்தான் படிக்க வைக்க முடியும். அவன் ஆண் பிள்ளை, அவன் படிக்கட்டும், அவனைக் கல்யாணம் செஞ்சுட்டப்புறம் நீ சமையலறையில்தான் அடைஞ்சு கிடக்கப் போறே. உன்னை உத்தியோகத்திற்கு அனுப்பப் போறதில்லை. ஏன் முரளி! நீ என்னப்பா சொல்றே."

முரளி உடனே பதில் சொன்னான்.

"அத்தை, நீங்க நினைக்கிறபடி செய்யுங்க."

செங்கமலம் எதிர்பார்த்ததைவிட முரளி மிக சூட்டிகையாகப் படித்தான்; மளமளவென்று எல்லாவற்றிலும் முன்னால் நின்றான்.

எல்லாவற்றிலும் அவன் சுறுசுறுப்புதான். எந்தச் செயலிலும் அத்தையின் மனம் கோணாமல் பார்த்துக் கொண்டான். அது வேண்டும், இது வேண்டும் என, யாமினி போல் அடம் பிடிக்காமல் தட்டில் வைப்பதைச் சாப்பிடுவான் முரளி.

"பாவம் அத்தை, எத்தனை வேலைன்னு செய்வாங்க. சாப்பிடு யாமினி" என்பான்.

அந்த முரளிதான் இன்று மாலை வரப் போகிறான். இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம். குட்டி பங்களா, கார், போன் என்று தனியார் வேலையில் இருப்பவன்.

தன் செலவு போக மீதியை அப்படியே அத்தைக்குச் செக்காக அனுப்பி விடுவான்.

செங்கமலத்துக்கு நெஞ்சு கொள்ளாத பெருமை. எல்லோரிடமும் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போவாள்.

"நான் பெத்த பையனா இருந்தாக்கூட இப்படி நடந்துப்பானா என்கிறது சந்தேகம் தான். வர தையில யாமினியை அவன் கையில் பிடிச்சுக் கொடுத்துட்டா என் பாரம் தீர்ந்துரும்." வாய்க்கு வாய் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போவாள் செங்கமலம்.

இன்று வரப்போகிற முரளிக்காகத் தன்னை மாற்றி மாற்றி அலங்கரித்து அழகு பார்க்கிறாள் யாமினி. பருவம் சாமரம் வீசத் தொடங்கிய நாள் முதல் வசந்த வீதியில் உலாப்போன நேரம் முதல் இவள் நெஞ்சில் இந்தச் சொர்க்கக் கனாக்கள் கனக்கின்றன.

பட்டணத்தில் உத்யோகம் பார்க்கும் அத்தை மகன். பட்டண வாசம். பற்பல நாகரிக யுவதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றவன். நீண்ட கூந்தலும் மஞ்சள் முகமும் தலை நிறைய மகிழம்பூவும் மல்லிகையுமாய்த் திரியும் இவளை மணக்கப் போகிறான்.

உண்மையில் முரளி உயர்ந்தவன்தான். அவனை மணமுடிப்பதால் இவள் அன்னைக்கு வரதட்சணை, சீர்வரிசை, நகை, ஸ்கூட்டர் என்று ஏதும் செலவு இருக்கப் போவதில்லை. அப்படிச் செலவு செய்ய அவள் அன்னையிடம் பணமில்லை. ஏதோ காது கழுத்து என சின்ன சின்ன பொன் நகைகளாகச் செய்து வைத்திருக்கிறாள். திருமணம் கூட ஆடம்பரமான முறையில் செய்யப் போவதில்லை. எல்லாவற்றையும் அம்மா திட்டமிட்டுத்தான் வைத்திருக்கிறாள்.

யாமினிதான், 'அது வேண்டும்', 'இது வேண்டும்' என அடம் பிடித்திருக்கிறாள். முரளி, என்று, எது வேண்டும் என கேட்டிருக்கிறான்!

இப்போது கூட திருமணத்திற்கு நெக்லஸ் வேண்டும், நெளி மோதிரம் வேண்டும் என அடம் பிடித்தவள் இவள்தான்.

"அம்மா, நான் பத்திரிக்கை வாங்கிட்டு வரேன்".

யாமினி தெருக்கோடியில் இருக்கும் பிரஸன்னாவின் கடைக்குப் புறப்படுகிறாள். முரளி, பிரஸன்னா, யாமினி எல்லாரும் விளையாட்டுத் தோழர்கள். பிரஸன்னா சுற்றி வளைத்து இவளுக்கு உறவும் கூட.

அவன் கடையில் இல்லாத பொருட்களே இல்லை என்று சொல்லலாம். வெற்றிலை முதல் வெல்லம் வரை எல்லாம் விற்கப்படும்.

ஒருமுறை இவளுக்காக, கிளிக் குஞ்சைப் பிடிக்க மாமரம் ஏறினபோது பிரஸன்னா தவறி கீழே விழுந்து விட்டான். கால் இசகு பிசகாக முறிந்து விட்டது. ஒரு காலை விந்தி விந்திதான் நடப்பான். யாமினியின் முகம் சிறுத்தால் பிரஸன்னாவின் இதயம் சுருங்கி விடும்.

யாமினியின் வீட்டின் நிழல் தேடி முரளி வந்த நாள் முதல் அவர்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்ட ஒன்று. ஒருவருக்காக ஒருவர் வளர்ந்தார்கள்; வளர்க்கப்பட்டார்கள்.

இந்த பிரஸன்னாவிற்கு இவள் மீது தீராத அன்புண்டு. இவள் பொருட்டு என்ன வேண்டும் ஆனாலும் செய்வான். இவள் வளர்ந்து நிற்பது முரளீதரனுக்குத்தான் எனத் தெரிந்த நாள் முதல் ஒரு எல்லைக் கோட்டிற்குள் நின்று இவளைக் கை கூப்பித் தொழும் பக்தனாக மட்டுமே இருந்து வந்திருக்கிறான்.

''யாமினி நான் கேட்டேனே பதில் சொல்லலியே. என்ன ரொம்ப சந்தோஷமாக இருக்கே.''

''முரளி வரப் போறான். ஸாரி ஸாரி அவர் வரார்.''

''ஓ... அப்ப உங்க வீட்ல சுருக்க கொட்டு மேளம் கொட்டப்போறதுன்னு சொல்லு, உன் கையால எனக்கு விருந்து போடுவியா யாமினி.''

''ஐய்ய... கல்யாணப் பொண்ணா லட்சணமா நிக்கறதைவிட்டு உனக்காகப் பட்சணத் தட்டைத் தூக்கிண்டு திரிய முடியுமா.''

''ஓ...ஆமாம் மறந்துட்டேன். கல்யாணப் பொண்ணுக்கு மாப்பிள்ளையைப் பார்க்கவே நேரம் போறாது.''

''சீ...''

யாமினி துள்ளி ஓடினாள்.

யாமினியம் செங்கமலமும் எதிர்பார்த்தபடி இவர்களுக்காக எராளமான பரிசுப் பொருட்களுடன் வந்து சேர்ந்தான் முரளிதரன். சேலை, சோளி, சிறு நகைகள் என ஒவ்வொன்றையும் எடுத்து அழகு பர்ர்த்துக் கொண்டிருந்தாள் யாமினி.

''முரளி, நீ திரும்பப் போறப்ப இவளையும் அழைச்சுண்டு போயிருப்பா. ஏதாவது ஒரு கோயில்ல கல்யாணத்தை முடிச்சுடறேன். வயசுக்கு வந்த பொண்ணைக் கிராமத்திலே வச்சுண்டு காபந்து பண்ணறது நன்னாயில்ல''.



# மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்க்கு நிதிஉதவி



கோவையில் 22.5.89 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மூடப்பட்ட ஆலைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.200/- வீதம் வழங்கப்படும் என அறிவித்தார்.

அந்த அறிவிப்பையொட்டி மூடப்பட்ட 22 ஆலைகளைச்சார்ந்த 13,267 தொழிலாளர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூ.200 வீதம் ரூ.26,53,400 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

தூணுக்குப் பின்னால் நின்றபடி நகம் கடித்தபடி இவன் பதிலில் முகம் சிவந்து கொண்டிருந்தாள் யாமினி.

"அத்தை, எப்பவும் நீங்க என் நன்மைக்காகத்தான் எதுவும் செய்வீங்க. என் அம்மா அப்பா இருந்தாக்கூட இத்தனை செய்திருப்பாங்களான்னு சந்தேகம் தான். வந்து அத்தை ..."

"சொல்லு முரளி. தைரியமாகச் சொல்லு."

மெல்ல நிறுத்தி நிதானமாகப் பேசினான் முரளி.

"எங்க முதலாளிக்கு என் மேலே ரொம்பப் பிரியம் அத்தை. அவர் ஒரே பொண்ணை எனக்குக் கட்டி வச்சு பாக்டரி, ஆபீஸ் எல்லாத்தையும் என் மேற்பார்வையில் விடறதா இருக்கார். யாமினியைப் பண்ணின்டா இதெல்லாம் எப்படி அத்தை கிடைக்கும்."

விக்கித்துப் போனார்கள் செங்கமலமும் யாமினியும். யாமினிக்கு அழுகை கூட வர மறுத்தது.

"வாஸ்தவம்தான்." செங்கமலம் தன் ஏமாற்றத்தை ஒரே வார்த்தையில் மறைத்துக் கொண்டாள்.

விம்மலுடன் அங்கிருந்து ஓடினாள் யாமினி.

"இதைச் சொல்லத்தான் நான் வந்திருக்கேன் அத்தை. நீங்க சரின்னு சொன்னா எனக்கும் கல்பனாவுக்கும் கல்யாணம் நடந்த மாதிரிதான். அவ எம்.ஏ. படிச்சவ. மாடர்னா இருப்பா."

அத்தை கண்ணில் ஜனித்த கண்ணீரை மறைத்துக் கொண்டாள். யதார்த்தமான சிரிப்புடன் சொன்னாள்.

"உன் மனசுக்குப் பிடிச்சதைச் செய்பா முரளி."

திருமண அழைப்பிதழுடன் வருவதாகச் சென்னைக்குப் புறப்பட்டு விட்டான் முரளி.

யாமினி தன் துயரத்தை மாந்தோப்பிலும் ஆற்றங்கரையிலும் கரைத்துக் கொண்டிருந்தாள். செங்கமலம் தன் தலையில் இடி இறங்கியதாகக் கண்ணீர் விட்டாள். தன் செல்லப் பெண்ணை ஒப்பேற்ற வேண்டும். அதுவும் நன்கு படித்த, சம்பாதிக்கும் மாப்பிள்ளை வேண்டும் என்றே மகளைக் கூடப் படிக்க வைக்காமல் அண்ணன் மகனைப் படிக்க வைத்தாள்.

ஏலம் பூக்க எட்டிச் செடி வளர்த்தாளோ இவள்.

இப்போது அந்த முரளியோ எம்.ஏ. படித்த பெண்ணை, அதுவும் பணக்காரப் பெண்ணை மணக்கப் போகிறான். ஏறிப்போன ஏணியை எட்டி உதைத்து விட்டானே.

மகள் தாயைத் தேற்றுவதா, தாய் மகளைத் தேற்றுவதா என்று தெரியாமல் தடுமாறிப் போனார்கள். ஒருவர் துயரை மற்றவரிடம் மறைத்தார்கள்.

முரளிதரன் தன் திருமணப் பத்திரிகையுடன் வருவதற்குள் செயல் பட்டுவிட வேண்டும் என்கிற தீவிரம் செங்கமலத்திற்கு இருந்தது.

யாமினிக்கும் அதே எண்ணம். இவர்கள் நினைத்தது போலவே முரளிதரன் வந்து சேர்ந்தான்.

"அத்தை, என்னை மன்னிச்சிருங்க. கல்பனா தன்னோட படிச்சவனை ரிஜிஸ்டர்ட் மேரேஜ் செய்துட்டா. அதனாலே எனக்கு யாமினியைப் பண்ணி வச்சிருங்க அத்தை. பாவம் யாமினி! அவளுக்கு என் மேலே உசிரு."

இவன் பேச பேச தூணோரம் நின்ற யாமினி கோபத்தில் முகம் சிவக்கிறாள்.



செங்கமலம் தொண்டையைச் செருமிக் கொண்டு பேசினாள்.

"முரளி, உனக்கு இப்பதான் யாமினி பாவமாகப் படுகிறாள். உனக்காகவே உன்னைப் படிக்க வைக்கவே அவள் படிப்பை நிறுத்தினேன். வீட்ல இப்ப வாழை மரம் கட்டியிருக்கே, நீ பார்க்கலையோ. யாரும் உனக்குச் சொல்லலியா. விடிஞ்சா யாமினிக்கும் பிரஸன்னாவுக்கும் கல்யாணம்."

"பிரஸன்னாவுக்கும் யாமினிக்குமா. அவன் நொண்டியாச்சே."

கோபத்துடன் குறுக்கிட்டுப் பேசினாள் யாமினி.

"ஆமாம் முரளி. பிரஸன்னா முடமானவர் தான். முடம் அவர் உடம்பிலே இருக்கு. மனசுல இல்லை. என்னை எனக்காகவே கல்யாணம் செய்துக்கப் போறார். நான் பாக்டரி கொண்டு வரேனா, பவுன் நகை கொண்டு வரேனா என கணக்குப் போடலை பிரஸன்னா."

யாமினியின் பேச்சில் இடைப் புகுந்தான் முரளி.

"நான் கிடைக்கலை என்கிறதுக்காக இந்த அவசர முடிவுக்கு வந்திருக்க வேண்டாம் யாமினி நீ. இப்பவும் ஒண்ணும் ஆகலை. நாளை முகூர்த்தத்தில நம்ம கல்யாணத்தை வச்சுக்கலாம். அந்தக் கல்பனாவுக்கும் ஒரு பாடம் கத்துக் குடுத்த மாதிரி இருக்கும்."

முரளியின் பேச்சில் யாமினிக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வருகிறது.

"இந்தக் கல்யாணத்தைப் பார்த்துவிட்டு விருந்து சாப்பிடறதா இருந்தா இருங்க. இல்லேன்னா இப்பவே புறப்பட்டுப் போங்க முரளி. இனிமே இந்த யாமினி உங்களுக்குக் கிடைக்கவே மாட்டா. பெண்களுக்கும் மனசிருக்கு. அதில உணர்ச்சியிருக்கு. அதைப் புரிஞ்சிக்குங்க. அம்மா, இங்கே நின்னுண்டிருக்காதே. வாம்மா கல்யாண வேலை தலைக்கு மேலே கிடக்கிறது."

முரளி நிதானமாக அந்த வீட்டைவிட்டுத் தெருவில் இறங்கி நடக்கிறான்.

நாதஸ்வரம் புதிதாய்க் காற்றில் ஜனிக்கிறது.

## பொதுத் தொண்டு

★ பொதுத் தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லை, அவன் தன் இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலையாகும்.

★ உண்மையான பொதுத் தொண்டர்களுக்கு என்றும் சிறுமை இருக்காது; இருந்தாலும் அவர்கள் அதைச் சிறுமையாகப் பாராட்டமாட்டார்கள்.




# சூழல் வளம் நமது நலம்

ஆண்டுதோறும் ஜூன் திங்கள் 5-ஆம் நாள் உலக சுற்றுப்புறச் சூழல் நாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் 5-6-89 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் உலகச் சுற்றுப்புறச் சூழல் நாள்விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.பி.கந்தசாமி அவர்கள் தலைமை வகித்தார். தமிழ்நாடு சமூகக்காடுகள் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமை உரையில்,

" உலக மக்கள் அனைவரும் சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த விழா கொண்டாடப்படுகிறது. தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் வெளியிடும் புகையால் சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது. இதற்காகத் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

"கடந்த ஆண்டுகளில் காடுகள் அழிக்கப்பட்டன. அவற்றை மீண்டும் வளர்க்க முதல்வர் அவர்கள் முயன்று வருகிறார். உலக வங்கிக் கடனுதவி மூலம் ரூ. 120 கோடி செலவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் விதைகளைத் தூவி மரங்களை வளர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

உலக இயற்கை மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு அமைப்பின் தலைவரும், மாநில திட்டக் குழு உறுப்பினருமான டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் விழா உரை ஆற்றினர்.

"இந்தியாவில் உள்ள மொத்த நிலப் பரப்பில் 4 சதவீதம் தமிழ்நாடாகும். ஆனால் இந்திய மக்கள்தொகையில் 7 சதவீதம் பேர் தமிழகத்தில் உள்ளனர். அந்த அளவுக்கு மக்கள் நெருக்கடி உள்ளது. வரும் 2000 ஆவது ஆண்டில் ஒரு மனிதனுக்கு ஏவ்வளவு தேவையான நிலமோ அதைவிடக் குறைவாகவே தமிழகத்தில் நிலம் இருக்கும். இதனை வைத்து நாம் நமது சுற்றுப்புறச் சூழ்நிலைகளைச் சமாளித்தாக வேண்டும்.

"அதாவது 0.11 எக்டேர் நிலப் பரப்புக்குள் தனிமனிதத் தேவைகளை நிறைவு செய்ய மிகக் குறைவான நிலப்பரப்பே கிடைக்கும். இதனை உணர்ந்து முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சமூகக் காடுகள் திட்டத்தில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும்" என்று அவர் தமது உரையில் கூறினார்.

வாழ்த்துரை நல்கிய சுவீடன் நாட்டின் தூதரக அதிகாரி திரு ரிங்கன்சன் அவர்கள், "சாகுபடிக்குப் பயனற்ற நிலையிலுள்ள நிலங்களைக் காடுகள் வளர்ப்பு உள்ளிட்ட பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று தெரிவித்தார்.

பின்னர் உலகச் சுற்றுப்புறச் சூழல் நாளையொட்டி வனத்துறையின் பணிகளை விளக்கும் கையேட்டை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

சமூகக் காடுகள் வளர்ப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் நாள் தொடர்பான கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கும், மரம் வளர்ப்புத் திட்டத்தைச் சிறப்பாக மேற்கொண்ட பல்வேறு ஊராட்சிகளுக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பரிசுகள் வழங்கிச்சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

"படித்த மக்களிடத்தில்-அறிவார்ந்த மக்களிடத்தில்தான் இந்த சுற்றுப்புறச் சூழல்

குறித்த கருத்துக்கள் உலவிக் கொண்டிருக் கின்றன. நாம்தான் அதுபற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இனி பட்டிக்காட்டுப் பகுதியில் இருக்கின்ற பாமர மக்களிடத்தி லும் சென்று சேர வேண்டும் என்பது என் பேரவா.

"நமக்காக நாம் விஞ்ஞானத்தைப் பயன் படுத்துகிறோம். அப்படிப் பயன்படுத்துகிற நேரத்தில் அந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சி யின் விளைவாக மாசு பரவுகின்றது. அந்த மாசகற்றி விஞ்ஞானத்தை வளர்க்க வேண்டி யவர்களாக நாமிருக்கிறோம். விஞ்ஞானத்தை வளர்த்து வருவதால் மாசு பரவுகிறது, சுற்றுப்புறம் கெடுகிறது, என்று எண்ணி விஞ்ஞானத்தை வளர்க்காமல் இருந்துவிட் டால், இன்று உலகம் நமக்கு மிக அருகாமை யில் இருக்கிறதே, அது மாறி, உலக நாடு ஒவ்வொன்றும் மிகத் தொலைவிலே போய் நிற்கும்.

"சந்திர மண்டலம்கூட எதிர்காலத்தில் மிக அருகாமையில் உள்ள நம்முடைய பக்கத்து வீடு என்று சொல்லத்தக்க அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. ஆனால் அந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாக ஏற்படக்கூடிய சூழலில் இதுபோன்ற சங் கடங்களை நாம் அனுபவித்துத்தான் தீர வேண்டும். அது விட்ட வழி என்றில்லாமல், அதை ஓரளவல்ல-பெருமளவிற்கு நீக்கி, மக் களுக்கு நல்வாழ்வை நாம் அளித்தாக வேண்டும்.

"தொழிற்சாலையில் நாட்டமுடைய அதி பர்கள்-அந்தத் தொழில் மூலம் ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங் கக் கூடியவர்கள்-நமக்குத் தேவை. ஆனால் அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான தொழி லாளர்களுக்கு வேலைவாய்ப்பைத் தந்து விட்டு பல்லாயிரக்கணக்கான மக்களின் சுவாசத்தைக் கெடுப்பது முறையல்ல என் பதை நான் பலமுறை எடுத்துச் சொல்லி யிருக்கிறேன்.

"எனவேதான் வாரியமாக அமைக்கப் பட்டுள்ள இந்த அமைப்பின் மூலம் சில தகுதிச் சான்றிதழ்களைப் பெற்றுத்தான் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்று நாம் கண்டிப்பாகக் கூறி வருகின் றோம்.

"தொடர்ந்து தொழில் வளர வேண்டும் என்ற இந்த அரசின் ஆணையை முதலாக வைத்துக்கொண்டு, தொழிலாளிகளுக்கு வேலை தந்தோம் என்ற கணக்கை மாத்திரம் தந்துவிட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் வேதனையை உருவாக்க எந்தத் தொழிலதிபரும் முன்வரக் கூடாது.

"அதிகாரிகளிடத்தில் நான்கூட சொல்லி யிருக்கிறேன். இனிமேல் சுற்றுபுறத் தூய் மையைக் கெடுக்கக்கூடிய தொழிற்சாலைக் கான அனுமதியைத் தருவதாக இருந்தால், முதலில், அங்கு கழிவுகளால் ஏற்படக்கூடிய தூய்மையற்ற நிலையை மாற்றக்கூடிய கரு விகளை - இயந்திரங்களை அமைத்துவிட்டு, அதற்குப் பிறகு அனுமதி தர வேண்டும் என்று அரசின் சார்பில் முடிவெடுத்து அதை நான் அதிகாரிகளிடத்தில் அறிவித் திருக்கிறேன்.

"எனவே, எல்லா வகையிலும் சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாக்கின்ற வகையில் தமிழக அரசு பாடுபடும். இந்த வாரியம் இதுபோல சென்னை மாநகரம் போன்ற நகரங்களில் மாத்திரம் கருத்துக்களை எடுத் துச் சொன்னால் போதாது. பட்டி தொட்டி களிலும் பாமர மக்கள் உள்ளத்தில் பதிய வைக்கும் அளவுக்கு இந்தக் கருத்துக்கள் சொல்லப்பட வேண்டும்" என்று கூறினார்.

அகம் தூய்மை வாய்மைக்கு!
புறம் தூய்மை சூழலுக்கு!
மு.க.
10/4/89.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை யின் ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு துரை சுந்தரேசன் இ.ஆ.ப. அவர்கள் சென்னை கடற்கரை சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பான துறையின் ஆய்வு அறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார்.

முன்னதாக உலகச் சுற்றுப்புறச் சூழல் நாளையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண் காட்சியினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பார்வையிட்டார்.

விழாவில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. ஆர். பாலு அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜோர்சிங் சீய்ம் இ. ஆ. ப. அவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் திரு. பி. எம். பெல்லியப்பா இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றி னார். முதன்மை வனத்துறைத் தலைவர் திரு. ஜான் ஜோசப் இ.வ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

-வி. இராவணன்.



# சத்துணவுடன் முட்டை

சத்துணவு சாப்பிடும் 86 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான 3.6.89 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தொடக்க நிகழ்ச்சியாக, சைதாப் பேட்டையிலுள்ள அரசினர் மாதிரி உயர் நிலைப்பள்ளியில் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் இத்திட்டத்தைத் துவக்கி வைத் தார். மாதத்தில் இவ்விதம் 2 நாட்கள் முட்டை வழங்கப்பட உள்ளது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத் தில் அறிவித்த ஒருமாத காலத்திற்குள் திட்டம் செயல்படத் தொடங்கியது இதன் சிறப்பாகும்.

# வேளாண்மைச் செய்திகள்

## வாழைக்கன்று தேர்ந்தெடுத்தலும், நடவுக்கு முன் தயாரித்தலும்

1. நோய்கள், பூச்சிகள் தாக்காத தோட்டங்களில் இருந்து கன்றுகளைத் தேர்வு செய்ய வேண்டும். 2. தேர்வு செய்த கன்றுகளின் பழைய வேர்களையும், மணல், கட்டி போன்றவற்றை நீக்கி விட்டு தண்டுப்பகுதியில் 15-20 செ.மீ. விட்டு மேல் பகுதியை நீக்கி விட வேண்டும். 3. வாழைக்கன்றுகள் 1½ - 3 கிலோ எடை இருக்குமாறு தேர்வு செய்ய வேண்டும். 4. எடைக்குத் தகுந்தாற் போல கன்றுகளைத் தரம் பிரித்து வைக்க வேண்டும். 5. பிறகு கிழங்கின் மேல் பகுதியை நன்கு சீவி கிழங்குகளின் வெள்ளைப் பகுதி நன்கு தெரியச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது நோய் தாக்கிய கன்றுகள் மற்றும் கூன் வண்டுகளால் தாக்கப்பட்ட கிழங்குப் பகுதிகளைச் சீவி அப்புறப்படுத்தி விடலாம். 6. தாக்குதல் அதிகமாக இருந்தால் கன்றுகளைத் தவிர்த்து விட வேண்டும்.

கீழ்க்கண்ட வகை வாழைக் கன்றுகள் நடும்பொழுது கிழங்கு சீவிய கன்றுகளை 0.1 சதவீதம் எமிசான் கரைசலில் 5 நிமிடம் ஊறவைத்துப் பிறகு நட்வு செய்ய வேண்டும். 1. ரஸ்தாளி, 2. மொந்தன், 3. மலை வாழை (கோ 1 வாழை), 4. சின்ன மொந்தன் (வயல் வாழை), 5. கற்பூர வள்ளி, கீழ்க்கண்ட வாழை இரகங்களுக்குக் கன்றுகளை நனையும் எமிசான் கரைசலில் நனைக்கத் தேவையில்லை.

1. பூவன், 2. ரோபஸ்டா, 3. குள்ள வாழை.

கன்றுகள் நட்ட ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு வாழைக் கன்றைச் சுற்றிலும் 40 கிராம் பியூரடான் (Furadon) குருணை மருந்தை வாழையைச் சுற்றி இட்டு மண்ணினால் மூடி சிறிது அளவு நீர் பாய்ச்ச வேண்டும். வாழையை நூற் புழுக்களிலிருந்து காப்பாற்ற இம்முறை மிகவும் பயன் படுகிறது. ஒவ்வொரு வாழைக்கும் ரூபாய் ஒன்று அதிக செலவு ஆனாலும் நூற்புழு தாக்குதலைத் தவிர்ப்பதால் வாழையின் குலை எடை அதிகமாவதால் ஒவ்வொன்றும் ரூபாய் ஐந்து முதல் எட்டு வரை அதிக வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## கார்பருவத்திற்கேற்ற நெல் இரகங்கள்

திருநெல்வேலி, சிதம்பரனார், மதுரை, அண்ணா, கோயம்புத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் கார்பருவத்தில் (மே-ஜூன்; வைகாசி பட்டம்) சாகுபடி செய்ய டிகேஎம்.9, ஆடுதுறை 36, ஆடுதுறை 37, அம்மை 16, அம்பை 17, கோ.37(வைகை), ஐஇடி 1444(இராசி), ஐஆர்.50 மற்றும் ஐஆர்.64 ஆகிய குறுகிய கால இரகங்கள் ஏற்றவை.

அம்பை.17, 100 நாட்களிலும், டிகேஎம்.9, 105 முதல் 110 நாட்களிலும் பலன் தரவல்ல சிகப்பு அரிசி இரகங்களாகும். ஏனையவை 110 முதல் 115 நாட்களில் பலன் தரவல்ல வெள்ளை அரிசி இரகங்களாகும். அனைத்து இரகங்களும் ஏக்கருக்கு சராசரி 2.5 டன் தானிய மகசூல் தரவல்லவை.

அம்பை.16 இதர இரகங்களை விடச் சற்று உயரமாகயிருப்பதால் (95-100 செ.மீ) அதிக வைக்கோலும் தர வல்லது. அம்பை. 17 மிகவும் வயது குறைவாகயுள்ளதால், கடைமடைப்பகுதி, மற்றும் பருவத்தே மழை கிடைக்காத அல்லது பாசனவசதிக்குறைவான பகுதிகளில் நேரடி விதைப்பிலும் நல்ல பலனைத் தரவல்லது.

டிகேஎம்.9, மற்றும் ஐஆர்.50 குலை நோயால் பாதிக்கப்படக்கூடியவை. மற்றபடி அனைத்து இரகங்களும் முக்கிய பூச்சி நோய்களுக்கு எதிர்ப்புச் சக்தி கொண்டவை.

## அதிக ராகி விளைச்சலுக்கு நுண்ணுயிர் உரங்கள்

ராகி பொதுவாக இறைவையிலும் சில இடங்களில் மானாவாரியாகவும் பயிரிடப் படுகிறது. நுண்ணுயிர்க்கலவைகளை ராகிப் பயிருக்கு இடுவதினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி களப் பரிசோதனை நடத்தப் பட்டது.



அசோஸ்பைரில்லம், நுண்ணுயிர்ப்பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்தைக் காற்றிலிருந்து நிலைப்படுத்தும் திறனுடையது. வேர் உட்பூசணம் என்ற நுண்ணுயிர் இடுவதால் மண்ணிலிருந்து அதிக அளவில் மணிச்சத்தை ஈர்த்துச்செடிகளுக்குத்தருகிறது. இந்த இரண்டு நுண்ணுயிர்களையும் கலந்து செய்யப்பட்ட களப்பரிசோதனையில் (ராகி. கோ.11) அதிக அளவில் விளைச்சல் கிடைத்தது. நுண்ணுயிர் இடப்படாத வயலில் ராகியின் விளைச்சல் ஒரு எக்டருக்கு 3804 கிலோ ஆகும்.

இரண்டு நுண்ணுயிரிகளையும் கலந்து வயலுக்கு இட்டதில் கிடைத்த மகசூல் 4289 கிலோ ஆகும். ஆகவே இந்த நுண்ணுயிரிகளை இடுவதால் அதிக மகசூல் கிடைக்கிறது.

## தென்னையைப் பாதிக்கும் மாவுப்பூச்சிகள், செதில் பூச்சிகளை அழிக்க

மாவுப்பூச்சிகளும், செதில் பூச்சிகளும் தென்னையில் அதிக சேதத்தை உண்டு பண்ண வல்லவை. செதில் பூச்சிகளின் தாக்குதலால் ஓலைகள் முதலில் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் மரம் நோயுற்றது போலக் காணப்படும். இளம் குரும்பைகளிலும், பாளைகளில் உள்ள பூக்களிலும் கூடச் செதில்பூச்சிகள் காணப்படும். மாவுப் பூச்சிகள் இளம் தென்னங்கீற்றுகளிலும், பாளைகளிலும் பெருமளவில் காணப்படும். மாவுப்பூச்சிகளின் தாக்குதலால் பாளை முழுவதும் காய்ந்துவிடும்.

தென்னையில் தோன்றும் மாவுப் பூச்சிகள், செதில் பூச்சிகள் குறித்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் இப்பூச்சிகளின் தாக்குதல் அதிக அளவில் (21%) கன்னியாகுமரி மாவட்டத்திலும், புதுக்கோட்டை மற்றும் கோவை மாவட்டத்திலும் முறையே 15.55, 15.04, சதம் உள்ளதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செதில் பூச்சிகளின் தாக்குதலினால் முதலில் பொன்னிறமான புள்ளிகள் இலைகளின் மேல்புறம் தோன்றும். அவற்றின் அடிப்பாகத்தில் செதல் பூச்சிகள் காணப்படும்.

எனவே பெருமளவில் வளர்ந்து வரும் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த தென்னை நாற்றங்கால்களில் டைமெதோயேட் 0.03% (1 மி.லி.மருந்துடன் 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில்) அல்லது மிதைல் பாரத்தியான் 0.025% (1 மி.லி. மருந்துடன் 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில்) கலந்து இலைகளின் மீது நன்குபடும்படி இருமுறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

வளர்ந்த தென்னை மரங்களைத் தாக்கும் மற்றப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி மற்றும் வெட்டுண்ணிகளை நாம் உபயோகிப்பதனால் மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த இரசாயனப்பூச்சிக் கொல்லிகளைவிட மீன் மண்ணெய் ரோசின் சோப்பு மிகவும் சிறந்தது. 1 கிலோ மீன் எண்ணெய் ரோசின் சோப்பினை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் செதில் பூச்சிகள் மற்றும் மாவுப் பூச்சிகள் கட்டுப்படுவதோடு அல்லாமல் மற்றப் பூச்சிகளை அழிக்கும் ஒட்டுண்ணிகளையும் பாதுகாக்கலாம். எனவே மேற்கூறிய முறையில் பயிர்ப் பாதுகாப்பு செய்து, தென்னையில் அதிக மகசூல் பெறலாம்.

## வருந்துகிறோம்!



தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலராக புதுக்கோட்டையில் பணியாற்றி வந்த திருமதி அ. கோவிந்தம்மாள், எம்.ஏ., அவர்கள் மே மாதம் 20-ஆம் நாளன்று மறைவெய்தினார்.

செய்தித் துறை சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. மே மாதம் 21 ஆம் நாளன்று அவரது உடல் சொந்த ஊரான திருவெறும்பூரில் எரியூட்டப்பட்டது.

1973-ஆம் ஆண்டு செய்தித் துறையில் உதவி மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியில் சேர்ந்த அவர், பின்னர் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலராகப் பதவி உயர்வு பெற்று, மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பணியாற்றியுள்ளார்.

மறைந்த கோவிந்தம்மாள் அவர்களுக்கு கணவரும், மகளும் உள்ளனர்.

கோவிந்தம்மாள் அவர்களின் மறைவுக்கு 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## எள்விதையின் முளைப்புத்திறன் அதிகரிக்கும் முறை

தற்பொழுது நீங்கள் சேமித்து வைத்துள்ள எள்விதைகளைச் சித்திரை-வைகாசி மாதங்களில் விதைக்க தேர்ந்தெடுப்பீர்கள். எள் விதையின் முளைப்புத் திறன் சேமிப்பில் குறைந்திருக்கக்கூடும். இக்குறையை நிவர்த்தி செய்து முளைப்புத் திறனை அதிகரிக்கக்கீழ்க்கண்ட முறையைப்பின் பற்றிப் பயன் அடையலாம்.

சேமிக்கப்பட்ட விதைகளை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். பின்பு டைசோடியம் பாஸ்பேட் கரைசலில் (3.60 கிராம் உப்பை 100 லிட்டர் தண்ணீரில் கரைக்கவும்). தேவையான விதைகளை 2 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்பு கரைசலை இறுத்துவிட்டு, விதைகளை முதலில் நிழலிலும், பின் வெய்யிலிலும்நன்கு உலர்த்த வேண்டும். பிறகு தேவையான விதை நேர்த்தி மற்றும் நுண்ணுயிர் கலந்து விதைக்க வேண்டும்.

**நன்மைகள்:**

- விதைகளின் முளைப்புத்திறன் அதிகரிக்கிறது.
- வீரிய நாற்றுக்கள் கிடைக்க ஏதுவாகிறது.
- மறுவிதைப்பு செய்ய வேண்டியது இல்லை.
- மகசூல் அதிகரிக்கிறது.

## மா, எலுமிச்சையில் பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கும் முறைகள்

**மாமரம்:**

மாவில் பின்பருவ வகைகளில் (லேட் வெரைட்டீஸ்) தற்பொழுது பிஞ்சுகள் காணப்படும். மாவில் பிஞ்சுகள் உதிர்வது இயல்பு. எல்லாப் பிஞ்சுகளும் பழமானால் மரம் தாங்காது. ஆனால் மிகுதியான பிஞ்சுகள் உதிர்ந்தாலும் விளைச்சல் பாதிக்கும். பிஞ்சுகள் உதிர்வதைத் தவிர்ப்பதற்கு நாப்தலின் அசிட்டிக் அமிலம் (என்.ஏ.ஏ) எனும் வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 மி.கிராம் வீதம் (20. பி.பி.எம்) கரைத்துப் பிஞ்சுகள் பட்டாணி அளவில் இருக்கும் பொழுதும், நெல்லிக்காய் அளவில் இருக்கும் பொழுதும் தெளிக்க வேண்டும். நாப்தலின் அசிடிக் அமிலம் கிடைக்காதபோது பிளானோபிக்ஸ் மருந்தை 4½ லிட்டர் நீரில் 2 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கலாம். 100 மில்லி லிட்டர் பிளானோபாக்ஸ் மருந்தின் விலை சுமார் ரூ.25/-

**எலுமிச்சை:**

எலுமிச்சையில் பிஞ்சுகள் உதிர்வது இயற்கை. அதுவும் கோடையில் எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினாலும் ஓரளவு பிஞ்சுகள் உதிர்ந்து விடும். பிஞ்சுகள் அதிகமாக உதிர்வதைத் தடுக்க 2, 4, 5-டி எனும் வளர்ச்சி ஊக்கியை, ஒரு லிட்டருக்கு 20 மில்லி கிராம் எனும் அளவில் கரைத்து பிஞ்சுகள் மிளகுப்பருமனில் இருக்கும் பொழுது தெளிக்கலாம். 100 மில்லி கிராம் 2, 4, 5-டியின் விலை சுமார் 50 ரூபாய் ஆகும்.

**தகவல் :**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை**

**ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை**

**அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.**

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி வகைகள்.

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

தமிழரசு









